# திட்டம்

## மாத இதழ்

மலர் : 46
இதழ் : 9

மே 2015
வைசாக – ஜேஷ்ட 1937



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**


கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.


**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 10.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.100.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.180.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.250.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை,
சென்னை 600 006.
தொலைபேசி: 2827 2382



இந்தியாவில் கல்விசார் சுற்றுலா : நேற்று, இன்று, நாளை
– அர்ச்சனா குமார் மற்றும் திவ்யாங்ஷு குமார்

சுற்றுலாத் துறையில் தொழில்முனைதல் செயல்படுவதற்காக ஊடுருவும் பரப்பளவு
– பேராசிரியர் ஜி. ஆஞ்சநேய சுவாமி

செல்வமகள் சேமிப்பு கணக்குத் திட்டம்
– கே.என். ஸ்ரீனிவாசன்

இந்திய பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாவின் பங்கு மற்றும் அவை சார்ந்த நிலைமைகள்
– பிரேம் சுப்ரமணியம்

இந்தியாவில் சுற்றுலாவிற்கு உகந்த சூழல்
– ரத்ன தீப் பானர்ஜி

இந்தியச் சுற்றுலாவை எளிதாக்கும் இ-விசா
– நானு பாஸின், நவ்நீத்குமார்

மருத்துவச் சுற்றுலா இந்தியாவில் நிலவும் போக்குகள் "உதயமாகும் புதிய தொழில்"
– டாக்டர் ஹரிஹரன்

உள்கட்டமைப்பு வசதிகளும், சுற்றுலா வளர்ச்சியும்
– மனோஜ் தீக்ஷித்

# இந்தியாவில் கல்விசார் சுற்றுலா : நேற்று, இன்று, நாளை

– அர்ச்சனா குமாரி மற்றும் திவ்யாங்ஷு குமார்

பழங்காலத்திலிருந்தே தெற்காசிய நாடுகளுக்கான ஒரு முக்கிய கல்வி மையமாக இந்தியா விளங்கி வந்துள்ளது. தட்சஷீலம், நாளந்தா மற்றும் விக்ரம்ஷிலா பல்கலைக்கழகங்கள் அறிவின் பெட்டகமாக விளங்கி, நாட்டிலுள்ள மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் பிற நாட்டு மாணவர்களுக்கும் மிகவும் விருப்பப்பட்ட கல்வி மையங்களாக விளங்கின. இப்படி புகழ்மிக்க கல்வி மையமாக விளங்கிய மையங்களும் கல்விசார் சுற்றுலாவும் இன்று பின்தங்கி, இந்தியா ஒரு முக்கிய கல்வி மையமாக விளங்குவதற்கு கட்டப்படுகிறது. ஆனாலும் இந்தியாவில் கல்வித்துறையும், சுற்றுலாத்துறையும் பெரும் வளர்ச்சி கண்டுள்ள நிலையில் பொதுவாக உலகளவில் ஒரு முக்கிய கல்விசார் மையமாக விளங்க வாய்ப்பு உள்ளது, குறிப்பாக அண்டை நாடுகளுக்கு.

இதைப்பற்றி நாம் யோசிக்கும் முன் கல்விசார் சுற்றுலா என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்! “கல்விசார் சுற்றுலா என்பது, கல்வி கற்கும் மக்கள் ஒரு குழுவாக ஒரு இடத்திற்கு சென்று அந்த இடம் சார்ந்த சிறப்புக் கல்வியையும், அனுபவங்களையும் பெறுவதாகும்” (பாட்ஜர் 1998, P.28). இப்படி கல்விக்காக சுற்றுலா செல்வது புதிதல்ல. சில சிந்தனையாளர்களின்படி இது மேன்மேலும் வளரக்கூடியதுதான் (ஜிப்சன், 1998 ; ஹோல்டுநாக் மற்றும் ஹாலண்டு, 1996). உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் அடையக்கூடிய கல்வித் துறைசார் சுற்றுலாவின் பயனை இந்தியாவும் உணர்ந்து உலகெங்கிலுமிருந்து மாணவர்களை ஈர்க்க பெரும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இந்த பணியில் இந்தியாவிற்கு உண்டான சாதகமான நிலைமைகள் வருமாறு :

இந்தியா உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாகும்.

இந்தியா ஒரு பெரிய சுற்றுலா மையமாக உருவாகி வருகிறது.

பல வளர்ந்த நாடுகளைவிட இந்தியாவில் தங்குவது மலிவாக உள்ளது.

இந்தியாவில் பல சிறந்த கல்வி நிலையங்கள் உள்ளன. அவைகளில் நல்ல உள் கட்டமைப்பு வசதிகளும் வாய்ப்புக்களும் உள்ளன.

வளர்ந்த நாடுகளுக்கு திறன்மிகுந்த தொழிலாளர்களை வழங்குவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது.

சாதகமான இந்த சூழ்நிலைகளை கவனிப்பதற்குமுன், பண்டைய காலத்தில் இந்தியா மிகச் சிறந்த கல்வி மையமாக உலகத்தை ஈர்த்ததற்கான காரணங்களை முதலில் பார்ப்போம்.

## புகழ்மிக்க கடந்த காலம்

பண்டைய இந்தியாவில் தட்சஷீலம் மற்றும் நாளந்தா பல்கலைக்கழகங்கள் தவிர பிற சிறந்த பல்கலைக்கழகங்களும் இருந்தன. அவைகளாவன; பீஹாரில் ஓடந்தபுரி (சிர்கா 550–1040) வங்க தேசத்தில் சோமபுரா (குப்தர்கள் காலத்திலிருந்து மொகலாயர் காலம் வரை), வங்கத்தில் ஜகத்தாலா (பாலா காலத்திலிருந்து மொகலாயர் காலம் வரை), ஆந்திர பிரதேசத்தில் நாகர்ஜூனகொண்டா, பீஹாரில் விக்ரமஷீலா, (சிர்கா 800–1040), இன்று காட்மீர் என்று கருதப்படும் மாநிலத்தில் சாரதாபீடம், குஜராத்தில் வாலாபீ (மைத்ரக் காலத்திலிருந்து மொகலாயர்கள் ஆக்கிரமிப்பு வரை), உத்தரபிரதேசத்தில் வாரனாசி (8வது நூற்றாண்டிலிருந்து இன்று வரை), தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், கர்நாடகாவில் மான்யாகேதா, ஒரிஸ்ஸாவில் புட்பகிரி மற்றும் ரத்னகிரி, இலங்கையில் சுனித்ரதேவி பிரிவென்னா புத்த கல்வி மையம் (சிர்கா 1415 கி.பி.யில் நிறுவப்பட்டது).

**அர்ச்சனா குமாரி** உதவி பேராசிரியர், ஜம்மு மத்திய பல்கலைக்கழகம்
**திவ்யாங்ஷு குமார்** உதவிப் பேராசிரியர், இந்திய ஊடகத் தொடர்பியல் நிறுவனம் (IIMC)

ஆனால், இவைகள் எல்லாவற்றிலும் மிகவும் பிரபலமானதும் மாணவர்களால் விரும்பப்பட்டதாகவும் தட்சஷீலா (கி.மு. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து கிபி ஐந்தாவது நூற்றாண்டுவரை) மற்றும் நாளந்தா (427லிருந்து 1197 வரை) பல்கலைக்கழகங்கள் விளங்கின. தட்சஷீலா பல்கலைக்கழகம் மூன்று பிரபலமானவர்களின் முகவரியாக இருந்தது சாணக்கியர், சந்திரகுப்தர் மற்றும் சரகர். இங்குதான் சாணக்கியர் தன்னுடைய பிரபலமான பொருளாதாரம் மற்றும் அரசியல் பற்றிய புத்தகம் "அர்த்த சாஸ்திரத்தை எழுதினார்". இந்தியாவின் மிகச்சிறந்த பேரரசர் சந்திர குப்த மௌரியர் இங்கு கல்வி பெற்றார். "சரக சம்ஹிதா" என்ற நூலை இயற்றிய ஆயுர்வேத மருத்துவர் சரகர் இங்குதான் பயின்றார். சாதாரணமாக ஒரு மாணவர் 16 வயதில் தட்சஷீலா பல்கலைக்கழகத்தில் சேருவார். அங்கு வேதங்கள் தவிர 18 கலைகளும் அதாவது வில் வித்தை, மிருகங்களை வேட்டையாடுதல், யானைப்பயிற்சி, சட்டம், மருத்துவம் மற்றும் இராணுவ அறிவியல் கற்பிக்கப்பட்டது. தட்சஷீலா வேதம் சார்ந்த கல்விக்கு மட்டும் பெயர் பெற்றதல்ல. பௌத்த வழிமுறைகள் சார்ந்த கல்விக்கும் மிகச்சிறந்து விளங்கியது. இங்குதான் மஹாயான பௌத்த சிந்தனை உருவெடுத்தது.

ஒரே இடத்தில் பல துறைக்கல்வி பெறும் இந்த அரிய காரணத்தால் கவரப்பட்டு உலகெங்கிலுமிருந்து அறிவை நாடி இங்கு வந்தனர். அந்த காலக்கட்டத்தில் இந்தியாவின் அண்டை நாடுகளிலிருந்த புத்த மதத்தினர் வழிபாட்டிற்காகவும் பௌத்தம் சார்ந்த கல்விக்காகவும் இந்தியாவிற்கு கட்டாயம் வரவேண்டிய நிலை இருந்தது. இதைப்போன்ற மதம் சார்ந்த கல்வி மட்டு மல்லாமல் இங்கு பல வகையான திறமைகள் கற்றுக்கொடுக்கப்பட்டதால் இந்த கல்வி நிலை யங்களுக்கு மிகுந்த செல்வாக்கு காணப்பட்டது.

இதே போன்றுதான் நாளந்தா பல்கலைக்கழகமும் சிறந்து விளங்கியது. மகத நாடு மிகவும் செழிப்பாகவும், கல்வி கேள்விகளில் சிறந்தும் விளங்கியது. அங்கு அறிவு ஜீவிகளுக்கு பெரும் ஆதரவு இருந்தது. இங்கு பௌத்தம் மற்றும் பிற மதங்கள் சார்ந்த கல்விகள் ஒருங்கிணைந்து அளிக்கப்பட்டன. ஆகவே, ஒரு முழுமையான கல்வி இங்கு கிடைத்தது. இங்கு மாணவர்கள் தங்கிப்படித்தார்கள்; சுமார் 2000 ஆசிரியர்களும், 10000 மாணவர்களும் இருந்தனர் என்று சரித்திர ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இங்கிருந்த ஆசிரியர்களின் பேரறிவும் கல்வி அளிக்கும் முறையும் சீனா, கொரியா, ஜப்பான், திபெத், மங்கோலியா, துருக்கி, இலங்கை மற்றும் பல தென் கிழக்காசிய நாடுகளின் மாணவர்களை ஈர்த்தது. இந்த மாணவர்கள் இங்கிருந்த சூழ்நிலைப்பற்றியும், கல்வி அளிக்கும் முறை, கட்டிடங்களின் கலை நயம் மற்றும் பல்கலைக்கழகத்திலிருந்த ஒரு சிறந்த வாழும் முறை ஆகியவை பற்றி விளக்கியுள்ளனர். குறிப்பாக, இந்த பல்கலைக்கழகத்தைப் பற்றி சீன அறிஞர் யுவான் சுவாங் விவரமாக எழுதி யிருக்கிறார்.

மேற்கூறப்பட்ட விவரங்களிலிருந்து போக்கு வரத்தும் தொலை தொடர்பும் மிகவும் குறைவாக இருந்த காலக்கட்டத்தில் இந்த புகழ்மிக்க பல்கலைக்கழகங்களுக்கு உலகெங்கிலுமிருந்து மாணவர்கள் வந்ததைப் பற்றி ஆராயும் போது கீழ்க்கண்ட உண்மைகள் வெளிப்படுகின்றன:

இந்தியாவில் பல மதங்களும் பல பண்பாடு களும் இணைந்திருந்ததால் மத மற்றும் பண்பாடு சம்பந்தப்பட்ட படிப்புகள் உலக மக்களை ஈர்த் தன.

மதம் மற்றும் பண்பாடு சார்ந்த கல்வி மட்டுமல்லாமல் வெளிநாட்டினர் பல வகை யான திறன்களையும் கற்க விரும்பினர்.

இங்கிருந்த ஆசிரியர்களின் அறிவும், திறனும் உள்நாட்டினரையும் வெளிநாட்டினரையும் இந்த பல்கலைக்கழகங்களுக்கு ஈர்த்தன.

கல்வி மட்டுமல்லாமல் இங்கிருந்த சூழ்நிலையில் அரிய கற்கும் முறை, இயற்கையோடு இணைந்த சூழல் ஆகியவை உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்தன.

இந்த பல்கலைக்கழகங்கள் பல ஆட்சியாளர் களின் கீழ் நீண்ட காலத்திற்கு செயல்பட்டு வந்ததால் அவற்றின் பெருமை பன்மடங்கு உயர்ந்தது.

## இன்றைய நிலைமை

இன்று இந்தியாவில் சுற்றுலா தொழில் பெரிய அளவில் வளர்ந்துள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் ஆண்டு அறிக்கையின்படி 2012

–13ல் இந்தியாவின் மொத்த உற்பத்தி அளவில் இதன் பங்கு 6.88 சதவிகிதமாக இருந்தது. அதே கால கட்டத்தில் இத்துறையினால் ஏற் பட்ட வேலை வாய்ப்பு 12.36 சதவிகிதமாகவே இருந்தது. 1990–2011 ஆகிய ஆண்டுகளுக் கிடையே சுற்றுலாத்துறையினால் நாட்டின் மொத்த உற்பத்தி அளவிற்கு ஏற்பட்ட பங்கு 229 சதவிகிதம் உயர்ந்தது. அடுத்த பத்து ஆண்டுகளில் இதன் வளர்ச்சி ஆண்டுக்கு 7.7 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2011ல் வெளியிடப்பட்ட ஒரு முன் ஆய்வில் உலக போக்குவரத்து மற்றும் சுற்றுலா கவுன்சில் உலகெங்கும் இத்துறையின் வளர்ச்சி 2011–2021 ஆண்டுகளில் ஆண்டுக்கு 8.8 சதவிகிதமாக இருக்கும் என்று கணக்கிட்டது. இந்த அறிக்கையில் மிக வேகமாக வளரும் சுற்று லாத்துறை கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவிற்கு ஐந்தாவது இடம் கிடைத்தது.

ஆனாலும் இப்படி விரைவாக வளரும் சுற்றுலாத்துறையில் கல்விசார் சுற்றுலாவின் பங்கு எவ்வளவு என்ற கேள்வி நிலைக்கிறது. இந்தக் கேள்விகளை பார்ப்பதற்கு முன் 2014ல் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி கூட்டமைப்பின் கல்வி சார்ந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள சில தகவல்களை நாம் ஆராய்வோம் :

ஆசிய நாடுகளிலிருந்து வெளி நாடுகளுக்கு சென்று உலகெங்கும் பயிலும் மாணவர்களின் சதவிகிதம் மொத்தத்தில் 53 சதவிகிதமாக உள்ளது. இதில் பெருமளவில் மாணவர்கள் சீனா, இந்தியா மற்றும் கொரியாவிலிருந்து செல்கிறார்கள்.

உயர் படிப்புகளை பொறுத்த மட்டில் வெளி நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளில் பயிலும் மாணவர்களின் சதவிகிதம் 48ஆகவும் வட அமெரிக்காவில் 21 சதவிகிதமாகவும் ஆசியாவில் 18 சதவிகிதமாகவும் உள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் தங்கள் நாடுகளை விட்டு வெளிநாடுகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்து 1975ல் 8 லட்சமாக இருந்தது 2012ல் 45 லட்சமாக உயர்ந்துள்ளது. இது ஐந்து மடங்கு அதிகமாகும்.

மேற்கண்ட காரணங்களை பார்க்கும் போது ஆசிய பகுதி, அதிலும் குறிப்பாக இந்தியாவிலிருந்து மாணவர்கள் வெளி நாடுகளுக்கு செல்வதுதான் அதிகமாக உள்ளது. மற்ற நாட்டு மாணவர்கள் வருவது இங்கு குறைவே. ஐரோப்பிய நாடுகளுக்கு மாணவர்கள் ஏன் அதிக அளவில் செல்கிறார்கள் என்பதை பார்க்கும் போது, இந்நாடுகளில் கல்வி, பண்பாடு, சமூக மற்றும் அரசியல் உறவுகள் மற்ற நாடுகளோடு மேற்கொள்ளப்பட்டு அங்கு உயர் கல்விக்கு உலகளாவிய அனுமதி அளிக்கப்பட்டு, போக்கு வரத்து செலவும் குறைவாக இருப்பது காரணமாக அறியப்பட்டது. உயர்திறன் பெற்ற வர்கள் உலகில் எங்கும் வேலை செய்யும் வாய்ப்பு உள்ளதாலும் உயர் கல்வி பெறும் போதே உலகளாவிய அனுபவம் பெறும் சூழ்நிலையும் ஐரோப்பிய நாடுகளில் கல்வி பெற ஊக்கமாக அமைந்துள்ளது."

உலகளவில் மாணவர்கள் சென்று படிப்ப தற்கு மற்றொரு காரணமும் உண்டு : "ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்வது இப்போது மிகுந்துள்ளது. வளர்ந்த நாடுகளில் உயர் கல்விக்கு உலகளாவிய பங்கும் வளர்ச்சியும் ஏற்பட்டிருப்பதற்கு காரணம், மக்கள் வெளிநாட்டிற்கு சென்று படிப்பது மட்டுமல்லாமல் தங்கள் நாடுகளிலேயே பெருமளவு பிற பகுதிகளுக்கு சென்று படிக்கும் ஆர்வம் மிகுந்திருப்பதுமாகும்". ஐரோப்பிய நாடுகளிலும் கிழக்காசிய நாடுகளிலும், மற்ற வளர்ந்த நாடுகளிலும் பெருமளவு மாணவர்கள் சென்று படிப்பதற்கு முக்கிய காரணம், ஆசிய பசிபிக் நாடுகள் இடையேயான நெருங்கிய உறவும், ஐரோப்பிய நாடுகளுக்கு உள்ளும் வெளியும் உள்ள நெருங்கிய ஒத்துழைப்பும் காரணங்களாகும். (யுனெஸ்கோ, 2009).

வெளிநாடுகளுக்கு சென்று படிக்கும் மாணவர்களில் இந்தியாவிற்கு இரண்டாவது இடம் உள்ளது. (5.8 சதவிகிதம்). இந்திய மாணவர்களில் 45 சதவிகிதத்தினர் அமெரிக் காவிலும் 17 சதவிகிதத்தினர் பிரிட்டனிலும், 6 சதவிகிதத்தினர் கனடாவிலும், 5 சதவிகிதத்தினர் ஆஸ்திரேலியாவிலும் கல்வி பயில்கிறார்கள்.

குறிப்பாக இந்தியாவிலும், பொதுவாக உலகெங்கிலுமுள்ள கல்விசார் சுற்றுலா பற்றிய மேற்கண்ட கருத்துகளை ஆய்வு செய்யும் போது கீழ்க்கண்ட நிலைமைகள் தெளிவாகின்றன :

இப்போதுள்ள கல்விசார் சுற்றுலா சூழ் நிலையில் இந்தியாவிலிருந்து 5.8 சதவிகிதத்தினர்

கல்விக்காக வெளிநாடு செல்கின்றனர். இதனால் உள்நாட்டு சுற்றுலா நிலைமை பாதிக்கப்படுகிறது.

வெளிநாடுகளுக்கு செல்வதைவிட உள் நாட்டின் பிற பகுதிகளுக்கு சென்று படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. மற்ற நாடுகளுடன் கல்வி, பண்பாடு, சமூக மற்றும் அரசியல் உறவுகளை வளர்த்துக் கொள்வதன் மூலமும், போக்குவரத்து செலவை குறைப்பதன் மூலமும், கடவுக் கொள்கைகள் தாராளமயமாக்கப்படுவதாலும் ஒரு நாட்டில் கல்விசார் சுற்றுலா வளர்ச்சி அதிகமாக வாய்ப் புள்ளது.

இதனால் ஒரு பக்கம் இந்திய மாணவர்கள் வெளி நாடுகளுக்கு சென்று படிக்கும் நிலைமை இருந்தாலும் உள் நாட்டிலேயே பிற இடங்களுக்கு சென்று படிக்கும் நிலைமை மிகப்பெரிய அளவில் உள்ளது. சுற்றுலா அமைச்சகத்தின் 2015ஆம் ஆண்டு அறிக்கையின் படி 2013ல் உள் நாட்டு சுற்றுலாவின் எண்ணிக்கை சுமார் 114 கோடியே 50 லட்சமாக இருந்தது. இது 2012ஆம் ஆண்டைக்காட்டிலும் 9.59 சதவிகிதம் அதிகமாகும். கிராமப்புறங்கள் மற்றும் சிறிய ஊர்களிலிருந்து பெரு நகரங்களுக்கு மக்கள் தங்கள் குழந்தைகளை கல்வி பெற அனுப்புகிறார்கள். அதுவும் மக்களுடைய பொரு ளாதார வலிமையை சார்ந்ததாகும். ஆனாலும், நாம் இந்தியாவில் கல்விசார் சுற்றுலா என்று சொல்லும்போது வளர்ந்து வரும் இந்தியாவில் கல்விக்காக வரும் சுற்றுலா பயணிகள் பற்றித்தான் குறிப்பிடுகிறோம். 2012ஆம் ஆண்டறிக்கையின்படி இந்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் இந்த வகையான சுற்றுலாவிற்கு எந்தவொரு சிறப்பு சலுகையும் அளிக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்திய அரசு இந்தத் துறையிலான சுற்றுலா பற்றி சரியாக அறிந்து கொள்ளவில்லை என்று விளங்குகிறது.

## நல்ல எதிர்காலம்

தற்போது இந்தியாவில் உள்ள கல்விசார் சுற்றுலாவின் நிலைமை தெளிவற்று இருந் தாலும், எதிர்காலம் நன்றாக உள்ளது. உலக அறிக்கைகளின்படி கல்விசார் சுற்றுலாவிற்கு ஏற்ற பல சூழ்நிலைகள் உருவாகி வருவதை நாம் பார்க்கலாம். இந்த சூழ்நிலைகள் இந்தியாவிலும் காணப்படுவதால் இங்கும் கல்விசார் சுற்றுலா வளர வாய்ப்புள்ளது. 2015ஆம் ஆண்டின் சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் அறிக்கையின்படி "மற்ற நாடுகளுடனான இந்தியாவின் தொடர்பு" நம் நாட்டிலுள்ள பன்முகமான பண்பாடுகளையும், மொழிகளையும், உணவு பழக்க வழக்கங்களையும், நடைமுறைகளையும், கலை மற்றும் கை வேலைப்பாடுகளையும் சார்ந்திருக்கின்றன என்று கூறுகிறது. கடந்த சில ஆண்டுகளில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும் இந்தத் துறையின் பயன் படுத்தப்படாத வாய்ப்புகள் மிகவும் மிகுந்து காணப்படுகின்றன." என்று கூறப்பட்டுள்ளது.

## இந்தியாவில் கல்விசார் சுற்றுலாவின் வளங்கள்

இந்தியாவில் உள்ள பெருமளவிலான சுற்றுலாசார் வளங்களை நாம் கல்விசார் சுற்றுலாவுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். அவைகளில் சில பண்பாடு அல்லது சரித்திரம் சார்ந்த சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா அல்லது இயற்கைசார் சுற்றுலா, கிராமப்புற சுற்றுலா, மருத்துவ சுற்றுலா ஆகியவை. இது அல்லாமல் நமது பல்கலைக்கழகங்களில் பல வகையான மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டங்கள் உள்ளதால் வெளிநாட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் இந்தியாவில் சில காலம் இருக்க வாய்ப்புகள் உள்ளது. கல்வி சுற்றுலாவுக்கு பயன்படுத்தப்படக்கூடிய வகைகளாக பண்பாடு மற்றும் சரித்திரம் சார்ந்த கலைகள் மற்றும் கைவினைப்பொருட்கள் கட்டிடக்கலை, மொழி, தொல் இயல் ஆய்வு, இசை, நடனம் ஆகியவைகளை கொள்ளலாம். சுற்றுச்சூழல்சார் சுற்றுலாவில், 350 வகைகளான பாலூட்டி மிருகங்கள், 408 வகைகளான ஊர்வன, 197 வகைகளான நிலம் மற்றும் நீரில் இருக்கும் உயிரினங்கள், 1244 பறவைகள், 2546 வகைகளான மீன்கள் மற்றும் 15000 வகைகளான தாவரங்கள் உள்ளிட்ட, சுமார் 65000 வகைகளான சுற்றுசூழ் உயிரினங்களை கொள்ளலாம். நம் நாட்டில் 80 தேசிய பூங்காக்களும், 441 சரணாலயங்களும் உள்ளன. அவைகளில் சில ஆசியாவிலேயே மிகப்பெரிய சரணாலயங்களாக உள்ளன. கல்விச் சுற்றுலாவில் மதம் சார்ந்த திட்டங்களும் இருக்கலாம். இந்தியாவினுடைய பல கோயில்கள், பழக்க வழக்கங்கள், மத நம்பிக்கைகள் ஆகியவற்றை ஆராயலாம்.

## இந்தியாவில் கல்விசார் சுற்றுலாவின் சந்தை நிலைமை

இந்தியாவில் தற்போது கல்விசார் சுற்றுலாவுக்கு போதிய சந்தை நிலைமை இல்லாவிட்டாலும், அது உருவாவதற்கான காரணிகள் உள்ளன. 2015ஆம் ஆண்டிற்கான சுற்றுலா அமைச்சகத்தின் ஆண்டறிக்கையில் வெளிநாடு சென்று பயிலும் மாணவர் பற்றி குறிப்பிட்டிருப்பதை இப்போது கவனிப்போம்.

- 2014ஆம் ஆண்டு இந்தியாவில் வெளிநாட்டு பயணிகள் வருகை 10.6 சதவிகிதம் உயர்ந்தது. இது உலகளவிலான வெளிநாட்டு பயணங்களின் வளர்ச்சி விகிதமான 4.7 சதவிகிதத்தைவிட மிகவும் அதிகமாகும்.

- பாடம் பயிற்றுவிக்கும் மொழியை சார்ந்தே எந்த நாட்டில் படிக்க வேண்டும் என்று ஒரு மாணவர் முடிவு செய்வார். ஆங்கிலம் போன்ற உலகளவில் பரவியுள்ள மொழியை கற்பிக்கும் நாடுகளுக்கு மாணவர்கள் அதிகம் சென்று படிப்பார்கள்.

- தற்போது செய்தி பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் காணப்படும் பன்னாட்டு உயர் கல்வி அளிக்கும் நிறுவனங்களின் தரவரிசையின் பேரில் மாணவர்கள் எந்தக் கல்வி நிறுவனம் சிறந்தது என்று கணித்து அங்கே செல்கிறார்கள்.

- கல்விக்காகும் செலவு மாணவர்கள் எங்கே சென்று படிக்கிறார்கள் என்பதை நிர்ணயிக்கிறது. ஆனால் அதுவே முடிவான கருத்து அல்ல. அதிகமான படிப்புச் செலவு இருந்தாலும் நல்ல கல்வி நிலையத்தில் சேர்ந்து படித்து அதனால் நல்ல பதவி நிலைமை லாபம் அடைவதையே பன்னாட்டு மாணவர்கள் விரும்புவார்கள்.

- கடந்த சில ஆண்டுகளில் பல வளரும் நாடுகள் வெளி நாட்டினர் தங்கள் நாடுகளுக்கு வந்து தங்குவதற்கான அனுமதி முறைகளை தளர்த்தியிருக்கிறார்கள். இதனால் பன்னாட்டு மாணவர்களுக்கு ஊக்கம் கிடைத்துள்ளது. இதனால், இந்த நாடுகளில் பன்னாட்டு மக்கள் அதிகமாக படித்து திறம் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையும் உயர்கிறது. ஆகவே, ஒரு நாட்டிற்குள் வெளி நாட்டவர் சென்று வசிக்கும் சூழ்நிலையும், கல்விக்கான கட்டணமும், பன்னாட்டு மாணவர்கள் எங்கு சென்று பயில்கிறார்கள் என்பதை நிர்ணயிக்கும்.

- பன்னாட்டு மாணவர்கள் வெளிநாடு சென்று படிக்க மற்றும் சில காரணிகள்: ஒரு குறிப்பிட்ட கல்வி நிலையத்தில் அதற்குண்டான உலக தரம் அல்லது ஒரு குறிப்பிட்ட படிப்பிற்கான உலகத்தரம்; பட்டம் பெறுவதற்கு பல வகையான மற்றும் பல கால கட்ட படிப்புகளை மேற்கொள்ளும் வசதி ; வெளிநாட்டு பட்டப்படிப்புகளுக்கான பன்னாட்டு அங்கீகாரம், சொந்த நாட்டில் உயர் கல்வி கிடைக்காத நிலைமை; சொந்த நாட்டில் பல்கலைக் கழகங்களில் சேர கெடுபிடியான நிலைமை, நாடுகளுக்கிடையேயான பூகோள, வர்த்தக மற்றும் சரித்திரம் சார்ந்த உறவுகள்; வரும் காலங்களில் வேலை வாய்ப்புகள்; பண்பாடு சார் ஆர்வங்கள் மற்றும் ஒரு நாட்டில் பயின்றதற்கான கல்விப் பயன்களை தங்கள் நாட்டில் பயன்படுத்திக் கொள்ள ஏதுவான அரசு செயல்முறைகள் ஆகியவைகளாகும்.

மேற்கண்ட காரணங்களை ஆராயும்போது இந்தியாவில் பல நகரங்களில் ஆங்கிலம் கல்வி மொழியாக இருப்பதை நாம் பார்க்கலாம். இந்தியாவில் நல்ல கல்வி நிலையங்களுக்கும் குறைவில்லை. அங்கு படிக்க ஆகும் செலவும் மிகவும் குறைவு. வெளி நாடுகளில் பரவலாக இந்தியாவில் கல்வி பெற்ற மருத்துவர்களும் பொறியாளர்களும் பணிபுரிவதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம். மேலும் இந்தியாவில் வந்து தங்கி படிக்க வெளிநாட்டு மாணவர்களுக்கு கடுமையான சட்டங்கள் ஏதும் இல்லை. ஆனால், இங்கு அளிக்கப்படும் பட்டங்கள் தரமானதாக கருதப்படுவதில்லை. அது மட்டுமல்லாமல் மாணவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களை அவர்கள் நாட்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் பரிமாற்றம் செய்யும் வழிமுறைகள் இல்லை. இப்படிப்பட்ட குறைகளை நாம் களைந்து வெளிநாட்டு மாணவர்களுக்கு அனைத்து சலுகைகளையும் வழங்கினால், இந்தியா மிகச்சிறந்த கல்விசார் சுற்றுலா மையமாக விளங்கும் என்பது திண்ணம். ●

# சுற்றுலாத் துறையில் தொழில்முனைதல் செயல்படுவதற்காக ஊடுருவும் பரப்பளவு

– பேராசிரியர் ஜி. ஆஞ்சநேய சுவாமி

பொருளாதார வளர்ச்சிக்கான தீர்வுகளைத் தேடும் பொருளாதார அறிஞர்கள் மற்றும் கொள்கை உருவாக்குபவர்கள் இறுதியாக மக்களின் உள்மன உந்துதல் மற்றும் தொழில்முனைவு நோக்கம் என்ற புள்ளியில் வந்து நிற்கின்றனர். மூல வளங்களின் ஆற்றல் அல்லது அவற்றின் விநியோகம் எப்படி இருந்தாலும் அவை ஒரு தொழில்முனைபவரால் எவ்வாறு நியாயமாகப் பயன் படுத்தப்படுகின்றது என்பதுதான் முக்கியமானதாகின்றது. எனவே ஒரு தொழில்முனைபவரை மாற்றத்துக்கான ஏஜென்ட் மற்றும் மாற்றத்தை உருவாக்கும் கிரியாவூக்கி எனச் சொல்வதே பொருத்தமானதாக இருக்கும். தொலைநோக்குப் பார்வை, உந்துதல் மற்றும் திறமை ஆகியவைகள் உள்ளவர்களாக தொழில்முனைவோர்கள் கருதப்படுகின்றார்கள். வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றை சமுதாய மேம்பாட்டுக்குப் பயன்படுத்துபவர்கள் என்றும் இவர்கள் அறியப்படுகின்றார்கள். தொழில்முனைவோர்கள் மூலவளங்களுக்குப் பொருளாதார மதிப்பைத் தருகின்றார்கள். பீட்டர் ட்ரக்கர் குறிப்பிட்டதை இங்கு எடுத்துக்காட்டலாம். ”யாரோ ஒருவர் பயன்பாட்டைக் கண்டறியும் வரை ஒவ்வொரு கனிமமும் மற்றொரு பாறையாகும், ஒவ்வொரு தாவரமும் மற்றொரு விதையாகும்” என்பதாகும். *(பீட்டர் ட்ரக்கர் 2009ல் எழுதி வெளியிட்டு உள்ள ”புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதல்” என்ற நூலில் இருந்து இந்த மேற்கோள் எடுக்கப்பட்டு உள்ளது).* ”தங்களது இடையறாத முயற்சிகளால் இவர்கள் மூலவளப் பொருட்களுக்கு தேசநலன் என்ற பரிமாணத்தைச் சேர்க்கிறார்கள் என்று ஜியார்ஜ் கில்டெர் சொல்கிறார்,” *(இந்த மேற்கோள் ஜியார்ஜ் கில்டெர் 1984ல் எழுதிய ”தொழில் உலகத்தின் ஆன்மா” என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டு உள்ளது).*

**சுற்றுலாத் துறையில் தொழில்முனைதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி**

மேயர் மற்றும் பால்டுவின் இருவரும் இவ்வாறு கூறி உள்ளனர், ”பொருளாதார நிலைமைகள் சாதகமான சூழலில் இருந்தாலும் அதன் இயல்பான விளைவாக வளர்ச்சி என்பது தானாகவே ஏற்பட்டு விடாது. இதற்கு ஒரு கிரியா ஊக்கி அல்லது ஏஜெண்ட் தேவை. மேலும் தொழில்முனைவு நடவடிக்கையும் தேவை”. *(மேயர் மற்றும் பால்டுவின் இருவரும் இணைந்து 1957ல் எழுதிய பொருளாதார வளர்ச்சி என்ற நூலில் இருந்து இந்த மேற்கோள் எடுக்கப்பட்டு உள்ளது.* இந்தப் பின்னணியில் சுற்றுலா என்பது ஒரு தொழிலாக உருவாகி உள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் சுற்றுலாத் தொழில் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி பெற்று வருவதையும் குறித்துக் கொள்ள வேண்டும். சேவைத் தொழிலில் சுற்றுலா மிகச்சிறந்த பிரிவு என்பது நிரூபிக்கப்பட்டு உள்ளது. குறைவான மூலதனத் தேவை, வர்த்தகத்தை நிறுவுவதில் எளிமை போன்ற அம்சங்கள் இதற்கு உதவி உள்ளன.

எனவே, சுற்றுலாப் பிரிவுகள் ஒப்பீட்டு ரீதியில் தொழில்முனைவிற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாகவே உள்ளது. அதாவது சுற்றுலா செல்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பலவகையான வாய்ப்புகளை கணக்கில் கொண்டு பார்த்தால் இந்த உண்மை தெரிய வரும். சுற்றுலா மற்றும் அது சார்ந்த பிரிவுகள் என ஒட்டுமொத்த துறையிலும் பரந்து விரிந்துள்ள அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் சுற்றுலா தொழில்முனைவு என்பது உள்ளடக்கி உள்ளது. போக்குவரத்து, ஹோட்டல் மற்றும் உணவு விநியோகம், பயண ஏஜென்சிகள், சுற்றுலா ஆப்பரேட்டர்கள், பொழுதுபோக்கு, கலை மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, அவற்றைச் சந்தைப்படுத்துதல்,

**பேராசிரியர் ஜி.ஆஞ்சநேயசுவாமி,** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள மேலாண்மைப் புலத்தின் சுற்றுலாத் துறையில் பேராசிரியராக உள்ளார்.

கருத்தரங்குகள் / நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், பூங்காக்கள் மற்றும் இதர பொழுதுபோக்கு இடங்களின் நிர்வாகம் போன்றவையும் இதில் அடங்கும்.

சுற்றுலா தொழில்முனைவு பற்றிய நூல்கள் மற்றும் ஆய்வுகளைத் தொகுத்துப் பார்த்தால் இதுபற்றிய கருத்தாக்கங்களும் நடைமுறை உதாரணங்களும் புலப்படும்.

1. மேயர் மற்றும் பால்டுவின் 1957ல் எழுதிய "பொருளாதார வளர்ச்சி" என்ற நூல்.

2. டேவிட் சி.மெக்கில்லாண்டு 1961ல் எழுதிய "பொருளாதார சாதனைக்கு ஊக்கப்படுத்துதல்" என்ற நூல்

3. ஜார்ஜ் கிள்டர் 1984ல் எழுதிய "தொழில் உலகத்தின் ஆன்மா" என்ற நூல்

4. டெட் சில்பெர்பெர்க் 1995ல் எழுதிய "சுற்றுலா மேலாண்மை" என்ற நூல்

5. அலிசன் மோரீசன் 1999ல் எழுதிய "விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் பொழுது போக்கு சார்ந்த தொழிலில் தொழில்முனைவு" என்ற நூல்

6. பெஸ்பரூவா 1999ல் எழுதிய "சுற்றுலா தற்போதைய நிலைமையும் எதிர் கால வாய்ப்புகளும்" என்ற நூல்

7. ஹைதி டாலெஸ் மற்றும் கரின் பிராஸ் இணைந்து 1999ல் எழுதிய " சுற்றுலா மற்றும் சிறிய அளவு தொழில்முனைவோர்கள்" என்ற நூல்

8. ஆன்ட்ரூ டர்ன்புல் 2002ல் எழுதிய "கனவுகள், திட்டங்கள் மற்றும் கோட்டைகள்" என்ற நூல்

9. ரஸ்ஸல் மற்றும் பில் ஃபாக்னெர் 2004ல் எழுதிய "தொழில்முனைவு குழப்பமும் சுற்றுலாப் பிரிவின் வாழ்வுச்சுழல் சக்கரமும்" என்ற நூல்

10. ஸ்டீபன் பால் 2005ல் எழுதிய "விருந் தோம்பல், ஓய்வு, விளையாட்டு – சுற்றுலாவில் தொழில் முனைவின் முக்கியத்துவம்" என்ற நூல்

11. மெலோடி போத்தா மற்றும் பலர் இணைந்து 2006ல் எழுதிய "சுற்றுலாவில் தொழில்முனைவோர்" என்ற நூல்

12. நாதன் கே ஆஸ்டின் 2007ல் எழுதிய "பாரம்பரிய இடங்களை நிர்வகித்தல்" என்ற கட்டுரை

13. பீட்டர் ட்ரக்கர் 2009ல் எழுதிய "புத்தாக்கமும் தொழில்முனைவும்" என்ற நூல்

14. ரோஸ்லின் ஸ்டீபன் ஜே.பேஜ் மற்றும் ஜோவோ அட்டெல் ஜேவிக் 2009ல் எழுதிய "சுற்றுலா மற்றும் தொழில்முனைவு: சர்வதேச நோக்குகள்" என்ற நூல்

15. அஞ்ஜன் பூயன் 2010ல் எழுதிய "அசாமில் சுற்றுலா தொழில்முனைவு" என்ற நூல்

16. கிளாஸ் வைர்மாயர் மற்றும் பலர் இணைந்து 2010ல் எழுதிய "புத்தாக்கமும் தொழில்முனைவும்: சுற்றுலாவில் வெற்றிக் கான உத்திகளும் செயல்முறைகளும்" என்ற நூல்

17. ராஜேந்திர பால் 2010ல் எழுதிய, "சுற்றுலாவும் தொழில் முனைவுக்கான ஊக்கமும்" என்ற நூல்,

18. பிராண்டன் கொனே 2012ல் எழுதிய "வார்ரன் பீட்டர் டாம்லின்சன்" என்ற நூல்

19. அமட்டா மாவலோ மத்தியாஸ் 2013ல் எழுதிய. "சுற்றுலாவில் தொழில்முனைவு" என்ற நூல்

20. ஹியூக்ஸ் செராஃபின் 2013ல் எழுதிய "ஹைதியின் ஊரகப் பகுதியில் மீட்டெடுப்பு மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான ஒரு உந்துத லாக சுற்றுலாவில் தொழில்முனைவு" என்ற நூல்

போன்ற நூல்களில் இருந்து இத்தகைய விஷயங்களை நாம் தொகுத்துக் கொள்ள முடியும். இந்த நூலாசிரியர்கள் சுற்றுலா மற்றும் அது சார்ந்த தொழில்களில் தொழில் முனைதல் பற்றிய பல்வேறு பரிமாணங்களைப் பற்றி அலசி ஆராய்ந்து உள்ளார்கள். இந்த நூல்கள் குறிப்பிட்ட பிராந்தியம் குறித்தும் அந்தப் பிராந்தியம் / நாடுகளில் உள்ள குறிப்பிட்ட சுற்றுலா சார்ந்த தொழில்முனைவு நடவடிக்கைகள் ஆகியவற்றை நூலின் மையக் கருத்தாகக் கொண்டுள்ளன.

### புத்தாக்க சுற்றுலா விளைபொருட்கள் இந்திய சுற்றுலாத் துறையில் எதிர்கால வளர்ச்சிக்கான திறவுகோல்

புத்தாக்க சுற்றுலா விளைபொருட்கள் என்பவை இந்தியா சுற்றுலாத் துறையில் நீடித்து இருக்கவும் வெற்றி பெறவும் தேவைப்படும் முதன்மைத் திறவுகோல்

என்ற உண்மையை மீண்டும் வலியுறுத்தத் தேவை இல்லை. சுற்றுலாத் துறையின் வெளிப்படையான பரவலான பலன்கள் தெரிந்தாலும்கூட இந்திய சுற்றுலாத் துறையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல அரசு மற்றும் அதன் துறைசார்ந்த ஏஜென்சிகளின் முயற்சிகள் திருப்தி தருவதாக இல்லை. கடந்த பல பத்தாண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் புதிய சுற்றுலா தலங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதன் விளைவாக தற்போது உள்ள சுற்றுலாத் தலங்களின் மீதான நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சாலைகள், போக்குவரத்து வாய்ப்புகள் மற்றும் தொலைதொடர்பு வசதிகள் போன்றவற்றில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் முன்னுரிமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைத் தாண்டி சுற்றுலாத் துறையில் வருமானங்கள் அதிக அளவு அதிகரித்து வருகின்றது. எனவே, புதிய விளைபொருட்கள் / சுற்றுலா தலங்களை உருவாக்குவதற்கு இதற்குமுன் இல்லாத அளவு முக்கியத்துவம் தருவதற்கு இதுவே சரியான தருணமாகும். இந்திய சுற்றுலாவை புதிய தளத்துக்குச் செலுத்துவதற்கான சில புத்தாக்க நடவடிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

### தனிப்பட்ட / அதிசயமான (மாயமான) சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்தல்

மேற்குலக நாடுகளில் இயற்கையை மீறிய, தர்க்கத்தைத் தாண்டிய சுற்றுலாத் தலங்கள் அதிதீவிரமாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறு இந்தியாவில் செய்யப்படுவதில்லை. இந்தியாவில் இவ்வாறான மாயம் சூழ்ந்த அதிசயமான சுற்றுலாத் தலங்களை இனிதான் அடையாளம் கண்டு அவற்றைச் சந்தைப்படுத்த வேண்டும். உதாரணமாக அசாமில் ஹாஃப்லாங் அருகில் ஜட்டிங்கா என்ற இடத்துக்கு தொலைதூர நாடுகளில் இருந்து செப்டம்பர் – நவம்பர் காலகட்டங்களில் பறவைகள் ஒவ்வொரு வருடமும் வருகின்றன. அங்குள்ள ஒரு மலைப்பகுதியில் மோதி அவை தற்கொலை செய்து கொள்கின்றன. இது ஒரு புதிர் மற்றும் மாயம்தான். இதே போன்று ஆந்திரப்பிரதேசத்தில் கர்னூல் மாவட்டத்தில் மஹாநந்தி என்ற இடத்தில் உள்ள ஒரு குளத்தில் நீரின் மட்டம் ஆண்டு முழுவதும் ஒரே அளவாகவே உள்ளது. இந்தக் குளத்தின் ஆழம் 1.5 மீட்டர் (5 அடி) ஆகும். இதில் உள்ள அதிசயம் என்னவென்றால் இந்தக் குளத்துக்கு தண்ணீர் எப்படி வருகின்றது என யாருக்கும் தெரியாது. அதுவும் அந்தக் குளத்தில் ஆண்டு முழுவதும் கண்ணாடி போல் சுத்தமாகத் தண்ணீர் அதே மட்டத்தில் எப்படி இருக்கிறது என்பதும் யாருக்கும் தெரியாது. மேலிருந்து பார்த்தால் கீழே கிடக்கும் சிறு நாணயம்கூட தெளிவாகத் தெரியும் அளவுக்கு தண்ணீர் சுத்தமானதாகவும் கண்ணாடி போல தெளிவானதாகவும் எப்படி இருக்கிறது என்ற தெரியாத செய்தி அதிசயத்திற்கு மேலும் ஒரு புதிய பரிமாணத்தைத் தருகின்றது. இன்னொரு மாயம் நிறைந்த தளத்தைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால் அது ராஜஸ்தானில் அல்வார் என்ற இடத்திற்கு அருகில் உள்ள பங்கார் கோட்டையாகும். பேய் உலாவும் இடம் என்று சொல்லப்படுகின்ற தலங்களில் உலகிலேயே இதுவும் முக்கியமான ஒன்றாகும். இக்கோட்டை 1613ல் மதோசிங் என்ற அரசரால் கட்டப்பட்டது ஆகும். பழங்கதை மரபுப்படி பாபா பலுநாத் என்ற சாது கோட்டைக்குள் வாழ்ந்து வந்தார். கோட்டை வளாகத்துக்குள் எந்தக் கட்டிடமும் அவரது வீட்டைவிட உயரமாகக் கட்டப்படக்கூடாது என்பது அவரது ஆணையாகும். அவ்வாறு கட்டப்பட்டு அந்த வீட்டின் நிழல் சாதுவின் வீட்டின்மீது விழுந்தால் கோட்டையே இடிந்து தரைமட்டமாகி விடும். இந்தக் கோட்டையில் விளிம்புப் பகுதிகளில் தற்காலிக வீடுகளை யாரும் பார்க்க முடியாது. அருகில் உள்ள வீடுகள் எதிலும் கூரைகள் இருக்காது. ஏனெனில் ஒரு வீட்டுக்கு கூரை கட்டப்பட்டால் அந்த வீடு இடிந்து விழுந்து விடும் என்ற பொது நம்பிக்கை அங்கு நிலவுகின்றது. அதேபோல் கோட்டைக்குள் மனிதர்கள் யாரும் இரவில் தங்குவதற்கு அனுமதிக்கப் படுவதில்லை. சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு இந்த இடத்துக்கு வந்தவர் எவரும் திரும்பியதில்லை என்றும் சொல்லப்படுகின்றது.

இதேபோன்று இன்னொரு இடமும் இருக்கின்றது. அது மஹாராஷ்டிராவில் ஷானி சிக்னாபூர் என்ற இடமாகும். இந்தக் கிராமத்தில் எந்த வீடுகளிலும் கதவுகளே கிடையாது. பழங்கதை மரபுப்படி

இக்கிராமத்தவர் நம்புவது என்னவென்றால் யார் ஒருவராவது எதையாவது திருடினால், அவர் கடவுளால் தண்டிக்கப்படுவார் என்பதுதான். இந்த நம்பிக்கை நமக்கு இப்போது வேடிக்கை யான ஒன்றாகத் தெரியும்.

இத்தகைய ஆச்சரியமூட்டும் விநோத தலங்கள் சுற்றுலா வளர்ச்சி என்ற பார்வை யில் அளப்பரிய வாய்ப்புகள் உள்ள இடங் களாக இருக்கின்றன. இந்த இடங்களை வளர்த்தெடுப்பதற்கு தொழில்முனைவு தேவைப் படுகின்றது. விளைபொருள் வடிவமைப்பு, போய் வருவதற்கான வசதிகளை மேம்படுத்துதல், தங்குமிடம் மற்றும் இதர சுற்றுலா சார்ந்த வசதிகள் அனைத்தும் இத்தகைய தலங்களில் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய விநோத தலங்கள் ஆர்வம், மாயம் ஆகியவை சூழ்ந்த இடங்களாக முன்வைக்கப்பட வேண்டும். மேலும் அந்தந்த இடங்களின் "நாட்டார் வழக்காறுகள்" வெளிப்படுத்தப்பட வேண்டும். இவை சேர்ந்தால் தனிப்பட்ட விற்பனைக் காரணிகள் (யு.எஸ்.பி) என்றாகும். வழக்கத்துக்கு மாறான இத்தகைய சுற்றுலா தலங்களுக்கு முக்கியத்துவம் தர இதுவே ஏற்ற தருணமாகும். இவை தேசிய/மாநில சுற்றுலா கொள்கைகளில் சேர்க்கப்பட வேண்டும்.

## அதிக அளவில் வெளித்தெரியாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல்

நமது நாட்டின் பரப்பளவு மற்றும் பலவித வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், கண்டறிய வேண்டிய சுற்றுலாத் தலங்களின் எண்ணிக்கை நிறைய உள்ளது தெரிய வரும். இவைகள் தேசிய சுற்றுலா வரைபடத்தில் சேர்க்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள பழவேற்காடு ஏரி, ஆந்திரப்பிரதேசத்தின் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள பறவைகள் சரணாலயம் (சென்னையில் இருந்து 150கிமீ தூரத்தில் உள்ளது), கர்நாடகாவில் உள்ள தங்கும் வசதிகளுடன் கூடிய முப்பானேவின் அழகிய காட்சிகள், புகழ்பெற்ற டாப்சிலிப்பை உள்ளடக்கி இருக்கும் பரம்பிக்குளம் ஈக்கோ சுற்றுலா, மலையேற்றத்திற்கு சிறந்த இடமான தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள மேகமலை ஆகியன சில உதாரணங்கள் ஆகும். இவைகள் அதனளவில் முதன்மை யான சுற்றுலாத் தலங்கள் ஆகும். ஆனால் சுற்றுலாத் துறையில் இவை அதிக அளவில் அறியப்படாத இடங்கள். குறிப்பிட்ட சில சுற்றுலா ஆர்வலர்களுக்கு மட்டுமே இந்த இடங்கள் குறித்து தெரியும். இதே போன்று சுட்டிக்காட்ட வேண்டிய மற் றொரு தலம் ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் அருகிலுள்ள லம்பாசிங்கி ஆகும். ஒட்டுமொத்த தென்னிந்தியாவிலும் ஒவ்வோராண்டும் பனிப்பொழிவு ஏற்படும் ஒரே இடம் இதுவே ஆகும். இது போன்ற பல இடங்கள் நாடு முழுவதிலும் கவனத்துக்கு வராமலேயே உள்ளன.

## அணுகக் கூடிய சுற்றுலாத் துறை

தொழில் உற்பத்திப் பிரிவின் விளை பொருட்களோடு சேவைப் பிரிவுகளின் விளைபொருட்களை ஒப்பிட்டுப் பார்ப்பது முரண்பாடுதான். அதிலும் குறிப்பாக சுற்று லாத் துறையை ஒப்பிடுவது விநோதம்தான். சுற்றுலாத் துறை மாற்றுத் திறனாளிகளின் குறிப்பிட்ட தேவைகளை இன்னமும் நிறைவு செய்யவில்லை. உலகம் முழுவதும் நாடுகளும் பல்வேறு உற்பத்தித் துறைகளும் தொடர்ந்து "அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி" என்ற கோட்பாட்டை செயல்படுத்தி வருகின் றன. பல்வேறு மாற்றுத் திறனாளிகள் குறித்த கரிசனம் நமது நாட்டில் சுற்றுலாத்துறையில் போதுமான அளவு வெளிப்படுத்தப்படவில்லை. ஆர்வமூட்டும் பல இடங்களுக்குச் செல்லுதல், அந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தல், இயற்கையின் பல்வேறுபட்ட அம்சங்களை அனுபவித்தல் ஆகியன மனிதனின் உள்ளார்ந்த இயல்பூக்கமாகும். ஆனால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் இத்தகைய தேவைகள் முறைப்படி தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று கவனம் எடுத்துக் கொள்ளப்படவே இல்லை. உலகில் தோராயமாக 600 மில்லியன் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். சமநிலை மற்றும் சமூகநீதி போன்ற சமுதாயம் சார்ந்த குறிக்கோள்களை நிறைவு செய்தாக வேண்டிய நிலையில் விளைபொருள் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தியில் புதிய முதலீடுகளுக்கு எண்ணற்ற வாய்ப்புகளையும் சுற்றுலாச் சந்தை தன்னகத்தே கொண்டுள்ளது. அணுக எளிதான சுற்றுலாத் துறைக்கான ஐரோப்பிய கூட்டமைப்பானது (இ.என்.ஏ.டி) அணுக எளிதான சுற்றுலா என்பதில் உள்கட்டமைப்பு வசதிகளை புதிதாக உருவாக்கப்படுவதும் மாற்றியமைக்கப்படுவதும் அடங்கும் எனச் சொல்கின்றது. உதாரணமாக: தடை இல்லாத சுற்றுலா தலம், நெருக்கடி இல்லாத போக்குவரத்து, அதிக தரத்திலான சேவைகள்,

நடவடிக்கைகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்றல், அணுகுவதற்கு எளிமை, முன் பதிவு அமைப்பு மற்றும் சேவையை பெறும் நடவடிக்கைகளில் சௌகரியம் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்துப் பிரிவுகளிலும் ஆன்லைன் மூலம் பயணத் திட்டமிடல், முன்பதிவு போன்றவை இப்போது எளிதாகி விட்டது. இதற்கு இணையத்திற்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். இருந்தாலும் பயண முனையங்களிலும் சேரும் இடங்களிலும் வசதிகள் விரும்பத் தக்கவாறு இருக்க வேண்டும்.

### ஏழைகளுக்கு ஏற்ற சுற்றுலா

பிற இடங்களுக்குச் செல்லுதல், மக்களைச் சந்தித்தல், இயற்கைக் காட்சியை கண்டு களித்தல், விதவிதமான சமையலை ருசி பார்த்தல் ஆகியன இயல்பான மனித அகத் தூண்டுதல்கள் ஆகும். இவை பொருளாதார அந்தஸ்து, குடியிருப்பு, பாலினம் மற்றும் வயது ஆகிய வித்தியாசங்களைத் தாண்டி பொதுவானவை ஆகும். எனினும் தெரிந்தோ தெரியாமலோ கடந்த ஆண்டுகளில் இந்திய சுற்றுலா என்பது நகரப்பகுதி பணக்காரர்கள் மற்றும் மேல்தட்டு பிரிவினரைக் கவனத்தில் கொண்டே வளர்ந்து வந்துள்ளது. இந்தப் போக்கு இப்படியே தொடர்ந்தால், "மேல்தட்டு மக்களின் சுற்றுலா, மேல்தட்டு மக்களால், மேல்தட்டு மக்களுக்கான சுற்றுலா!" என்று விரைவில் இவ்வாறு கூற நேரிட்டாலும் வியப்பதற்கு இல்லை. போக்குவரத்து, தங்குமிட வசதி, பிற சேவைகள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் சுற்றுலாவின் அடிப்படை கட்டமைப்பு வசதி பெயரளவில் அபிவிருத்தி அடைந்து இருந்தாலும் கிராமப் பகுதி மற்றும் நகரப் பகுதியாக மாறிக் கொண்டிருக்கும் பகுதிகள் போன்றவற்றில் வசிக்கும் பெரும்பகுதி இந்திய சமுதாயத்தினர் இன்னமும் சுற்றுலா அனுபவம் என்ற வட்டத்துக்குள் வரவில்லை என்பது துரதிருஷ்டவசமானது. தொலைதூரத்தில் உள்ள கிராமச் சந்தைகளில்கூட தொழிலக உற்பத்தி சார்ந்த பொருட்கள் கிடைக்கின்றன. ஆனால் அதேசமயம் சுற்றுலா என்ற விளைபொருள் அனைத்தையும் உள்ளடக்கிய போக்கில் இன்னமும் மேம்பாடு அடையவில்லை என்பது முரணாகத்தான் உள்ளது. சுற்றுலாத் துறைக்கான மிகச்சிறந்த சந்தைகளாக ஊரகச் சந்தைகளும் இதுவரை அறியப்படாத சந்தைகளும் உள்ளன. இதனை "பிரமிட்டின் அடியில் பொதிந்துள்ள அதிர்ஷ்டம்" என்று சி.கே.பிரகலாத் யாரும் சொல்லாத அளவு வார்த்தைகளில் சித்தரிக்கிறார். ஆகவே கிராமச் சந்தைகளைக் கைப்பற்றுவதற்கு இதுவே சரியான தருணமாகும். அணுகுமுறையில் மாற்றம், ஏற்றுக் கொள்ளக்கூடிய செலவில் சுற்றுலா விளைபொருள் மேம்பாடு, கிராமப்புற மக்கள் மனமுவந்து பங்கேற்கவும் ஈடுபடவும் செய்யும் வகையிலான வரவேற்பு போன்ற அம்சங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை ஆகும். ஒரு சில ஆன்மீகப் பயணத் தலங்கள் தவிர்த்து நாட்டில் உள்ள பிற சுற்றுலாத் தலங்கள் அனைத்தும் ஒப்பீட்டு அளவில் குறைவான கிராம சுற்றுலாவாசிகளையே கண்டுள்ளன.

### பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான இன்பச் சுற்றுலா / முன்திட்டமிடப்பட்ட சுற்றுலாத் தொகுப்பு

பள்ளிகள் / கல்லூரிகள் மாணவர்களின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்யும் விதமாக சுற்றுலாப் பயண ஏற்பாட்டாளர் / பயண போர்ட்டல் தங்களது பயணத் திட்டத்தில் ஏதும் வைத்திருக்கவில்லை என்பது ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது. இன்றைய காலகட்டத்தில் ஏறத்தாழ அனைத்து கல்வி நிலையங்களும் குறுகிய கால இன்பச் சுற்றுலா / கல்விச் சுற்றுலா / தொழில்களைப் பார்வையிடும் பயணம் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்கின்றன என்பது யாவரும் அறிந்த ஒன்றுதான். நாட்டின் பரப்பளவு, கல்வி நிலையங்களின் எண்ணிக்கை, அதிகரித்து வரும் மாணவர் சேர்க்கை ஆகியவற்றை வைத்துப் பார்த்தால் மாணவர் சந்தை என்பது மிகப்பெரிய சந்தை என்பது புலப்படும். ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் இந்த மாணவர் சந்தை பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். இந்தச் சந்தை சுற்றுலாத் துறையின் ஒருங்கிணைக்கப்படாத பிரிவைச் சார்ந்த உதிரி நபர்களால் கையாளப்படுகின்றது. தொழில்நிபுணத்துவம் இல்லாத முறையில், பயணத்தில் மாணவர்களின் பாதுகாப்பு, காவல் ஆகியவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் இந்தச் சுற்றுலா கையாளப்படுகின்றது. இதற்கு ஒரு உதாரணம் கூறவேண்டுமானால், ஹைதராபாத்தில் இருந்து சுற்றுலா சென்ற பொறியியல் கல்லூரி மாணவர்கள் 24 பேரின் சோகக்கதையைச்

சுட்டிக் காட்டலாம். பீஸ் நதியில் திடீரென லார்ஜி நீர்மின் நிலையத்தில் இருந்து நீர் வெளியேறியதால் இந்த மாணவர்கள் அதில் மூழ்கி இறந்து போனார்கள். ஏமாற்றுதலும் தொழில் ரீதியாக சுரண்டுதலும் சகஜமாக உள்ளது. மாணவர் பிரதிநிதிகளுடன் சேர்ந்து சுற்றுலாப் பயணத்தைத் திட்டமிடுகின்ற ஆசிரியர்கள் பாதுகாப்பான பயண நிரலை வகுப்பதில் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்கள் அல்லர்.

அதிலும் சிக்கனம், எதிர்பாராத செயல் நிகழ்ந்தால் அதனை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் ஏதும் இல்லாமல் இவர்கள் பயண நிரலை உருவாக்குகிறார்கள். இதன் விளைவாக பேருந்து நிலையங்களிலும் ரெயில் நிலையங்களிலும் பயண நிரலின் குழப்பத்தால் ஏற்படும் பிரச்சனைகள் முகத்தில் வெடிக்கும் கோபத்துடன் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக இருப்பதைப் பார்க்க முடியும்.

## மனிதர் உருவாக்கிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல்

கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதிகள் பல ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு நீண்டு இருந்தாலும்கூட, கடற்கரைச் சுற்றுலா என்பது அதிகம் கேள்விப்படாத ஒன்றாகவே இருப்பது துரதிருஷ்டமானது ஆகும். நம்நாட்டில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கோவாவும், கிழக்குக் கடற்கரையில் பூரி கடற்கரையும் தவிர்த்து நாம் சர்வதேச ரீதியில் பிரபலமான கடற்கரைகளை உருவாக்கவில்லை. கடற்கரை நீளம் முழுக்க பல்வேறு வகையிலான கடற்கரைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். இவை உள்ளூர் / பிராந்திய சந்தைகளை நிறைவு செய்கின்றன. மிகக் குறைந்த முதலீட்டுடன் குறைந்தபட்சம் அரை டஜன் உலகத் தரம் வாய்ந்த கடற்கரை சுற்றுலாத் தலங்களை உருவாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. நீர் விளையாட்டுகள் என்பது கவனத்துக்காக காத்துக் கிடக்கும் மற்றொரு சுற்றுலா விளைபொருளாகும்.

## பொழுதுபோக்கு பூங்காக்கள்

குறிப்பிட்ட மையக்கருத்தில் அமைக்கப்பட்ட பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு பூங்காக்கள் ஆகியன மனிதர் உருவாக்கிய சுற்றுலாத் தலங்கள் ஆகும். இதற்கு நிறைய மூலதனம் தேவைப்பட்டாலும் இத்தகைய பூங்காக்கள் அனைத்து வயது சுற்றுலாவாசிகளுக்கும் பிடித்தமானதாக இருக்கின்றது. அதேபோன்று இல்லாவிட்டாலும், ஏறத்தாழ டிஸ்னிலேண்ட் போன்ற ஒன்றை தற்போதைய வேகத்தில் நமது நாட்டில் உருவாக்க எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அமெரிக்காவில் உள்ள யுனிவர்சல் ஸ்டூடியோக்கள், சென்னை மற்றும் ஹைதராபாத்தில் உள்ள ஸ்டூடியோக்கள் போன்று உருவாக்க நாட்களாகும். திரையுலகக் கவர்ச்சியில் கட்டுண்டு கிடக்கும் மக்களால் இத்தகைய புத்தாக்க முயற்சி நிச்சயம் லாபகரமானதாக மாறும். ஹைதராபாத்தில் உள்ள ராமோஜி பிலிம் சிட்டி இந்த வகையில் பாராட்டுக்குரியது ஆகும். தங்களது சினிமா ஸ்டூடியோக்கள் மற்றம் வளமான திரையுலகப் பாரம்பரியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி மும்பை மற்றும் சென்னையிலும் இதுபோன்று உருவாக்கலாம்.

## செயல்படுவதற்கான நேரம்

சுற்றுலாவைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இத்தகைய அனைத்து புத்தாக்க வர்த்தக வாய்ப்புகளும் பிரகாசமாக உள்ளன என்பது புலப்படும். இந்த மூலவளங்களைப் பயன்படுத்திக் கொள்வது என்பது தொழில் முனைவுக்கான ஊக்கம் மற்றும் மனம் திறந்து சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் கலாச்சாரம் ஆகியவற்றைப் பொறுத்ததாகும். இந்தியாவின் ஆன்மாவான ”விருந்தினர் இறைவனுக்குச் சமம்” என்பதற்கேற்ப செயல்பட்டாக வேண்டும். விளைபொருள் வடிவமைப்பு, அணுகுவதற்கான வசதிகளை மேம்படுத்துதல், தங்குமிட வசதி மற்றும் இதர சுற்றுலா சார்ந்த வசதிகள் சீரமைக்கப்பட வேண்டும் / அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு சுற்றுலா தலமும் அதற்குரிய தனித்தன்மை மற்றும் அழகுடன் இருக்கின்றது. தனிப்பட்ட விற்பனைக் காரணிகளை (யு.எஸ்.பி) கண்டறிவது என்பது ஒரு கலை. தொழில்முனைவு அறிவின் ஒரு செயல்பாடாகவும் இது இருக்கின்றது. மரபார்ந்த வகையில் அடங்காத சுற்றுலா விளைபொருட்கள் மீது போதுமான கவனம் செலுத்த இதுவே சரியான நேரம் ஆகும். இவைகள் மேம்படுத்தப்படவும் வளர்ச்சி பெறவும் தேசிய / மாநில சுற்றுலா கொள்கைகளில் சேர்க்கப்பட வேண்டும். ●

# செல்வமகள் சேமிப்பு கணக்குத் திட்டம்

– கே.என். ஸ்ரீனிவாசன்

இந்திய மக்கள் தொகையில் சற்று ஏறக்குறைய சரிபாதியாக இருக்கும் மகளிருக்கு சமூக பொருளாதார அரங்குகளில் உரிய பங்கு கிடைத்துள்ளதா என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. நமது மகளிர் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்து வருவதுடன் தங்களுக்கென சமுதாயத்தில் தனி இடத்தை வகுத்துள்ளனர். அரசியலிலும் உயர் பதவியை பெற்றுள்ளனர். ஆனால் இத்தகைய மகளிரின் எண்ணிக்கை நமது மக்கள் தொகையில் ஒரு சிறிய சதவீதமேயாகும். பெரும்பான்மையான பெண் மக்களுக்கு உரிய வாய்ப்பும் வசதிகளும் கிடைக்கவில்லை என்பது உண்மையான நிலையாகும். இந்த முரண்பாடான நிலைக்கு நமது பழக்கவழக்கங்களும் கலாச்சார பின்னணியும் காரணிகளாக இருப்பதை மறுப்பதற்கில்லை. எனவே அனைத்து மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு மகளிருக்கு எல்லா சூழலிலும் சரிசமமான வாய்ப்புக்களும் அவர்கள் தெரிவு செய்யும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான உரிமையும் கிடைப்பதை உறுதி செய்வது அவசியமாகும்.

**பின்னணி :** 2011ம் ஆண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய புள்ளி விவரங்கள் சில அதிர்ச்சி தகவல்களையும் அளித்துள்ளது. 0 முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையில் காணப்படும் ஏற்றத்தாழ்வு அச்சம் தரும் உண்மையாக உள்ளதை மறுப்பதற்கில்லை. இந்த புள்ளிவிவரங்களின்படி ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 918 பெண் குழந்தைகளே உள்ளனர். இந்த குறைவான இன விகிதம் நாட்டின் எல்லா பகுதிகளிலும் (ஊரகப் பகுதியானாலும் சரி, நகர் புறங்களானாலும் சரி) காணப்படுகிறது. கவலைத் தரும் இப் போக்கை மாற்றி அமைக்க உடனடி நடவடிக்கை அவசியம் என்பது எல்லா நிலைகளிலும் உணரப்பட்டுள்ளது.

**முன் முயற்சிகள் :** இந்த நிலைமையை மாற்றி அமைக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளையும், முன் முயற்சிகளையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகளைப் பேணவும், கல்வி அறிவு புகட்டவும் வகை செய்யும் 'பேட்டி பச்சாவோ, பேட்டி படாவோ' இயக்கம் 'ஜன்தான்' மற்றும் 'சுகன்யா சம்ரித்தி' கணக்கு போன்ற தேசிய திட்டங்கள் சிலவற்றை பட்டியல் இடலாம். மேலும் நமது திட்டவரைதலில் மகளிர் மேம்பாடு முக்கிய இடம் பெற்று இருப்பதுடன் அணுகுமுறையும், ஆக்கப்பூர்வ செயல்பாடாகவே இருந்து வருகிறது. மகளிரின் நிலையை உணர்த்தும் பணிகளில் அவர்களை அதிகாரப்படுத்தும் முயற்சி கருத்தாக அமைய வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே பெண் குழந்தைகள் பொருளாதார ரீதியில் வலுப்படுத்த வரையப்பட்டதே 'சுகன்யா சம்ரித்தி' கணக்குத் திட்டமாகும்.

**அறிவிப்பு**

2014–15ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சென்ற ஆண்டு சமர்பிக்கப்பட்ட பொழுது பெண் குழந்தைகளின் மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் 'சுகன்யா சம்ரித்தி' கணக்கு என்ற இந்த 'செல்வ மகள் சேமிப்பு' கணக்குத் திட்டத்தை நிதியமைச்சர் அறிவித்தார். இந்த திட்டத்திற்கான அறிக்கை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் தேதி வெளியிடப்பட்டது.

**முக்கிய அம்சங்கள்**

'செல்வ மகள் சேமிப்பு' கணக்குகளை அஞ்சல் அலுவலகங்களிலும், வங்கிகளிலும் தொடங்க இயலும். இந்த சேமிப்பு கணக்கை பெண் குழந்தைகளின் பேரில் அவளது பெற்றோர்களோ, அல்லது சட்டப்பூர்வ காப்பாளரோ தொடங்கலாம். கணக்குத் தொடங்கப்படும் குழந்தையின் வயது உயர்ந்தபட்ச அளவாக 10 ஆண்டுகள் என வரையறை செய்யப்பட்டுள்ளது. எனினும் இந்த ஆண்டு ஒரு வருடம் கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடங்கப்பட்டும் இந்த ஆண்டில் ஓராண்டிற்கு முன் 10 வயது

---

**கே.என். ஸ்ரீனிவாசன்,** கள விளம்பரத் துறை இயக்குநர் (ஓய்வு)

வரை உள்ளவர்கள் இந்த திட்டத்தினால் பயன் பெறலாம். ஒரு பெற்றோர் அல்லது காப்பாளர் உயர்ந்தப்பட்சமாக இரண்டு கணக்குகளைத் தொடங்கிடலாம். ஆனால் ஒரு குழந்தைக்கு ஒரு கணக்குத்தான் அனுமதிக்கப்படும். எனவே ஒரு பெற்றோர் இரண்டு பெண் குழந்தைகளுக்கு 'செல்வ மகள் சேமிப்பு' கணக்கைத் தொடங்கலாம். எனினும் இரட்டைக் குழந்தை பிறந்தால் மூன்றாவது குழந்தைக்கும் இந்த வசதி விரிவுபடுத்தப்படும். இந்த சேமிப்புக் கணக்கைத் தொடங்க குழந்தையின் பிறப்புச் சான்றிதழ், முகவரி நிரூபணம், அடையாளச் சான்றிதழ் ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

**சேமிக்கும் தொகை**

துவக்க சேமிப்பாக குறைந்தபட்சம் ரூ.1000 கட்ட வேண்டும்.

(ஆண்டு சேமிப்புத் தொகையாக குறைந்தபட்சம் ரூ.1000)

அதற்கு மேலாக பணம் செலுத்த விரும்பினால் ரூ.100 அல்லது அதன் மடங்குகளில் தொகையை கட்ட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்த பட்ச அளவாக ரூ.1,50,000/– வரை செலுத்த இயலும். ஆனால் ஒரு மாதத்தில் அல்லது நிதி ஆண்டில் எத்தனை முறை வேண்டுமானாலும் பணத்தைக் கட்டலாம். ஆனால் ஓராண்டில் குறைந்தபட்ச தொகையாக செலுத்தத் தவறும் கணக்கிற்கு அபராதமாக ரூ.50 வசூலிக்கப்படும். கணக்குத் தொடங்கப்பட்டதிலிருந்து 14 ஆண்டுகள் வரை பணம் செலுத்தலாம். இந்தத் தொகைக்கான வட்டி கணக்கில் சேர்க்கப்படும். நடப்பாண்டிற்கு அதாவது 2014–15ம் ஆண்டிற்கு வட்டி விகிதம் 9.1 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கூட்டுவட்டியாக ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடப்படும். ஒவ்வொரு ஆண்டிற்கான வட்டி விகிதத்தை அரசு அறிவிக்கும். விருப்பப்பட்டால் மாதாந்திர அடிப்படையில் வட்டியைப் பெற்றுக் கொள்ளலாம். 14 ஆண்டு காலத்திற்கு இந்தக் கணக்கில் பணம் செலுத்தப்பட வேண்டும். இந்தக் கணக்கிற்கு செலுத்தப்படும் தொகையை ரொக்கமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம். கணக்குத் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து 21 ஆண்டுகளுக்குப் பிறகு இது முதிர்வடையும். 'செல்வ மகள் சேமிப்பு' கணக்குத் தொடங்கும் குழந்தைக்கு பணம் பற்றிய வரவு விவரங்களைத் தெரிவிக்கும் சேமிப்புக் கணக்குப் புத்தகம் ஒன்று வழங்கப்படும். இந்தப் புத்தகத்தில் குழந்தையின் பெயர், காப்பாளர் பெயர் முகவரி, கணக்குத் தொடங்கப்பட்ட தேதி, சேமிப்புக் கணக்கு எண், கட்டப்படும் தொகை போன்ற அனைத்து விவரங்களும் இருக்கும். ஒவ்வொரு முறையும் கணக்கு வைத்திருக்கும் அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது வங்கியிலோ பணத்தைச் செலுத் தும்பொழுது சேமிப்புக் கணக்குப் புத்தகத் தையும் அளிக்க வேண்டும். அதைப் போன்று வட்டியைப் பெறும்பொழுது இப் புத்தகத்தை அலுவலரிடம் தர வேண்டும். இது, பணம் போடுதலையும், பெறுதலையும் பதிவு செய்ய உதவும். கணக்குத் தொடங்கப்படும் குழந்தையின் பெற்றோர்கள் அக் குழந்தைக்கு 10 வயது ஆகும் வரை இந்தக் கணக்கை நடைமுறைப்படுத்தலாம். கணக்கு வைத்திருக்கும் குழந்தை 10 வயதை எட்டும்போது அக் குழந்தையே இந்த சேமிப்புக் கணக்கை கையாளலாம். எனினும் இக் குழந்தையின் கணக்கில் பணம் போடுவது அவரது காப்பாளரின் மூலமாகவே செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் இக் குழந்தை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்து செல்லும்பொழுது இக் கணக்கையும் அப்புதிய இடத்திற்கு மாற்றிக் கொள்ளும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

**வருமான வரி விலக்கு :** 'செல்வ மகள் சேமிப்பு' கணக்குத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்படும் தொகைக்கு வருமான வரிச் சலுகை உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் ஓராண்டில் உயர்ந்த அளவாக ரூ.1.5 லட்சம் செலுத்தலாம். இந்தத் தொகைக்கு வருமான வரி சட்ட பிரிவின் கீழ் சலுகை கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பணம் பெறும் வசதி :** இந்தக் கணக்கிலிருந்து பயனாளி இடையில் பயன் பெற இயலுமா என்ற கேள்வி எழுவது இயற்கையே. செல்வ மகள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் பெண் குறைந்தபட்சம் 18 வயதை நிறைவு செய்யும் பொழுது, இந்தக் கணக்கில் இருந்து, ஓரளவு நிறைவு செய்யும்பொழுது, இந்தக் கணக்கில் இருந்து, ஓரளவு தொகையை எடுத்துக்

## சுகன்யா சம்ரித்தி அல்லது செல்வ மகள் சேமிப்பு கணக்கு அட்டவணை

| ஆண்டு | குழந்தையின் வயது | கணக்கிடும் ஆண்டு | துவக்கத் தொகை | மாதத் தவணை | ஆண்டு பங்களிப்பு | வட்டி 9.1% | இறுதித் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2015–16 | – | 1,000 | 12,000 | 608 | 12,608 |
| 2 | 6 | 2016–17 | 12,608 | 1,000 | 12,000 | 1,805 | 26,413 |
| 3 | 7 | 2017–18 | 26,413 | 1,000 | 12,000 | 3,115 | 41,528 |
| 4 | 8 | 2018–19 | 41,528 | 1,000 | 12,000 | 4,549 | 58,077 |
| 5 | 9 | 2019–20 | 58,077 | 1,000 | 12,000 | 6,119 | 76,196 |
| 6 | 10 | 2020–21 | 76,196 | 1,000 | 12,000 | 7,839 | 96,035 |
| 7 | 11 | 2021–22 | 96,035 | 1,000 | 12,000 | 9,721 | 1,17,756 |
| 8 | 12 | 2022–23 | 1,17,756 | 1,000 | 12,000 | 11,782 | 1,41,538 |
| 9 | 13 | 2023–24 | 1,41,538 | 1,000 | 12,000 | 14,039 | 1,67,578 |
| 10 | 14 | 2024–25 | 1,67,578 | 1,000 | 12,000 | 16,510 | 1,96,088 |
| 11 | 15 | 2025–26 | 1,96,088 | 1,000 | 12,000 | 19,216 | 2,27,304 |
| 12 | 16 | 2026–27 | 2,27,304 | 1,000 | 12,000 | 22,178 | 2,61,481 |
| 13 | 17 | 2027–28 | 2,61,481 | 1,000 | 12,000 | 25,421 | 2,98,902 |
| 14 | 18 | 2028–29 | 2,98,902 | 1,000 | 12,000 | 28,972 | 3,39,874 |
| 15 | 19 | 2029–30 | 3,39,874 | | | 20,252 | 3,72,126 |
| 16 | 20 | 2030–31 | 3,72,126 | | | 23,312 | 4,07,438 |
| 17 | 21 | 2031–32 | 4,07,438 | | | 26,663 | 4,46,101 |
| 18 | 22 | 2032–33 | 4,46,101 | | | 30,332 | 4,88,433 |
| 19 | 23 | 2033–34 | 4,88,433 | | | 34,349 | 5,34,782 |
| 20 | 24 | 2034–35 | 5,34,782 | | | 38,747 | 5,85,529 |
| 21 | 25 | 2035–36 | 5,85,529 | | | 43,563 | 6,41,092 |

**செல்வ மகள் சேமிப்புக் கால அளவு : 21 ஆண்டுகள் எனவே 21 ஆண்டு காலத்தில் கிடைக்கவுள்ள முதிர்வுத் தொகையின் அளவு : ரூ. 6,41,092**

கொள்ளும் வசதி உள்ளது. 18 வயது நிரம்பிய பெண், உயர் கல்வி அல்லது திருமணம் போன்ற செலவிற்காக இந்தக் கணக்கில் இருந்து பணத்தை எடுத்துக் கொள்ளலாம். பணம் தேவைப்படும் பொழுது அதற்கு முந்தைய நிதி ஆண்டில், அக் குழந்தையின் சேமிப்புக் கணக்கில் இருக்கும் தொகையில் 50 சதவீதம் வரை பெற அனுமதிக்கப்படும்.

**கணக்கை முடித்தல் :**

செல்வ மகள் சேமிப்புக் கணக்கு 21 ஆண்டுகளில் முதிர்வு அடையும் வகையில் வரையப்பட்டுள்ளது. அந்த குறித்த காலத்திற்குப் பிறகு, கணக்கு வைத்திருப்பவர் கணக்குப் புத்தகத்துடன், பணத்தைப் பெறுவதற்கான விண்ணப்ப பாரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். ஒருவேளை சேமிப்புக் கணக்கை முடித்துக் கொள்ளாவிட்டால், அந்தக் கணக்கில் உள்ள தொகைக்கு கணக்கை முடித்துக் கொள்ளும் காலம் வரை வட்டி வழங்கப்படும்.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே கணக்கை முடித்துக் கொள்ள வேண்டிய சூழநிலை எழுந்தால் அதற்கும் இந்தத் திட்டம் இடமளிக்கிறது. ஒருவேளை பயனாளி எதிர்பாராத சூழலில் உயிர் இழக்க நேரிட்டால், அந்த துர்பாக்யக் கட்டத்தில் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையும் அதற்கான வட்டியும் காப்பாளருக்கு வழங்கப்படும். இது தவிர பயனாளி உண்மையிலேயே நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அத்தருணத்திலும் இந்த சேமிப்புக் கணக்கை குறித்த காலக்

கெடுவிற்கு முன்னரே முடித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார். ஆனால் அதற்காக தெரிவிக்கப்படும் காரணம் குறித்து அரசு திருப்தி பெற வேண்டும். உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் நோய்க்கான மருத்துவ சிகிச்சை செலவு, போன்ற காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

### செல்வ மகள் சேமிப்பு கணக்கை பொதுமக்கள் நல நிதியத் திட்டத்துடன் ஒப்பு நோக்குதல்

செல்வ மகள் சேமிப்பு கணக்கில் பணம் வைத்திருக்க வேண்டிய கால அளவு 21 ஆண்டுகள் ஆகும். அல்லது பயனாளி 18 வயதிற்குப் பிறகு திருமணம் செய்து கொள்ளும் வயது வரை ஆனால் பொதுமக்கள் நலநிதியத் திட்டத்தில் சேமிக்கப்படும் தொகையை 15 ஆண்டு காலத்திற்கு வைத்திருந்தால் போதுமானது.

இவ்விரு கணக்கிலும் சேமிக்கப்படும் தொகைக்கு அளிக்கப்படும் வட்டி வீதத்தை ஒப்பிட்டால் செல்வ மகள் சேமிப்பு கணக்கிற்கு அளிக்கப்படும் வட்டி வீதம் உயர் அளவாக உள்ளதைக் காணலாம்.

செல்வ மகள் சேமிப்பு கணக்குத் திட்டத்தில், பயனாளி 18 வயதை நிறைவு செய்யும்பொழுது, அவருடைய கணக்கில் உள்ள தொகையில் 50 சதவீதம் வரை உயர்கல்விக்காக பெற்றுக் கொள்ள இயலும். ஆனால் பொது மக்கள் நலநிதியத் திட்டத்தில் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஓரளவு தொகையை அக்கணக்கில் இருந்து எடுத்துக் கொள்ள முடியும். பெண் குழந்தைகளின் நலனை மட்டும் கருத்தில் கொண்டு இவ்விரு திட்டங்களையும் பரிசீலித்தால், செல்வ மகள் சேமிப்பு திட்டம் மேம்பட்டதாக உள்ளது. எனவே பெண் குழந்தை பிறந்தஉடனேயே அக் குழந்தையின் வளமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கல்வி மற்றும் திருமணச் செலவுகளை திட்டமிடும் பெற்றோர்களுக்கு செல்வ மகள் சேமிப்பு கணக்குத் திட்டம் சிறப்பாக அமையும்.

செல்வ மகள் சேமிப்பு கணக்குத் திட்டத்தின் கீழ், சேமிக்கும் தொகையையும், கிடைக்கும் வட்டியையும் கணக்கிடும் வகையில் கீழகண்ட எடுத்துக்காட்டு தரப் பட்டுள்ளது.

ஒரு பெண் குழந்தைக்கான சேமிப்புக் கணக்கு, அந்தக் குழந்தை 5 வயதாக இருக்கும்பொழுது தொடங்கப்படுவதாக கணக்கில் கொள்ளலாம். ஒவ்வொரு மாதமும் அந்தக் குழந்தையின் கணக்கில் ரூ.1000 சேமிக்கப்படுவதாகவும் தற்பொழுது அளிக்கப்படும் வட்டி வீதமான 9.1. சதவீதத்தில் வட்டி அளிக்கப்படுவதாகவும் கொண்டு கணக்கிட்டால் அந்தக் கணக்கு முதிர்வு அடையும்பொழுது கிடைக்கும் தொகை ரூ.6,41,092 ஆக இருக்கும். இந்த சேமிப்புக் கணக்கில் பணம் கட்ட வேண்டிய காலம் 14 ஆண்டுகள் தான். இந்த கால கட்டத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் பயனாளி செலுத்தும் மொத்த தொகை ரூ.1 லட்சத்து 68 ஆயிரம் ஆகும். கிடைக்கும் முதிர்வுத் தொகை ரூ. 6,41,902/– ஆகும். இது இந்தத் திட்டத்தின் பயனை எடுத்துரைக்கும். இதை எடுத்துக் காட்டும் வகையில் கணக்கு (அட்டவணையில்) தரப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறின் செல்வ மகள் சேமிப்புத் திட்டம் பெண் குழந்தையின் வருங்காலத்தை திட்டமிடும் பெற்றோர்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டம் என்று கூறலாம். எளிய நிலையில் உள்ளவர்களும் இந்த சேமிப்புத் திட்டத்தில் பங்கேற்கும் வகையிலேயே இது வடிவமைக்கப்பட்டுள்ளது. மகளிரை அதிகாரப்படுத்தும் முயற்சியில் இது பெரிதும் துணைபுரியும் என்பதை மறுப்பதற்கு இல்லை. சமுதாயத்தில் நிலையான மாற்றங்களை ஏற்படுத்துவதில் மகளிர்தான் முக்கிய பங்காற்ற வேண்டும். அதற்கு அவர்களை அதிகாரப்படுத்துவது அவசியமாகும். எனவே இம் முயற்சிக்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை இன்றியமையாததாகும் மகளிரை அதிகாரப் படுத்துவதிலும், அவர்களின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும், நமது பணியை பன்முகப்படுத்த வேண்டும். இது நமது எல்லோருடைய பொறுப்பாகும். “சிறுதுளி பெரு வெள்ளம்“ என்பதுபோல இந்த சேமிப் புத் திட்டம் மகளிரின் குறிப்பாக இளம் பெண்களின் பொருளாதாரத்தை வலுப் படுத்தும் முயற்சியாக அமையும் என்று எதிர் பார்க்கலாம். ●

# இந்திய சுற்றுலாத்துறையின் வளர்ச்சி ஒரு பார்வை

– முனைவர். கா. செல்வகுமார்,

மக்களின் அறிவும் உலக ஞானமும் சுற்றுலாவால் வளர்கிறது; பிற பகுதிகளில் உள்ள மக்களுடன் தொடர்பு ஏற்பட்டு, ஒற்றுமை உணர்வு வளர்ந்து, வேற்றுமை உணர்வும் பகைமையும் மறைகிறது. சுற்றுலா வளர வளர நாடுகளின் பொருளாதாரமும் முன்னேறுகின்றது. மக்களில் பலர் பல இடங்களுக்குச் செல்வதில் பேரார்வம் காட்டுகின்றனர். அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழிகளில் கழிப்பதுடன், மனச்சோர்வைப் போக்கி, மனநிறைவு கொள்கின்றனர். மேலும் உழைத்து உழைத்து அலுத்துப்போன மக்களுக்குச் சுறுசுறுப்பும், புத்துணர்ச்சியும் ஊட்டக்கூடிய பொழுதுபோக்கு என்பது சுற்றுலாவாகும். வரலாற்று மதிப்பு வாய்ந்த தலங்களும் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களும் திறந்தவெளிக் கண்காட்சியாகவே விளங்குகின்றன. ஆரவாரமிக்க இவ்வுலகில், மனிதர்கள் ஓய்வெடுத்துக்கொள்ளும் பொருட்டும், உடல் நலம் பேணும் பொருட்டும், விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிக்கவும், புனிதத்தலங்களுக்கு யாத்திரை செல்லவும் மற்றும் மருத்துவச் சுற்றுலாவின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக இன்று உருவெடுத்துள்ளது. மேலும் யோகா, தியானம், ஆயுர்வேதம், சித்தா மற்றும் பிற பாரம்பரிய மருத்துவ சிகிச்சைகளையும் பெற பல்வேறு நாடுகளிலிருந்து மருத்துவ சுற்றுலா பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிகின்றனர்.

உலகிலேயே மிக அதிகமான வளர்ச்சியை எட்டிவரும் துறைகளில் முதலிடத்தில் இருப்பது சுற்றுலாத்துறைதான். ஆண்டுதோறும் புதுப்புது இடங்களுக்கு சென்று பார்க்கும் மனிதர்களின் மனோபாவத்துக்கு ஏற்ப புதுப்புது சுற்றுலாத் தலங்கள் உருவாகின்றன. வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சுற்றுலா மிக முக்கியமான துறையாகத் திகழ்கிறது. இந்தியாவின் வரலாற்றை ஆய்வு செய்யும்போது இந்தியாவிற்கு பல்வேறு அயல்நாட்டு பயணிகள் வருகைபுரிந்துள்ளனர். அவர்கள் இந்தியாவின் சிறப்புகளை அயல்நாட்டு பயணிகள் எழுதிய குறிப்புகளில் இருந்து கிடைக்கப்பெறுகின்றது. பல்வேறு ஆட்சியாளர் ஆட்சி செய்தபோது பல்வேறு பயணிகள் வந்ததை அறியலாம். அவைகள் கிரேக்க தூதர் மெகஸ்தனீஸ் சந்திரகுப்த மௌரியர் ஆட்சி காலத்திலும், சீனப்பயணி பாகியான் இரண்டாம் சந்திரகுப்தர் ஆட்சி காலத்திலும், சீனப்பயணி யுவான்சுவாங் ஹர்ஷர் ஆட்சிகாலத்திலும், மெராக்கோ பயணி இபின்தூதா முகமது பின் துக்ளம் ஆட்சி காலத்திலும், இத்தாலிய பயணி பியட்ரோ வேலி ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்திலும், பிரெஞ்ச் பயணி பெர்னியர் ‘லீஜஹான் ஆட்சிகாலத்திலும் மற்றும் இரான் பயணி அல்பரூணி கஜினி முகம்மது ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு வரலாற்று குறிப்புகளை பதிவு செய்துள்ளனர். பண்டை காலத்திலே இந்தியாவிற்கு பயணிகள் மற்றும் அறிஞர்கள் வந்துள்ளனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. தொன்மைமிக்க நினைவுச் சின்னங்களைக் காண்பதும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பார்வையிடுவதும், பல்வேறு பகுதி மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு ஆகியவற்றை அறிய பன்னாட்டுச் சுற்றுலா பயணிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்

பொதுவாக ஆசியாக் கண்டத்திலும் சிறப்பாக இந்தியாவிலும் பல்வேறு நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் சுற்றுலா மையங்கள் பல உள்ளன. அவற்றில் இந்தியாவில் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் இடமாகத் திகழ்வது டெல்லி, ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால், கஜீராஹோ, கொனார்க், அஜந்தா, எல்லோரா, மைசூர், பெங்களூர் ஹலபீடு, பேலூர், சரவண பெல்கோலா, ஹம்பி, மாமல்லபுரம், காஞ்சிபுரம், மதுரை, சிதம்பரம், தஞ்சை பெரிய கோவில், கோவா, கேரளா, ஜெய்ப்பூர், கல்கத்தா, காஷ்மீர் ஹைதராபாத், பாண்டிச்சேரி, சென்னை, கன்னியாகுமரி இலட்சத்தீவு, அந்தமான் நிகோபார் தீவுகள் போன்ற இடங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் வரலாற்று சிறப்புமிக்க பல சுற்றுலா இடங்கள் சிறப்புடையச் செய்கின்றன. அவற்றினுள் மகிழ்ச்சியூட்டும் தட்ப வெப்பநிலை, கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் இயற்கை காட்சிகள், வரலாற்று பண்பாட்டுப் பெருமை, இனிய மணங்குளிரும் வாழ்க்கை வசதிகள் மற்றும் அவ்விடத்திற்கு எளிதில் செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகளை மத்திய மாநில அரசுகள் தனி துறையாக செயல்படுத்தி வருகிறது. அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித்தருகிறது. இதன் மூலம் நம் நாட்டில் வாழும் மக்கள் தமது நாட்டிற்குள்ளேயே சுற்றுப்பயணம் செய்கின்றனர். பன்னாட்டு

**முனைவர். கா. செல்வகுமார்,** உதவிப் பேராசிரியர், அரசியல் அறிவியல் மையம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்,

மக்கள் பல்வேறு நாடுகளிலிருந்து இந்தியாவின் அழகை கண்டுகளிக்கவும் சுற்றுலாத்துறை பல்வேறு சுற்றுலா திட்டங்களை இந்தியாவில் நடைமுறைபடுத்துகிறது. இதன் மூலம் பன்னாட்டு சுற்றுலாவினர் அதிகமானோர் ஒவ்வொரு வருடமும் இந்தியாவிற்கு வருகை புரிகின்றனர்.

சுற்றுலாத்துறை மக்களிடையே நாகரிகம், பண்பாடு, தோழமை உணர்வு ஆகியனவற்றை வளர்க்கிறது. மற்றவர்களின் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், தெரிந்து கொள்ளவும் மனிதன் முயன்றதால்தான், சுற்றுலாவே தோன்றியது எனலாம். சுற்றுலா மனிதனின் பொது அறிவை வளர்க்கிறது; சுற்றுச்சூழலை அறிய உதவுகிறது; பண்பாட்டு பரிமாற்றத்தை வளர்க்கிறது. நாட்டின் கலாச்சாரப் பெருமைகளையும், கலைத்தொழில் மிக்க பொருள்களையும் விற்பனைப் பண்டமாக்குவதன் மூலம் பண்பாடு பரவுகிறது; கலையும் அழியாமல் வளர்கிறது. அதுமட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரமும் தழைத்தோங்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

இன்று சுற்றுலா முக்கியத்துவம் பெற காரணங்கள் உள்ளன. சுற்றுலா சிறப்புமிக்க தொழிலாக மாறிவிட்டது. இன்று வளர்ந்து கொண்டே உள்ள துறையாகவும் விளங்குகிறது. தனிநபர் வருவாய் பெருகியுள்ளது. மக்களுக்கு ஓய்வு நேரமும் அதிகரித்துள்ளது. அறிவியல் முன்னேற்றத்தால் தொலை தூர பயணங்கள் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் பல்வேறு போக்குவரத்து வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் சென்று பார்க்க முடிகிறது. பலதரப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புகளை தருகிறது. பல்வேறு நாட்டு பணிகளால் அந்நிய செலாவணியை நாட்டிற்கு ஈட்டித்தருகின்றன. பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு வழி வகுக்கிறது. கைத்தொழில், கலைத்தொழில் மற்றும் பாரம் பரிய உணவு தொழில்கள் மிகப்பெரிய வளர்ச் சியை ஏற்படுத்துகிறது. பல்வேறு புதிய இடங்களை கண்டுகளிக்க மக்களிடையே மிகப்பெரிய விழிப்புணர்வை உண்டாக்கியுள்ளது. சுற்றுலாவை மையப்படுத்தி பன்னாட்டு விடுதிகள் உள்ளன. சுற்றுலா மையங்களின் மேலாண்மையைப் பயணிகளுக்கு செம்மையாக நடைபெறப் பெருந்துணைபுரியும் நிறுவனம் பயணப்பணி நிறுவனம். அயல்நாடுகளில் தனியார் நிறுவனங்களே இத்தகைய பணிகளை இந்தியாவுடன் இணைந்து செயல்படுத்துகின்றன.

இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் 28.03.1970ல் உருவானது. ஜா குழுவின் (Jha Committee – 1963) பரிந்துரையின் அடிப்படையில் 1965ல் சுற்றுலாத்துறையானது. அவை இந்திய ஹோட்டல் கழகம், இந்திய சுற்றுலாக்கழகம், இந்திய சுற்றுலா போக்குவரத்து நிறுவனம் எனும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து செயல்பட்டது. பின்னர் 1966ல் இம்மூன்று பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு டெல்லியில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் எனும் பெயரில் சுற்றுலாத் துறையின் ஆதரவுடன் செயல்பட ஆரம்பித்தது. சுற்றுலா எனும் தேருக்கு இவர்களே அச்சாணி. இவர்களால் சுற்றுலாத்துறை வளம் பெருகிறது; இவர்களது சேவையால் சுற்றுலாப் பயணியர் எவ்விதச் சிக்கலும் இன்றி இனிமையாக பயணம் செய்ய முடிகிறது. மத்திய அரசு, மாநில அரசம் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து முனைப்புடன் செயல்பட்டால் சுற்றுலாத்துறை மாபெரும் துறையாக தழைக்க முடியும்; சிறக்க முடியும். மேலும் இப்போதெல்லாம் இந்தியாவில் ஒரு சுற்றுலா புகழ் பெற்றுக்கொண்டிருக்கிறது என்றால் அது மருத்துவச் சுற்றுலா!

உலகின் மருத்துவச் செலவை கணக்கிடும் போது இந்தியாவில் மருத்துவச் செலவு மிக மிகக் குறைவு. ஆமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகளில் ஆகும் செலவில் ஐந்தில் ஒரு பங்குதான் இந்தியாவில் செலவாகிறது. உடம்பை மருத்துவரிடம் காட்ட வந்த இடத்துல மாமல்லபுரத்தையும் பார்த்துட்டுப் போகலாம். இதுதான் மருத்துவ சுற்றுலா. இச்சுற்றுலா மிகப் பிரபலமாகி வருகிறது. மருத்துவச் சுற்றுலா இந்திய முன்னேற்றத்தின் அடுத்த மைல்கல்! என்பதில் ஐயம் இல்லை இக்கால மருத்துவச் சுற்றுலா என்றால் சேவை உணர்வுடன் கூடிய வழிகாட்டியாக செயல்படுகிறது. உணர்வுடன் செயல்படும் மருத்துவ ஆன்லைன் மருத்துவ சிகிச்சை முடிந்த பிறகோ அல்லது சிகிச்சையின் இடையிலோ சுற்றுலா தலங்களுக்குச் செல்ல வேண்டும் என விரும்புபவர்களுக்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறது. உலகத் தரம் வாய்ந்த மருத்துவ சேவைக்கு சுற்றுலாத் துறையும் இணைந்து செயல்படுகிறது. இதன் சூழல்கள் மிகப்பெரிய விழிப்புணர்வு ஏற்படுகிறது. இந்திய சுற்றுலா துறையின் வளர்ச்சியும் வேகமும் முன்பு இருந்ததைவிட அதிகரித்து உள்ளது. காலத்துக்கு ஏற்ற வகையில் பல்வேறு மாற்றங்களையும் செய்து சுற்றுலா பயணிகளுக்கு இனிய பயணமாக அமைத்து தருகிறது இந்திய சுற்றுலா துறை. ●

# இந்திய பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாவின் பங்கு மற்றும் அவை சார்ந்த நிலைமைகள்

– பிரேம் சுப்ரமணியம்

இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டிற்கும், எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கக்கூடிய சுற்றுலாசார் சொத்துக்களுக்கு வளம் சேர்க்கும் தன்னுடைய முழு சக்தியை இந்தியாவால் இன்னும் பெற முடியவில்லை.

இந்தியாவின் 12வது ஐந்தாண்டு திட்டத்தில் இது சார்ந்த ஒரு பெரிய மாற்றம் காணப்படுகிறது. அந்நிய செலாவணிக்காகவும், வெளிநாட்டினர் நம் நாட்டிற்கு சுற்றுலாவுக்கு வருவதுமே நம்முடைய சுற்றுலாத் துறையின் முக்கிய கொள்கை என்பதை மாற்றி ஐக்கிய நாடுகளின் உலகளாவிய சுற்றுலா நிறுவனத்தின் நூற்றாண்டு இலக்குகளையும், தொடர்ந்து நிலைக்கக்கூடிய வளர்ச்சி இலக்குகளையும் கொண்டதே சுற்றுலாக் கொள்கை என்ற மாற்றம் காணப்பட்டது.

சுற்றுலாத் துறை வளர்ச்சியினால் நாட்டின் வளர்ச்சி மிக வேகமாகவும், எல்லோரையும் உள்ளடக்கியும், தொடர்ந்து வளர்ச்சி காணும் வகையிலும் இருக்கும் என்று 12வது ஐந்தாண்டுத்திட்டம் கூறுகிறது. அது மட்டுமல்லாமல், ஏழ்மையை அகற்ற இது ஒரு முக்கிய கருவியாகும். ஏழை எளிய மக்கள் உருவாக்கும் பொருள்களுக்கு பொதுச்சந்தையில் போதிய செல்வாக்கு இல்லாத கால கட்டத்தில் மக்கள் தங்களுடைய வீட்டு வாசலுக்கே வந்து பொருள்களை வாங்கக்கூடிய நிலைமையை சுற்றுலா உருவாக்குகிறது. இதனால், இடைத்தரகர்களின் தேவையின்றி மக்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. ஆனால், இந்தியாவில் இந்த வாய்ப்பு நிறைவேற வேண்டுமானால் இந்திய சுற்றுலாத் துறையின் சர்வதேச போட்டித்திறன் வெகுவாக முன்னேற வேண்டும். அதற்குண்டான தடைகள் களையப்பட வேண்டும். வெளிநாட்டவர்கள் வருகை அல்லாமல் இந்தியாவில் உள்நாட்டு சுற்றுலா சந்தை மிகப்பெரிய அளவில் உள்ளது. இந்தியாவின் உள்நாட்டு சுற்றுலா பெருமளவு வளர பல நிலைமைகளை உருவாக்க வேண்டும். பலவற்றின் விலை நிலைமைகளையும் கவனிக்க வேண்டும். உலகளாவிய சில நிலைமைகள் இந்திய நிலைமைக்கு ஒத்துவராது. வெளிநாட்டினர் இந்தியாவுக்கு வருவது பல காரணங்களுக்காக. சிலர், ஆடம்பர அனுபவத்திற்காக, சிலர் எளிமையான அனுபவங்களுக்காக மற்றும் சிலர் ஆன்மீகக் காரணங்களுக்காக. ஆதலால் நம் நாட்டு நிலைமைகளில் புதிய உத்திகளை கையாள வேண்டும். ஆகவே, புதிய சுற்றுலா சார்ந்த சூழ்நிலைகளையும் புதிய இடங்களையும் அங்கு வாழும் மக்களின் ஒத்துழைப்போடு உருவாக்கி பன்னாட்டு சுற்றுலாவை வளர்க்க வேண்டும். இதோடு கூட சுற்றுலா பயணிகளின் சேவைக்கேற்ற உள்நாட்டு மனித வளத்தை உருவாக்க வேண்டும். அது போலவே வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் விளம்பரம் செய்யும் தகவல்களை ஒருங்கிணைத்தும், இந்தியா என்ற ஒரு விளம்பர முத்திரையை உருவாக்க வேண்டும். சுற்றுலா பயணிகள் ஒரு இடத்திற்கு செல்வதற்கு முக்கிய காரணம் மலிவான செலவாகும். ஆகவே, சுற்றுலா பயணிகள் மீது அதிக அளவான வரிகளை சுமத்தக் கூடாது. ஆகவே, உலக நடப்புப்படி சுற்றுலா மீதான வரி இருக்க வேண்டும். நம் நாட்டில் பல சுற்றுலா இடங்களுக்கு பயணிகள் செல்வதும், இந்தியா என்ற விளம்பர முத்திரையை ஏற்படுத்துவதிலும் அரசாங்க துறைகளுக்கிடையேயும் பொதுத்துறை, தனியார் துறைக்கிடையேயும் பலவகையான கூறுபாடுகள் உள்ளன. ஆகவே, ஒரு வெளிப்படையான நன்கு செயல்படும் கொள்கையையும், செயல்பாட்டு முறைகளையும் வகுக்க வேண்டும். ஊக்கம் சார்ந்த திட்டங்களும், இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள பலரை ஒருங்கிணைத்து ஒருமுகமாக செயல்பட வேண்டியுள்ளது. 2012–17க்கான பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக சுற்றுலா அமைச்சகத்திற்கு மொத்த பட்ஜெட் ஆதரவாக ரூ.15,190 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரேம் சுப்பிரமணியம், ஆலோசகர், எர்னஸ்ட் அண்ட் யங் நிறுவனம்

இது அல்லாமல், அத்துறைக்கு உள்வெளி வருவாயாக ரூ.155 கோடி உள்ளது. இந்தியாவின் திட்டங்களும், செயல்பாடுகளும் கிட்டத்தட்ட உலகத்தர அளவில் இருந்தாலும், சுற்றுலாத்துறை பொறுத்த மட்டில் செயல்பாடுகள் மிகவும் மோசமாக உள்ளது.

நிலைமைகளை சரியாக அளந்து புரிந்து கொள்ள வேண்டும் என்பது நல்ல ஆளுமைக் கான உலகளாவிய உண்மையாகும். அளக்க முடியாததை நிர்வகிக்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

சுற்றுலாத்துறை அமைச்சகம் விடுதி களிலுள்ள அறைகளைப் பற்றி கூறியிருப்பதைப் பார்ப்போம். 2013 முடிவில் நாட்டில் அங்கீகரிக் கப்பட்ட 1242 விடுதிகளில் 76858 அறைகள் இருந்தன. 365 நாட்களில் 2 கோடியே 50 லட்சம் அறை வசதிகள் என்று கொள்ளலாம். இது நமக்கு கிடைக்கக்கூடிய அறைகளின் மொத்த எண்ணிக்கையாகும். இந்த காலகட்டத்தில் 70 இலட்சம் வெளிநாட்டு பயணிகளும் 114 கோடியே 70 லட்சம் உள் நாட்டு பயணிகளும் வந்ததாக கூறப்படுகிறது. பன்னாட்டு சுற்றுலா பயணிகள் மொத்தம் ரூ.51,587 கோடி செலவு செய்தன. தனி நபர் ஒருவர் ரூ.73,700 செலவு செய்ததாக கணக்காகிறது. (இந்தியா டூரிசம் ஸ்டாடிஸ்டிக்ஸ் அட் எ கிளான்ஸ் 2013) இந்தத் தகவல்களை அலசிப் பார்க்கும்போது, முறைப்படுத்தப்பட்ட விடுதித்துறையில் பன் னாட்டு சுற்றுலாப் பயணிகள் 20 சதவிகிதத் தினரும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் 0.05 சதவிகிதமும் பயன்படுத்தியதாக தெரிகிறது. இது உண்மையானால், முறைப்படுத்தப்படாத விடுதித்துறையும் ஒழுங்குமுறை திட்டத்தில் சேர்க்கப்பட்டு சுற்றுலாவுக்கு பயனுள்ளபடி செய்ய வேண்டும்.

நம் நாட்டிற்கு வரும் வெளிநாட்டு பயணிகளின் தகவல்கள் சேகரிப்பு சமீபத்தில் மேம்பட்டு இருந்தாலும், மற்ற நாடுகள் தங்களுடைய சுற்றுலா சார்ந்த தகவல்களையும் விளக்கங்களையும் அளிப்பதை பார்க்கும் போது நாம் செய்ய வேண்டியது இன்னும் பல உள்ளது என்பது தெரிய வருகிறது. வெளிநாட்டு பயணிகள் நம் நாட்டிற்கு சுற்றுலாவுக்காக வருவதைப்பற்றிய தகவல்கள் ஒவ்வொரு கட்டத்திலும் சேகரிக்கப்பட்டிருந்தாலும் அவைகள் ஒருங்கிணைக்கப்படாததால் இந்தத் துறையின் மொத்த நிலைமை தெரியாமலேயே உள்ளது. நாம் பல விஷயங்களை தெரியப் படுத்தாமல் மூடி மறைக்கிறோம்.

2012ஆம் ஆண்டின் தகவல்களின்படி நம் நாட்டில் இந்திய தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட நினைவுச் சின்னங்கள் உள்ளன. இவைகளைப் பார்க்க 30 லட்சம் வெளிநாட்டினரும் 4 கோடியே 60 லட்சம் இந்திய சுற்றுலாப் பயணிகளும் அந்த ஆண்டு வந்தார்கள். வெளி நாட்டு பயணிகள் வந்த முக்கியமான பெரிய 10 நினைவிடங்களில் 7 டெல்லியிலும், ஆக்ராவிலும் உள்ளன. மொத்த சீட்டுகள் விற்பனையில் அவை 65 சதவிகிதம் இருந்தன. முதன்முதலாக டெல்லி ஆக்ராவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் இந்த நினைவிடங்களில் 5 முதல் 7 வரை சென்று பார்ப்பார்கள். ஆகவே, தாஜ்மகாலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஆய்வு செய்தால் சுமார் 10 லட்சம் வெளிநாட்டு பயணிகள் இதில் ஏதாவது ஒரு நினைவிடத்திற்காவது வருகிறார்கள் என்று கொள்ளலாம். ஆகவே, டெல்லி ஆக்ராவுக்கு வரும் வெளிநாட்டு பயணிகளின் எண்ணிக்கை நான்கு லட்சத்திற்கு மிகாது. மேலும் மூன்று லட்சம் பேர் ஆக்ராவிற்கு வியாபார ரீதியாக மட்டும் வரும் வாய்ப்புள்ளது. ஆகவே, இந்த பழங்கால நினைவிட சொத்துக்கள்தான் நம்முடைய பாரம்பரியம் என்றால் அங்கு பயணிகள் வருவது ஏன் குறைவாக உள்ளது?

நமக்கு கிடைக்கும் பதில் பரிதாபமாகத்தான் உள்ளது. இந்த நினைவிடங்களுக்கு வரும் பயணிகள் சாப்பிடுவதற்காகவும், பொருள்களை வாங்குவதற்காகவும், மகிழவும் மற்ற பொழுது போக்கான செயல்களில் ஈடுபடவும் வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளது. நம்மிடம் சில திறமையான வழிகாட்டிகள் உள்ளனர். ஆனால் பெரும்பான்மையோர் டெல்லி ஆக்ரா போன்ற இடங்களில் வியாபாரிகள் கொடுக்கும் பணத்திற்காக சேவை செய்வதால் அவர்களின் செயல் தரமாக இருப்பதில்லை. இந்திய தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவனம் இந்த வழிகாட்டிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை எடுத்துக்கொண்டாலும் சிறப்பாக செயல்படவில்லை. நினைவிடங்களை சிறப்பாக அழகு படுத்தவும் தெரியவில்லை. ஒவ்வொன்றின் தனித்தன்மையை புரிந்து கொள்ளாமல் வெறும் புல்வெளிகளை அமைப்பது போன்ற வேலைகளை மட்டும் செய்கிறார்கள். நவீன தொழில்நுட்பத்தால் ஏதாவது மாற்றம்

ஏற்பட்டிருக்கிறதா? டெல்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகமும், ஜோத்பூரிலுள்ள மெஹ ராங்கர் கோட்டை இவை இரண்டையும் ஒரு மாதிரியாக சொல்லலாம் அதாவது சரியாக பராமரிக்கப்படாமல் இருப்பதற்கு ஒரு உதாரணமாக.

இந்தியாவில் ஏதாவது ஒரு ஊரில் வாழும் ஒருவரை, நீங்கள் உங்கள் ஊரிலுள்ள அருங்காட்சியகத்தை கடைசியாக எப்போது சென்று பார்த்தீர்கள் என்று கேட்டால் அதற்கு என்ன பதில் கிடைக்கும்? நான் பள்ளியில் படிக்கும்போது சென்றிருக்கிறேன் அல்லது உறவினர்கள் வெளியூரிலிருந்து வரும்போதுதான் சென்றிருக்கிறேன் என்று கூறுவார்கள். ஆனால், டெல்லியிலுள்ள அட்சர்தாம் கோயில் அந்நகரிலுள்ள அனைவரும் சென்று பார்க்கக்கூடிய அளவுக்கு மிகவும் சிறப்பாக செயல்படுத்த முடியும். பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் சுற்றுலாத்துறைக்கான நிதி பெருமளவில் விளம்பரத்திற்காகவும் பன்னாட்டு சுற்றுலா பொருட்காட்சிகளில் பங்குபெறவும் மக்கள் எந்த நாட்டிலிருந்து வருகிறார்களோ அந்த நாட்டில் அலுவலகங்கள் அமைப்பதற்கும் செலவிடப்படுகிறது. ஆனால், நாம் செலவிடும் பணத்திற்கு ஏற்ற பலன் கிடைக்கிறதா? சுற்றுலா பொருட்காட்சிகளுக்கு போவதற்கு முன் தகுந்த முன் வேலைகள் செய்யப்படுவதில்லை. அங்கு நடப்பதெல்லாம் சாதாரண மக்கள் தொடர்பு வேலைதான். மற்ற நாடுகளிலிருந்து வரும் பயணிகளில் எத்தனை பேருக்கு இந்தியாவில் என்னனென்ன இடங்களை சுற்றிப்பார்க்கலாம் என்பது போன்ற விவரங்களை வெளியீட்டாக கொடுக்கிறார்கள்? எப்பொழுதெல்லாம் ஒரு குழு புறப்பட இருக்கிறது, எத்தனை பேர் அதில் பங்கு கொள்ளலாம், அந்த பட்டியலை மாற்றமுடியுமா? இதையெல்லாம் செய்கிறார்களா?

தொலைக்காட்சியில் விளம்பரம் செய்யும் போது அதை நாம் யாருக்காக செய்கிறோம். தொலைக்காட்சியில் விளம்பரம் செய்வதால் நாம் நிதியை எளிதாக செலவிடமுடியும். இதனால் என்ன பலன் ஏற்பட்டது? கூடுதலாக எத்தனை பேர் வந்தார்கள்.

நம்முடைய வலைதளங்கள் நல்ல நிலை மையில் உள்ளதா? அவைகள் மூலம் பயணம் செய்பவர்கள் வர்த்தகம் செய்ய முடியுமா? நம்முடைய சமூக வலைதளங்கள் எவ்வளவு சிறப்பாக இயங்குகின்றன? நாம் ஊடகங்களுக்கு கொடுக்கும் சலுகைகள் வலைதள குழுமங்களுக்கு கொடுக்கப்படுகிறதா? இந்த வலைதள குழுமங்களுக்காகவே தாய்லாந்தில் ஒரு மாநாடு நடக்க இருக்கிறது அவர்களெல்லாம் எப்படி நவீன மயமாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டாமா?

நம் நாட்டிற்கு வரும் பயணிகள் அந்தந்த நாடுகளில் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள்? அதன் உட்பிரிவுகளின் தன்மை என்ன, அவர்களோடு நாம் நல்ல வியாபார தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறோமா? கேரளாவுக்கும் கோவாவுக்கும் வரும் வெளிநாட்டு பயணிகளையும், அவர்கள் செலவு செய்யும் விதத்தையும், அதனால் பயன்பெறுபவர்களையும், வேலை வாய்ப்புகளையும் ஆய்வு செய்தால் வெளிநாட்டவரை ஒரு குழுவாக அழைத்து வருவதற்கு பதிலாக தனித்தனியாக அணுகி உற்சாகப்படுத்தினால் அதிக பலன் கிடைக்கும். கோவாவில் மூலதனம் மிகுந்த மிக வசதியான விடுதிகளை அமைத்ததால் ஏற்பட்ட பின் விளைவுகளை நாம் கவனிக்க வேண்டும். பிறகு உச்ச சுற்றுலா மாதங்களில் சாதாரண தங்குமிடங்களை அமைத்து ஒரு வகையாக சமாளித்தார்கள். இதனால் கோவா மிகவும் மலிவான சுற்றுலா இடமாக மாறி இந்த சுற்றுலாத்துறையினால் ஏற்படும் தீய விளைவுகளான குற்றங்கள், போதை மருந்து பழக்கம் மற்றும் விபச்சாரம் பெருகியுள்ளது. கேரளாவில் முன்பு இருந்ததுபோல் வெளி நாட்டவர் வந்து தங்கும் மொத்த நாட்களில் இரண்டு நாட்கள் அங்கு செலவிடுவதை மாற்றி மொத்த நாட்களையும் கேரளாவிலேயே பல இடங்களுக்கு சென்று பார்ப்பதற்காக ஏற்பட்ட மாற்றம் பல பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அமைந்துள்ளது. கேரளா நடத்தும் வெளி நாட்டு பயணிகளுக்கான சுற்றுலா பொருட்காட்சிகள் பயனுள்ளதாகவும் நல்ல முன்னுதாரணமாகவும் அமைந்துள்ளது. மழைக்காலங்களில் ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தி அப்போதும் வெளிநாட்டு பயணிகளை ஈர்க்கும் திட்டம் பாராட்டுக்குரியது.

தற்போது மிக அதிகமாக பயணிகள் சீனாவிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள் என்ற நிலையில் அவர்களை இந்தியாவிற்கு ஈர்க்க நாம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம்? லாஸ் ஏஞ்சல்ஸூக்கு பயணிகளை ஈர்க்க

ஏற்றுக்கொண்ட முயற்சிகள் என்ற நேர்காணல் கட்டுரையை http://www.news.lk/news/sri-lanka/item/6880-sri-lanka-tourism-strategy-china-2015 என்ற இணைய தளத்தில் பார்த்தால் மற்றவர்கள் எப்படி ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை கையாள்கிறார்கள் என்று புரியும். நமது பிரதமர் சமீபத்தில் இலங்கைக்கு சென்றிருந்தபோது அவர்கள் இராமாயணம் சார்ந்த ஒரு சுற்றுலா திட்டத்தை எப்படி செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதை தெளிவாக விளக்கினார்கள். நம்முடைய திட்ட செயல்பாடுகள் ஒரு பொருளை குறிப்பிட்டிருக்கிறதே ஒழிய ஒரு சந்தையை குறிப்பிடுவது அல்ல.

இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக பாதுகாப்பு மிகவும் குறைந்துள்ளதால் தேசிய தலைநகர் பகுதிக்கு ஓய்வுக்காக வரும் பயணிகளின் அளவு மிகவும் குறைந்துள்ளது. பொதுவாக கழிவு வெளியேற்றம், பொதுசுகாதாரம் மற்றும் சுற்றுப்புற சுத்தம் சார்ந்த பிரச்சினைகளும் உள்ளன. இந்த பிரச்சினைகளை களைய வேண்டும் என்று பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டமும் கூறுகிறது. டெல்லியில் நகராட்சியின் உதவியுடன் ஃபாட் லோகந்வாலா அவருடைய சீரிய முயற்சியில் டெல்லியில் பொது கழிவறைகளை மேம்படுத்தும் திட்டத்தை ஒரு நல்ல உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அமிர்கானை பயன்படுத்தி தொலைக்காட்சியில் செய்யப்பட்ட சுற்றுலா பயணிகள் சார்ந்த விளம்பர முயற்சி பயனுள்ளதாக இருந்தாலும் மக்களிடையே பெரிய மாறுதல் ஏற்பட்டதாக தெரியவில்லை. சமூக ஊடகங்களை பயன்படுத்தி இந்த பிரச்சாரத்தை மேலும் பலப்படுத்தலாம். சுற்றுலா பயணிகள் பயன்படுத்தும் பொருள்களை நல்ல வகையில் அவர்களுக்கு கிடைக்கும் வண்ணம் செய்யும் முயற்சிகளால் விவசாயிகள் பெரும் பயனடைவார்கள். இந்த அணுகு முறையை பயன்படுத்தி கேரளாவில் குடும்பஸ்ரீ முயற்சியாலும் ரோஜர் லேங்பௌர் அவர்களின் பிரெஞ்சு விவசாயத் தோட்டங்கள் மற்றும் சுரிந்தர் புவிந் ஃபளாண்டர்ஸ் என்பவருடைய முயற்சியின் மூலமும் தரமான பொருட்களை சுற்றுலா பயணிகளுக்கு அளித்தது போன்ற முயற்சிகளை பன்மடங்காக செய்ய வேண்டும்.

சுற்றுலாத் துறையால் ஏற்படும் பயன்கள் என்னவென்றால், தொலைதூர பகுதிகளிலும், கிராமப்புற பகுதிகளிலும் குறைந்த உள் கட்டமைப்பு வசதி உள்ள பகுதிகளிலும் பொருளாதார நடவடிக்கைகளை ஏற்படுத்தி பலவகையான திறமைகளை கொண்டவர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதியில் நல்ல வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும். இதைக் கூட பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டு திறம் மேம்பாட்டுக்கான நல்ல அமைப்பு ஏற்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த திறம் மேம்பாட்டு திட்டங்களுக்கு மானியமும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அவை பெருமளவில் செயல்படும்போது கிராமப்புற விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். சுற்றுலாத்துறை அமைச்சகம் UNDP திட்டத்தின் மூலம் 39 கிராமப்புற பகுதிகளில் திறன் மேம்பாடு திட்டத்திற்கு மானியம் அளிக்கப்பட்டு செயல்பட்டது. ஆனால் மானியத்தொகை தீர்ந்து போனபின் அவைகள் செயல்படவில்லை.

சுற்றுலாத்துறை என்பது மிகவும் போட்டி மிகுந்த வியாபாரமாகும். நல்ல சுற்றுலா பயணிகளை கவர சுற்றுலாத் தலங்களைப் பற்றிய நல்ல உணர்வுகள் பிரபலமாக வேண்டும். சுற்றுலாத்துறை என்பது ஏழ்மை என்ற கடலுக்கு நடுவே ஆடம்பரம் என்ற தீவு போன்றது என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதால் இந்தத் துறைக்கு எல்லா மட்டங்களிலும் அதிகமான அளவு வரி விதிக்கப்படுகிறது. இது முறைப்படுத்தப்படவில்லை. உதாரணமாக, ஒரு ஐந்து நட்சத்திர விடுதியில் கேளிக்கையோடு அளிக்கப்படும் உணவுக்கு 40 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. ஆனால் அதற்கு தகுந்த மின்சாரம், தண்ணீர் மற்றும் கழிவு வெளியேற்றும் வசதிகள் கூட இருப்பதில்லை. அதுபோலவே, ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு செல்லும் மகிழுந்து வண்டிகளுக்கு மிக உயர்ந்த வரி விதிக்கப்பட்டாலும் சாலை வசதிகள் போதுமானதாக இல்லை. ஜப்பானியப் பெண் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் பொது இடங்களில் அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டாம் கழிவறைகளை பயன்படுத்த வேண்டாம் என்று அவர்கள் நாட்டில் அறிவுறுத்தப்படுகிறார்கள். உடல் வற்றி அவதிப்படுகிறார்கள்.

இன்றைய சுற்றுலாப் பயணிகள் வருகைக்கு ஏற்ப நம் நாட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இந்தியர்கள் நாட்டிற்குள் சுற்றுலாப் பயணம் செல்வதற்கு பதிலாக அதிகம் வெளிநாடுகளுக்கு செல்வதைப் பார்க்கும் போது இதை நாம் புரிந்துகொள்ளலாம். உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதைப்போலவே திறன்

மேம்பாடும், செயல் மேம்பாடும், தர உறுதியும் மேம்படுத்தப்பட வேண்டும். மேலை நாடுகளைப் போல உள் கட்டமைப்பு வசதி ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைமை அல்லாமல் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்ற அளவில் தற்போது இல்லாத வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நாம் குறிப்பாக இருக்க வேண்டும்.

உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டா ளர்களை சுற்றுலாத் துறைக்கு ஈர்ப்பதில் நல்ல வாய்ப்பு உள்ளது. தற்போது முக்கிய நகரங்களில் கணிணிசார் தொலை தொடர்பு உள்ள வியாபாரம் சார்ந்த விடுதிகளுக்குத்தான் ஆர்வம் அதிகமாக உள்ளது. இந்த தேவையான நிலங்களும் சிதறி உள்ளன. முன்னதாக திட்டமிடப்பட்ட நகரங்களில் பண்பாடு, உணவு, கைவினைப் பொருட்கள் ஆகியவை சார்ந்த அனைத்தும் ஒரு வளாகத்தில் கிடைக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. போடப்படும் வரிகளுக்கு ஏற்ப பொது வசதிகளான வாகனங்களை நிறுத்தும் இடங்கள், கழிவு நீக்கம், தடையில்லா மின்சாரம், சுத்தமான குடிக்கும் நீர், ஆகியவைகள் வழங்கப்பட வேண்டும். இந்த வசதிகள் இருந்தால், ஒரு இடத்தில் சுற்றுலா வசதி மேம்படுவதற்கான அங்கீகாரம் கொடுப்பதில் வேகமாக செயல்பட முடியும். சட்ட பூர்வமான தேவைகளை நாம் முன்னதாகவே செய்து வைத்திருக்க வேண்டும். இப்படிச் செய்தால், புதிய திட்டங்களை செயல்படுத்துவது 25 சதவிகிதம் எளிதாகும்.

எந்தவொரு புதிய அணுகு முறைக்கும் அதற்கு தேவையான செயல்படும் அமைப்பு மிகவும் அவசியமாகும். துரதிஷ்டவசமாக இந்தியாவில் இது நடைபெறவில்லை. மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் தெளிவாக்கப்பட்டிருந்தாலும் மாவட்ட அளவிலான சுற்றுலா கழகங்களை அமைப்பதில் போதிய வெளிப்படையான நிலைமை இல்லை. ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தும் வகையில் திறம்மிகு செயல்பாட்டு அமைப்பு மற்ற நாடுகளைப் போல இந்தியாவில் இல்லை. ஒரு அமைச்சகத்திலிருந்து இன்னொரு அமைச்சகத் திற்கு மாறி மாறி பணி செய்யும் அதிகாரிகள் சுற்றுலா அமைச்சகத்தில் மக்கள் வரிப்பணத்தில் பல இடங்களுக்கு சென்று அனுபவிக்கும் தன்மையை கொண்டிருக்கிறார்களே அன்றி பொறுப்புடன் செயல்படுவதில்லை. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளான கடவு அனுமதி, விமானப்பயணம், சுகாதார நெறிமுறைகள், இறக்குமதி கட்டுப்பாடுகள் போன்ற சேவைகள், உள்துறை, விமானப் போக்குவரத்து, மக்கள் நலம், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் வர்த்தக அமைச்சகங்களின்கீழ் வருவதால் இவர்களுக் கிடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் வலுவாக இருக்க வேண்டும்.

ஒரு நாட்டிற்குள் நுழையும் போது கடவு அனுமதி வழங்கப்படும் நிலைமை மிகவும் நல்லதாகும். தீவிரவாதிகளை தவிர்த்து மற்ற சுற்றுலா பயணிகளை எளிதாக வரவேற்பது அவசியமாகும். ஆனால், காஷ்மீரில் இதற்கு நேர் மாறான நிலைமையை ஏற்படுத்தியதால், சரி செய்ய முடியாத அளவு அழிவுகள் ஏற்பட்டு விட்டன. சமீப காலங்களில் எந்தவொரு முன் ஏற்பாடும் இல்லாமல் புதிய புதிய அணுகு முறைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். அவற்றில் எந்த நாட்டிலிருந்து மக்கள் வருகிறார்கள், போட்டி சூழ்நிலை எப்படி உள்ளது, அவர்களை நாம் எப்படி அணுகுவது மற்றும் எப்படி தொடர்பு கொள்வது என்பனவற்றை எல்லாம் சிந்திக்காமலேயே செயல்படுகிறோம். இவைகளெல்லாம் சுற்றுலாவை வியாபாரப் படுத்த வேண்டியதற்கான முக்கிய அடிப்படை தேவைகளாகும். விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களிடையே சுற்றுலா செல்ல விருப்பம் ஏற்படுத்துவது, அதை செயலில் மாற்றச் செய்வது, வந்த இடத்தில் நல்ல அனுபவத்தை ஏற்படுத்திக்கொடுத்தல், மீண்டும் மீண்டும் அந்த இடங்களுக்கு வரச்செய்தல், மற்றவர்களுக்கு அந்த இடத்தை பரிந்துரை செய்தல் ஆகியனவாகும். ‘வியக்கமிகு இந்தியா’ என்ற பிரச்சாரம் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தியது. மேலே குறிபிடப்பட்டவைகளை நாம் செயல்படுத்த வேண்டும். அப்போதுதான் போதிய அளவு வெளிநாட்டுப் பயணிகள் வருவார்கள். விருதுகள் வாங்குவது போதாது. வெளிநாட்டு பயணிகள் வந்தாக வேண்டும்.

கிரிக்கெட், சினிமாத் துறைகளைப் போலவே சுற்றுலாத்துறையிலும் சுயதம்பட்டம் அடித்துக்கொள்ளும் ‘நிபுணர்கள்’ இருக் கிறார்கள். அவர்கள் திறமையான பணியா ளர்களை மூழ்கடித்துவிடுகிறார்கள். ஆகவே, பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவைகளை செயல்படுத்த பலவகையான திறமைகள் உள்ளவர்களை ஒருங்கிணைத்து ஒரு நல்ல அணுகுமுறையை உருவாக்க வேண்டும். ●

# இந்தியாவில் சுற்றுலாவிற்கு உகந்த சூழல்

– ரத்ன தீப் பானர்ஜி

இந்தியாவின் வளமான பண்பாட்டுச் சூழலும், சமீபத்திய பொருளாதார முன்னேற்றங்களும் உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பைப் பெரிதும் உயர்த்தி உள்ளன. இந்தியக் குடிமக்களும் தமது உபரி வருவாயைக் கொண்டு தமது சுற்றலா விருப்பங்களை நிறைவு செய்ய முன் வருகின்றனர். ஏற்கனவே, புண்ணிய யாத்திரையாகப் பல்வேறு இடங்களுக்குச் சென்றுவருவதும் இந்தியச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடமும் வழக்கமாக உள்ளது. உலகப் பொருளாதார அமைப்பு, தனது 2013ஆம் ஆண்டிற்கான சுற்றுலா மற்றும் பயணப் போட்டி நிலை அறிக்கையில், ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் பண்பாட்டு மரபு பதினொன்றாம் இடத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இயற்கை வளங்களைப் பொறுத்தமட்டில் ஒன்பதாம் இடத்திலும், பண்பாட்டு வளநிலையில் 24ஆம் இடத்திலும் உலக நாடுகளைப் பொருத்த வரையில் சுற்றுலா செல்லத் தேர்வு பெறும் நாடுகளின் வரிசையில் 65ஆவது இடத்திலும் இருப்பதாக அந்த அறிக்கை கூறுகிறது.

நமது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2012–13ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை இந்தியாவின் மொத்த வருவாய் 6.8 சதவீதம் சுற்றுலாத் துறை மூலம் கிட்டியதாகக் கூறியுள்ளது. இதில் நேரடி வருவாய் 3.7 சதவீதம்; மறைமுக வருவாய் 3.1 சதவீதம். வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் சுற்றுலா முக்கியப் பங்காற்றியுள்ளது. மொத்த வேலைவாய்ப்பில் சுற்றுலாத்துறை மூலமாக 4.4 சதவீதமும், மறைமுகமாக 5.8 சதவீதமும் வேலைவாய்ப்புகள் புதிதாக உருவாயின என்றும் பொருளாதார ஆய்வறிக்கை கூறியுள்ளது. பத்து லட்ச ரூபாய் முதலீட்டில், உற்பத்தித் துறையில் 45 பேருக்கு வேலை கிடைக்கும் என்றால், சுற்றுலாத்துறையில் 78 பேருக்கு வேலை கிடைக்கும் என்று சுற்றுலா அமைச்சகம் கூறுகிறது. இவர்களில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் சிறுவியாபாரம் போன்றவை மூலமாக வேலைவாய்ப்புப் பெறுவர் என்கிறது அத்துறை.

### வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அன்னியச் செலாவணி வரத்தும்:

2012ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு 65 லட்சத்து 80 ஆயிரம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்தனர். இந்த எண்ணிக்கை 2013ல் 69 லட்சத்து 70 ஆயிரம் ஆக உயர்ந்தது. 2013ல் இந்தியா வந்த வெளிநாட்டுப் பயணியரில் 91 சதவீதம் பேர் விமானப் பயணமாகவும், சுமார் 0.5 சதவீதம் பேர் கப்பல் பயணமாகவும் வந்துள்ளனர். இவர்களில் 52 சதவீதம் பேர் புதுதில்லி அல்லது மும்பை விமான நிலையம் வழியாகவும் வந்தனர். இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டினரில் முதல் 15 இடங்களில் உள்ளவர்கள், அமெரிக்கா, இங்கிலாந்து, பங்களாதேஷ், இலங்கை, ரஷ்யா, கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், மலேஷியா, ஜப்பான், ஆஸ்திரேலியா, சீனா, சிங்கப்பூர், தாய்லாந்து நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். மொத்த வெளிநாட்டுப் பயணியரில் 70.72 சதவீதம் பேர் மேற்கண்ட 15 நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 2016ஆம் ஆண்டு வரை இந்தியாவின் சுற்றுலாத் தொழில் ஆண்டுக்கு 8% என்ற அளவில் வளர்ச்சி பெறும் என்று ஐ.நா.வின் உலகச் சுற்றுலா அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

இந்தியாவிலேயே பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலா சென்று வந்த குடி மக்களின் எண்ணிக்கை 2012ஆம் ஆண்டில் இருந்ததைவிட 2013ல் சுமார் 9.6 சதவீதம் அதிகரித்தது.

அன்னியச் செலாவணி ஈட்டித் தருவதிலும் சுற்றுலாத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. 2012ஆம் ஆண்டில் 1774 கோடி அமெரிக்க டாலராக இருந்த சுற்றுலாத் துறை மூலமான அன்னியச் செலாவணி வரவு 2013ஆம் ஆண்டில்

---

ரத்ன தீப் பானர்ஜி, சுற்றுலா குறித்து கட்டுரை எழுதும் பத்திரிகையாளர்

1845 கோடி டாலராக உயர்ந்தது. 2016 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வரக்கூடிய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை சுமார் 1 கோடியே 12 லட்சமாக இருக்கும் என்றும் அவர்கள் மூலமாக சுமார் 3000 கோடி டாலர் அன்னிய செலாவணி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் இரண்டு கோடியே 45 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் கணக்கிட்டுள்ளனர்.

### கட்டமைப்பு வசதிகளும் மனித வளமும் :

பெருகி வரும் சுற்றுலா வளர்ச்சிக்கு ஏற்றவாறு கட்டமைப்பு வசதிகளையும் மனித வளத்தையும் பெருக்குவதில் பெருத்த இடைவெளியே நிலவுகிறது. இதனைக் களைய உணவக மேலாண்மை நிறுவனங்கள், உணவு தயாரிப்பு பயிற்சியகங்கள் போன்றவற்றை ஏற்படுத்தி திறன்மிக்க பணியாளர்களைத் தயார்படுத்த வேண்டும். 2010–11ஆம் ஆண்டில் இத்தகைய பயிற்சியகங்கள் மூலமாக 9869 பேருக்கு பயிற்சி அளித்து சான்றிதழ்கள் அளிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது. அந்த அமைச்சகம் நிர்ணயித்திருந்த இலக்கு 5500 பேர் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கென பதினோராம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ.350 கோடி நிதியை, முதல் நான்காண்டுகளிலேயே முழுமையாக அரசு செலவிட்டுவிட்டது. 12ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் ஏழை, எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டங்கள் வரையப்பட்டுள்ளன.

### கூட்டுறவு முறையில் சுற்றுலா வளர்ச்சி

நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இயற்கை வளங்கள், பண்பாட்டு மரபுகள் ஆகியவற்றுக்கு உள்ள சுற்றுலா மதிப்பை அவ்வப்பகுதி மக்கள் உணரச் செய்து, சுற்றுலாவுக்கான கட்டமைப்புகளை அவர்களை கொண்டே உருவாக்கி நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலுவதே கூட்டுறவு முறையிலான சுற்றுலா வளர்ச்சித் திட்டமாகும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் உள்ள கலைவடிவங்கள், கைத்தொழில்கள், கைவினைப் பொருள்கள், பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், பாரம்பரிய உணவுப் பதார்த்தங்கள், போன்றவற்றை அழிந்துபடாமல் தொடர்ந்து பேணிக்காக்கவும் வழி ஏற்படும்.

முக்கியமான பாரம்பரியச் சுற்றுலாத் தலங் களில் பெரும்பாலும் தனியார் முயற்சிகளால் சிலர் மட்டுமே பயன்பெறுகின்றனர். அப்பகுதியில் உள்ள சாதாரண மக்களுக்கு இவ்விஷயம் குறித்துப் போதிய விழிப்புணர்வு இல்லாததால், சுற்றுலா மூலம் கிடைக்கக் கூடிய சமூக பொருளாதார நலன்கள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடைவதில்லை. இந்தச் சூழலில் கூட்டுறவு முறையிலான சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கும்போது, அப்பகுதி முழுவதும் பரவலான வளர்ச்சி ஏற்பட ஏதுவாகிறது. இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளில் கூட்டுறவு முறையிலான சுற்றுலா வளர்ச்சிக்கென ஸ்காட்லாந்து அரசின் பன்னாட்டு வளர்ச்சி நிதியம் வழங்கும் உதவியை நிர்வகிக்கும் பொறுப்பு தனியார் வங்கியின் 'யெஸ்' வங்கியிடம் அளிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வாய்ப்புடைய, மிகவும் பின் தங்கிய பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளையும், திறன்மிகு மனித ஆற்றலையும் வளர்த்தெடுக்கும் முயற்சிகள் தற்போது உத்தரகாண்ட், மேற்கு வங்கம் ஆகிய இரு மாநிலங்களிலும் நிறைவு பெற்றுவிட்டன. இந்த முன்மாதிரிகளைக் கொண்டு இந்தியாவின் பிற பகுதிகளிலும் சுற்றுலாக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகளும் நடைபெறுகின்றன.

இது தவிர சர்வதேச சுற்றுலாப் பயணி களின் இலக்கான இடங்களில் தரமான வசதிகளை ஏற்படுத்த, மத்திய சுற்றுலா அமைச் சகம், ஏனைய அரசுத் துறைகளோடு இணைந்து பல பெருந் திட்டங்களையும் செயல்படுத்துகிறது. இரயில்வே, சிவில் விமானப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை, உணவு பதப்படுத்தும் தொழில்துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகியவற்றோடும் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளோடும் அரசுகளோடும் இணைந்து செயல்படுத்த வேண்டிய 53 பெருந்திட்டங்களைக் கண்டறிந்து அவற்றுள் 35 திட்டங்களுக்கான மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றுவிட்டது. இப்பெருந்திட்டங்கள் யாவுமே, பாரம்பரியம், பண்பாடு, ஆன்மீகம், சூழல் ஆகிய அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியவையாகும்.

## பாரம்பரியச் சுற்றுலா :

இயற்கைப் பாரம்பரியம், பண்பாட்டுப் பாரம்பரியம், வரலாற்றுப் பாரம்பரியம் போன்ற நம் தேசத்தின் பெருமையைப் பறைசாற்றும் இடங்களைச் சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துரைப்பதே பாரம்பரியச் சுற்றுலா. நெடிதுயர்ந்து நிற்கும் கட்டமைப்பு, வானுயர ஓங்கி நிற்கும் கட்டடம், ஆன்மீகச் சிறப்பு என்று மக்களை ஈர்க்கக் கூடிய அம்சங்கள் முன்னிலைப் பெறும். பாரம்பரியச் சுற்றுலாவில் தற்போது பல புதிய பரிமாணங்களும் சேர்ந்துவிட்டன. யுனெஸ்கோ அறிவித்துள்ள சர்வதேச பண்பாட்டுப் பாரம்பரியச் சின்னங்களில் இந்தியாவில் 29 இடங்கள் இடம் பெற்றுள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பாரம்பரியச் சுற்றுலாவில் மக்களை ஈர்க்கக் கூடியவையாக நாட்டிய விழாக்கள், இலக்கிய விழாக்கள், இசை விழாக்கள் போன்றவை விளங்குகின்றன. இந்தியாவில் ஆண்டுதோறும் இவை போல சுமார் 300 பாரம்பரிய விழாக்கள் நடைபெறுகின்றன என்பது ஆச்சர்ய மூட்டும் செய்தியாக இருக்கலாம். மணிப்பூர் மாநிலத்தின் குதிரை போலோ, கேரளத்தின் படகுப் போட்டி தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுப் போட்டிகளும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரக் கூடியவை.

## கிராமியச் சுற்றுலா

நம் நாட்டின் கிராமியச் சூழலும், பழக்க வழக்கங்களும், பண்டிகைகளும் திருவிழாக்களும், உலகளவிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தன்மை கொண்டவை. இந்திய கிராமங்களுக்கே உரிய கைவினைத் தயாரிப்புகள், கலைப் பொருள்கள், துணி அலங்காரங்கள், ஆடைகள் போன்றவற்றை வாங்கவும், அவற்றைத் தயாரிக்கும் முறைகளை அறியவும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இதைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் சுற்றுலாப் பயணிகளுக்கும் உள்ளூர் கைவினை கலைஞர்களுக்கும் இடையே கலந்துறவு ஏற்படுத்தலாம். பயணிகளுக்குச் சரியான விவரங்களை எடுத்துரைக்கும் விதமாக, உள்ளூர் மக்களுக்கு மறந்துபோன அவர்களுடைய பழம்பெருமைக் கதைகளையும் வரலாறுகளையும் மீண்டும் நினைவூட்டும் பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

கிராமியச் சுற்றுலாவின் இன்னோர் அங்கம், சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் மக்களோடு அவர்களின் வசிப்பிடங்களிலேயே தங்கியிருக்கும் வாழ்வியல் அனுபவத்தைத் தருவதாகும். இதற்காக நல்ல ஆரோக்கியமான, சுகாதாரமான சூழலை விருந்தோம்புநர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுற்றுலாத் துறையைப் பெரிதும் பாதிக்கக் கூடிய முக்கியமான விஷயம் சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றுவதாகும். போலித் தயாரிப்புகளைப் பாரம்பரியமான கைவினைத் தயாரிப்புகள் என்று ஏமாற்றுவது தொடங்கி, ஒரு சில ரூபாய் மதிப்புள்ள பொருள்களுக்கும் சேவைகளுக்கும் பல நூறு ரூபாய்களைக் கறந்து விடுகிறதுவரை. பலவிதமான ஏமாற்று வேலைகளால் நமது விருந்தினர்களான வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் மனம் வெதும்படிச் செய்துவிடுவது நமக்கு அழகு அல்ல. மேலும் நமது வறுமை, ஏழ்மை, இயலாமை போன்றவற்றை முன்னிறுத்தி, அவர்களிடம் இரந்து நிற்பதும், நமக்கே கேவலமான செயல் என்பதை நாம் உணர வேண்டும். இந்த விஷயங்களில் உள்ளூர் மக்களுக்கு விழிப் புணர்வையும், படிப்பினையையும் ஊட்ட அரசு நிறுவனங்களும், தன்னார்வ அமைப்புகளும் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

## சாகசச் சுற்றுலா :

சாகசச் சுற்றுலா வளர்ச்சிக்கு 1992க்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியும் ஒரு காரணம் எனலாம். தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சியினால், சுற்றுலா துறை பணிகளான இளைஞர்களால் சாகசச் சுற்றுலாவுக்கு உத்வேகம் கிட்டியது. அவர்கள் கையில் மிகுந்திருந்த பணமும், சுற்றுலா செல்லும் ஆர்வமும் சாகசங்களில் இருந்த ஈடுபாடும் இத்துறை வளர்ச்சிக்கு துணை போயின.

இந்த மாற்றத்தைக் கவனித்த மத்தியச் சுற்றுலா அமைச்சகம் சாகசச் சுற்றுலாவுக்கு சிறப்பு கவனம் செலுத்தியது. சாகசச் சுற்றுலா ஏற்பாடு செய்பவர்களுக்கான வழிகாட்டு நெறிகளை அறிவித்து அத்தகைய ஏற்பாட்டாளர்களுக்கு ஒப்புதல் வழங்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகிறது. சாகசச் சுற்றுலாவிற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கென மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும்,

மத்திய அரசு சிறப்பு நிதி உதவிகளையும் வழங்குகிறது. 'ஆச்சரியமூட்டும் இந்தியா' என்ற முழக்கத்தை முன் வைத்து ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளில் இந்தியாவின் சாகசச் சுற்றுலாத் தலங்கள் பற்றி விளம்பரமும் செய்யப்பட்டது.

2009ஆம் ஆண்டில், ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் 'லே' பகுதியில் மேலும் 104 சிகரங்களில் சாகசப் பயணம் மேற்கொள்ள இந்திய ராணுவம் அனுமதி அளித்தது. 2012ஆம் ஆண்டில் சிறந்த சாகசச் சுற்றுலா வசதி மிக்க மாநிலம் என்ற விருது இமாசலப் பிரதேசத்திற்கு வழங்கப்பட்டது. தற்சமயம் ஆசிய வளர்ச்சி வங்கியின் ரூ.482.22 கோடி நிதியுதவியுடன் சர்வதேசத் தரத்திலான சாகசச் சுற்றுலா வசதிகளைக் கட்டமைக்கும் பணியில் சுற்றுலா அமைச்சகம் ஈடுபட்டுள்ளது.

## திரைப்படச் சுற்றுலா

திரைப்படப் பிடிப்பு, திரைப்படத் தயாரிப்பு, திரைப்படம் மூலமான வேறு பணிகள் போன்றவை திரைப்படச் சுற்றுலாவிற்குள் அடங்கும். அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும், திரைப்படப்பிடிப்பிற்காகச் செல்லும் குழுவினருக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து தரும் முகவாண்மை நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. திட்டமிட்டபடி, படப்பிடிப்புகளை முடிக்கவும், பொருளாதாரச் செலவுகளைக் கட்டுக்குள் வைக்கவும் இத்தகைய நிறுவனங்கள் உதவுகின்றன.

சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கேற்கும் ஒவ்வொரு நாடும் தனது நாட்டின் இயற்கை வளங்களையும், அவ்வப்பகுதிகளில் உள்ள சமூகக் கட்டமைப்புகள் பற்றியும் பரஸ்பரம் செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன.

இரு நாடுகள் சேர்ந்து ஒரு திரைப்படத்தைத் தயாரிக்கின்றபோது வரித் தள்ளுபடி போன்ற சலுகைகள் கிடைக்கின்றன. தற்போது, ஜெர்மனி இத்தாலி, இங்கிலாந்து, நியூஸிலாந்து, பிரேஸில், பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இணைந்து திரைப்படம் தயாரிக்கும் ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இந்த நாடுகளுக்குக் கதை, வசனம் எழுதிய ஏட்டோடு சென்றால் தயாரித்த படச்சுருளோடு திரும்பி வந்துவிடலாம். இந்தியாவிற்கு வருகிற வெளிநாட்டுப் படத் தயாரிப்பாளர்களுக்கு அனைத்து அனுமதிகளும் மூன்று வாரங்களுக்குள் வழங்கிவிடும் நடைமுறை அமலில் உள்ளது.

படப்பிடிப்புக்குப் பிந்தைய படத்தயாரிப்பு வேலைகளை மேற்கொள்ளவும் இந்தியாவை பல்வேறு நாடுகள் விரும்புகின்றன. இதற்குக் காரணம் இங்கே உள்ள பத்துக்கும் மேற்பட்ட மிக அதி நவீன தொழில்நுட்ப வசதி கொண்ட தயாரிப்புக்கூடங்களும், சரளமாக ஆங்கிலம் பேசுகின்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் இருப்பதும்தான். அனிமேஷன் மென்பொருளைப் பொறுத்தமட்டில் பல நாடுகளும் இந்தியாவையே விரும்புகின்றன என்பதும் கவனத்திற்கு உரியது. இவை தவிர மிகக் குறைவான செலவில் படப்பிடிப்புகளை நடத்தவும், படத் தயாரிப்பு வேலைகளைச் செய்யவும் உகந்த நாடாகவும் இந்தியா திகழ்கிறது. ஆண்டொன்றுக்கு ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடவேண்டிய செய்தியாகும். தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம், அசோஸெம், இந்தியத் தொழில் வணிகக் கூட்டமைப்பு போன்றவை, வெளிநாட்டுத் திரைப்படத் தயாரிப்புக் குழுவினருக்கு நம் நாட்டில் சரியான உதவி செய்யக்கூடிய நிறுவனங்களைப் பட்டியலிட்டு அன்னிய தூதரங்களில் தருவதால் இத்துறை வளர்ச்சி இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

திரைப்படத்துறையின் சமூகபொருளாதார, பண்பாட்டு முக்கியத்துவங்களைக் கருத்தில் கொண்டு இத்துறைக்குத் 'தொழில்துறை' என்ற அங்கீகாரத்தை மத்திய அரசு வழங்கியுள்ளது. பல்வேறு மாநிலங்களும் விதவிதமான சலுகைகளைத் திரைத் துறைக்கு வழங்கி வருகின்றன. 'ஆச்சரியமூட்டும் இந்தியா' என்ற முழக்கத்தில், சர்வதேச திரைப்பட விழாக்களில் இந்திய திரைத் துறையையும் ஓர் அங்கமாக முன்வைக்க, 2012ஆம் ஆண்டில் மத்திய சுற்றுலாத் துறையும் செய்தி ஒலிபரப்புத் துறையும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இவ்வாறாக, இந்தியாவில் சுற்றுலா வளர்ச்சிக்கு அபரிமிதமான வாய்ப்புகள் உள்ளன. மருத்துவச் சேவைகளைப் பெறுவதற்காக இந்தியாவிற்கு வெளிநாட்டுப்பயணிகள் வருகின்ற மருத்துவச் சுற்றுலாவும் அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்றுவருகிறது. ●

# இந்தியச் சுற்றுலாவை எளிதாக்கும் இ-விசா

– நானு பாஸின், நவ்நீத்குமார்

பொழுது போக்கிற்காகவும், சமய நோக்கங்களுக்காகவும், வியாபார விஷயங்களுக்காகவும், குடும்பத்தினரோடு சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்காகவும் குறுகிய காலத்திற்கு மேற்கொள்ளப்படும் பயணத்தைச் சுற்றுலா எனலாம். ஒரு நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்வது மட்டுமின்றி, ஒரே நாட்டிற்குள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றுவருவதும் சுற்றுலாதான். உலக சுற்றுலா அமைப்பு, "ஓய்வு அல்லது வாணிகம் அல்லது வேறு காரணங்களுக்காக மக்கள் தாம் வழக்கமாக வசிக்கும் இடத்தில் இருந்து ஓராண்டுக்கு மேற்படாத கால அளவில் வெளியிடங்களுக்குச் சென்று வந்தால் அவர்களைச் சுற்றுலாப் பயணியர் எனலாம்" என்று வரையறுக்கிறது.

உலக அளவில் பலரும் மேற்கொள்கின்ற சுற்றுலாவை ஒரு நாட்டுக்குள் வருகிறவர்கள், ஒரு நாட்டில் இருந்து வெளிநாட்டுக்குச் செல்கிறவர்கள் என்று இருகூறாகப் பகுத்துக் காணலாம். வெளிநாட்டினர் சுற்றுலாவின்போது கொண்டு வரும் அன்னியச் செலாவணி பல நாடுகளுக்கு முக்கிய வருவாயாக இருக்கிறது. அத்தோடு வெளிநாட்டுப் பயணிகள் அடிக்கடி வந்து போகிற பகுதிகளில் பொருளாதார நிலைமை மேம்பட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்கிறது.

வளமான பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்க இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்வது வெளிநாட்டினர் பலருக்கும் உற்சாகம் ஊட்டுவதாகவே உள்ளது. கடல், கானகம், மலைத் தொடர்கள், பாலைவனங்கள், கானுயிர்கள், கவின்மிகு காட்சிக் களங்கள் என்று இந்தியாவின் எல்லைக்குள் எத்தனை எத்தனையோ சுற்றுலாத் தலங்கள் உள்ளன. விதவிதமான பண்பாட்டுப் பழக்கங்கள், ஆடை அணிகலன்கள், உணவுப் பதார்த்தங்கள், உயிரினக் கூட்டங்கள் என்று சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அம்சங்கள் பலப்பலவாய் இங்குள்ளன. இந்தியாவின் பண்பாட்டையும், பாரம்பரியப் பழக்கங்களையும், வளமான மரபுச் சின்னங்களையும் கண்டுகளித்துச் செல்வோர், நமது பண்பாட்டுத் தூதுவர்களாகவும் செயல்படுகிறார்கள்.

இந்தியாவிற்குச் சுற்றுலா மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணிகளுக்குப் பல வசதிகளை இந்திய அரசு செய்துள்ளது. அவற்றுள் முக்கியமானது மின்னணு விசா வழங்கும் முறையான இ-விசா. இந்தியப் பயணத்தை மிக எளிதாக்கி விட்டது இந்தத் திட்டம்.

**இ.சுற்றுலா விசா பின்புலம்**

சுற்றுலா தொழிலுக்கு உத்வேகம் அளிக்க வெளிநாட்டுப் பயணிகளுக்கு விசா வழங்கும் முறையில் உள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது 2010ஆம் ஆண்டில், 'வருகைக்குப் பிறகு விசா' வழங்கும் திட்டம் அறிமுகமானது. பொதுவாக இந்தியாவிற்கு பயணம் செய்ய விரும்பும் வெளிநாட்டினர், தமது நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தில் விண்ணப்பித்து விசா என்கிற நுழைவு அனுமதியைப் பெற்ற பின்னரே பயணம் மேற்கொள்ள முடியும். ஆனால் 'வருகைக்குப் பிறகு விசா' என்ற திட்டப்படி நம்நாட்டு விமான நிலையம் அல்லது துறைமுகத்திற்கு வந்தபிறகு அங்குள்ள குடியேற்ற அதிகாரிகளிடம் விண்ணப்பித்து உடனடியாக விசா பெற்றுக் கொள்ளலாம். 2010ம் ஆண்டில் இந்தத் திட்டம் பின்லாந்து, ஜப்பான், நியூஸிலாந்து, சிங்கப்பூர், லக்ஸம்பர்க் ஆகிய ஐந்து நாட்டினருக்கு மட்டுமே கிடைத்தது. பின்னர் 2011ல் கம்போடியா, இந்தோனேஷியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ்,

---

**நானு பாஸின், இயக்குநர், நவ்நீத்குமார்,** துணை இயக்குநர், பத்திரிகைத் தகவல் அலுவலகம்

லாவோஸ், மியான்மார் ஆகிய மேலும் ஆறு நாட்டினருக்கு நீட்டிக்கப்பட்டது. தொடர்ந்து 2014 ஏப்ரல் முதல் தென்கொரிய மக்களுக்கும் 'வருகைக்குப் பிறகு விசா' வழங்கப்பட்டு வருகிறது.

அந்தக் கட்டம் வரை சிறிய அளவிலேயே செயல்பட்டுவந்த 'வருகைக்குப் பிறகு விசா' திட்டம், மத்தியில் புதிய அரசு அமைந்தவுடன் 2014 நவம்பர் 27ஆம் தேதி முதல் 43 நாடுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. கடந்த ஜனவரி முதல் கயானா நாட்டினருக்கும் நீட்டிக்கப்பட்டு, மின்னணு பயண அங்கீகார முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

**மின்னணு பயண அங்கீகாரம் :**

இ–சுற்றுலா விசா புதிய அரசு அறிமுகப்படுத்திய மின்னணு பயண அங்கீகாரமுறை வருகைக்குப் பிறகு விசா பெறுவதை மேலும் எளிமையாக்கியது. இந்த மின்னணு பயண அங்கீகாரமே தற்போது இ–சுற்றுலா விசா எனப் பெயர் மாற்றப்பட்டுள்து. இந்தத் திட்டத்தை 2015–16க்குள் 106 நாடுகளுக்கு நீட்டித்து, படிப்படியாக 150 நாட்டுப் பயணிகளுக்கு இவ்வசதியை வழங்க அரசு உறுதிபூண்டுள்ளது.

இ–சுற்றுலா விசா பெற விரும்பும் வெளிநாட்டுப் பயணி தனது நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்திற்குச் செல்ல வேண்டியதுமில்லை; ஆன் லைன் மூலமாக விசா கட்டணம் செலுத்தவும் வேண்டியதில்லை. ஆன் லைன் மூலம் இந்திய விசா வேண்டி விண்ணப்பிப்பவருக்கு, மின்னஞ்சலில் பயண அங்கீகாரம் அனுப்பப்படும். அதனைப் பதிவிறக்கம் செய்து கொண்டு இந்தியாவிற்குப் பயணப்படலாம். இந்திய விமான நிலையத்திற்கு வந்தவுடன் குடியேற்ற அதிகாரிகளிடம் மின்னஞ்சலைக் காட்டி நுழைவு அனுமதி முத்திரையைப் பெற்றுக் கொள்ளலாம். தற்சமயம் இ–சுற்றுலா விசா ஒரு மாதத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. அதன் மூலம் ஒரு முறை மட்டுமே வரலாம்; அந்த அனுமதியை ஒரு மாதத்திற்கு மேல் நீட்டிக்க முடியாது.

பொழுதுபோக்கு, கண்கவர் இடங்களைக் காணுதல், உறவினர் அல்லது நண்பர்களைச் சந்தித்தல், குறுகிய கால மருத்துவ சிகிச்சை, சாதாரண வியாபார நோக்கம் போன்றவற்றுக்காக வருபவர்களுக்கு இ.சுற்றுலா விசா வழங்கப்படும். தூதரக அலுவலர்கள், அரசாங்கப் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களுக்கு இந்த வசதி கிடையாது.

இ–சுற்றுலா விசா வழங்குவதன் நோக்கம், நியாயமான காரணங்களுக்காக இந்தியா வருகின்ற பயணிகளுக்கு, தகவல் தொடர்பு உத்திகளைக் கொண்ட பின்னணியில் எளிய முறையில் விசா வழங்குவதே ஆகும். தற்போது முழுவதும் கணிணி மயமாக்கப்பட்டு விட்ட இத்திட்டம் மிகச் சுலபமானதாகவும் தடைகள் ஏதுமற்றும் திகழ்கிறது.

**இ–சுற்றுலா விசா வழங்கும் இடங்கள் :**

புதுதில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூரு, கொச்சி, திருவனந்தபுரம், கோவா ஆகிய ஒன்பது விமான நிலையங்களில் இ–சுற்றுலா விசா வழங்குவதற்காக 72 கவுண்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும், இந்த ஒன்பது விமான நிலையங்களில் ஏதேனும் ஒன்றின் வழியாக இ–சுற்றுலா விசா பெற்று இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணி, குடியேற்றப் பிரிவுகள் செயல்படும் வேறு ஊர்களில் இருந்து இந்தியாவைவிட்டு வெளியே செல்லலாம்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தியப் பயணத்தை எளிதாக்குவதில் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதையே இந்நடவடிக்கை காட்டுகிறது. உலக அளவில் சுற்றுலாப் பயணம் செய்வோரில் தற்போது சுமார் 0.64 சதவீதம் பேர் மட்டுமே இந்தியாவுக்கு வருகின்றனர். இந்த எண்ணிக்கையை பனிரண்டாம் திட்ட காலத்தில் ஒரு சதவீதமாக உயர்த்தவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தால் நல்ல பயனும் கிட்டியுள்ளது. 2014 மார்ச்சில், பழைய முறையில் 1958 பேர் வருகைக்குப் பிறகு விசா

பெற்றனர். புதிய முறை அமலுக்கு வந்தபின் 2015 ஜனவரியில் மட்டும் 25,851 பேர் இ–சுற்றுலா விசா பெற்றுள்ளனர். சென்ற 2014 பிப்ரவரியில் 1980 பேர் வருகைக்குப் பிறகு விசா பெற்றிருந்த நிலையில் இந்த பிப்ரவரியில் (2015) 24,985 பேர் இ–சுற்றுலா விசா பெற்றுள்ளனர். 2015 ஏப்ரல் 14ஆம் தேதி வரை சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர் இந்தப் புதிய வசதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என அரசு தெரிவித்துள்ளது.

இ–சுற்றுலா விசா பெறுவதில் முதல் பத்து இடங்களில் இருக்கும் நாடுகளாவன 1) அமெரிக்கா (33.25%) 2) ஜெர்மனி (14.64%) 3) ரஷ்யக் கூட்டமைப்பு நாடுகள் (13.13%) 4) ஆஸ்திரேலியா (8.37%) 5) கொரியக் குடியரசு (6.39%) 6) உக்ரைன் (4.21%) 7) மெக்சிகோ (2.93%) 8) ஜப்பான் (1.99%) 9) நியூஸிலாந்து (1.91%) 10) இஸ்ரேல் (1.68%)

இ–சுற்றுலா விசா வழங்குவதில் விமான நிலையங்களின் பங்காவது : 1) புதுதில்லி (47.32%) 2) மும்பை (18.55%) 3) கோவா (12.03%) 4) பங்களூரு (6.27%) 5) சென்னை (5.6%) 6) ஹைதராபாத் (2.93%) 7) கொல்கத்தா (2.78%) 8) கொச்சி (2.68%) 9) திருவனந்தபுரம் (1.84%)

**கவனிக்க வேண்டிய விஷயங்கள்**

இ–சுற்றுலா விசா தற்போது 40க்கும் மேற்பட்ட நாட்டினருக்கு வழங்கப்பட்டாலும், சீனா, இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி, மலேஷியா போன்ற நாட்டினருக்கு வழங்கப்பட இன்னும் அரசு அனுமதி அளிக்கவில்லை.

இதேபோல இந்தியாவில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த வாரணாசி, கயா, அகமதாபாத், ஜெய்ப்பூர், திருச்சிராப்பள்ளி போன்ற விமான நிலையங்களில் இந்த வசதி அறிமுகப்படுத்தப்படவில்லை.

மேலும் இ–சுற்றுலா விசா பெறுவோர், ஒருமுறை மட்டுமே அனுமதிக்கப்படுவதற்குப் பதிலாக, பலமுறை (ஒரே விசாவில்) வந்துபோக அனுமதிக்கலாம் என்றும் சுற்றுலாத் துறையினர் கூறுகின்றனர். இந்தியாவிற்கு இ–சுற்றுலா விசா மூலம் வருகின்ற பயணி, நமது அண்டை நாடுகளுக்குச் சென்றுவிட்டு மீண்டும் இந்தியா வழியாக அவரது தாய்நாடு திரும்ப பலமுறை வந்துபோகும் அனுமதி உதவும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். அதேபோல தற்போது ஒரு மாத காலம் மட்டுமே வழங்கப்படும் இ–சுற்றுலா விசாவை இரண்டு மாத காலமாக அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

எவ்வாறாயினும் தற்போது அமலுக்கு வந்துவிட்ட இ–சுற்றுலா விசா நடைமுறை, கடந்த இருபதாண்டுகளாக இருந்த கெடுபிடிகளை வெகுவாகத் தளர்த்திவிட்டது என்பதும் உண்மை. இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளில் 40 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் அமெரிக்கா, ஜெர்மனி, ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்த நாட்டினருக்கு இ–சுற்றுலா விசா வசதி வழங்கப்பட்டுவிட்டதும் முக்கியமானதாகும். ஆனால் இந்த வசதியால் மட்டுமே நம் நாட்டின் சுற்றுலாத் தொழிலைக் கணிசமாக வளர்ச்சியுறச் செய்ய முடியாது. பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. ஏனைய கட்டமைப்பு வசதிகள், பயணியர் நலன்கள், போன்றவற்றிலும் சம்பந்தப்பட்ட அனைவரும் அக்கறை செலுத்த வேண்டுவதும் முக்கியமாகும். ●

அடுத்த இதழில்...

**மாற்று மருந்து பற்றிய கட்டுரைகள் இடம்பெறும்**

# பயிர்களுக்கான கடன் தொகையை மறுசீரமைக்க வேண்டும் வங்கிகளுக்கு மத்திய அரசு வலியுறுத்தல்

மாநிலங்களில் உள்ள வங்கிகள் குழு குறிப்பிட்ட காலத்தில் பயிர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை மறுசீரமைக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தேசிய அளவிலான பேரிடர்களாக அறிவிக்கப்படும் பலத்த மழை போன்ற பேரிடர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து துயரத்தில் வாடும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இதற்காக மாநிலங்கள் பத்து சதவீதம் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சகம் மாநிலங்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த முன்முயற்சி சமீபத்தில் ஏற்பட்ட பருவம் தவறி பெய்த மழை, ஆலங்கட்டி மழை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் ஏழைகளுக்கும் முக்கிய நிவாரண நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். இதற்கான அறிவிப்பை பிரதமர் திரு. நரேந்திர மோடி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

காப்பீடு நிறுவனங்கள் விவசாயிகளின் கோரிக்கைகளை விரைவாக முடிக்கவும், மாநில அரசு விவசாயிகளின் காப்பீடு கோரிக்கை மீதான நடவடிக்கைகளை விரைவில் முடிப்பதை உறுதி செய்யவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. மாற்றி அமைக்கப்பட்ட தேசிய காப்பீடு திட்டத்தின் கீழ் பயிர் அறுவடை செய்தபின் மேற்கொள்ளப்படும் சோதனை முடிவுகளுக்கு காத்திருக்காமல் விவசாயிகள் 25% வரை கோருவதற்கு தகுதி பெறுகின்றனர். அதேபோல வானிலை சார்ந்த பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் பாதிப்பு இறுதியில் இருந்து 45 நாட்களுக்குள் காப்பீடு தொகையை கோர முடியும். காப்பீடு தொகையை விரைவில் வழங்கும் வகையில் மாநில அரசுகள் காப்பீடு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டங்கள் நடத்தவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

இன்னும் ஒரு முக்கியமான நடவடிக்கையாக தேசிய பேரிடல் நிவாரண நிதி / மாநில பேரிடர் நிவாரண நிதியின் விதிமுறைகளின்படி ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் மொத்த விலை குறியீட்டு முடிவுபடி ஆண்டு விலைவாசியை பொருத்து ரூ.100 ஆல் பெருக்கி வரும் தொகை முழுத்தொகையாக மாற்றியமைக்கப்படும்.

இன்னும் ஒரு முக்கிய முயற்சியாக பிரதமர் திரு. நரேந்திர மோடி 33% அல்லது அதற்கு மேல் சேதமடையும் பயிர்களுக்காக விவசாயிகள் உள்ளீட்டு மானியத்திற்கு தகுதி பெறுகின்றனர் என்று ஏற்கனவே அறிவித்திருந்தார். இதற்கு முன்பு 50% அல்லது அதற்கும் மேல் பயிர் சேதமடைந்தால் மட்டுமே உள்ளீட்டு மானியம் வழங்கப்பட்டது. பயிர்களால் ஏற்படும் இழப்பிற்கு ஏற்கனவே உள்ள நிதி உதவியை 50% மாக உயர்த்துவதாக பிரதமர் அறிவித்திருந்தார். தேசிய பேரிடர் ஆதார நிதி / மாநில பேரிடர் ஆதார நிதியின் விதிமுறைகளின்படி இந்த ஈடுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகள் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் இருந்து அமலுக்கும் வரும். பிப்ரவரி / மார்ச் 2015ல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆலங்கட்டி மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறப்பு பகிர்ந்தளித்தல் நிதி வழங்கப்படும். புதிய விதி முறையின்படி இந்த உதவி வழங்கப்படும்.

**தேசிய பேரிடர் ஆதார நிதி விதி முறைகளின் பல்வேறு அம்சங்கள்:**

பல்வேறு பிரிவுகளுக்கான மதிப்புக் கூட்டப்பட்ட உள்ளீட்டு மானியங்கள் கீழ் வருமாறு:

• வானம் பார்த்த பூமி, பயிர் செய்யப்படும் நிலங்களின் வேளாண் பயிர்கள் தோட்டக்கலை பயிர்கள் ஆண்டு முழுவதும் விளைவிக்கப்படும் பயிர்களுக்கு உள்ளீட்டு மானியம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.4,500 ல் இருந்து ரூ.6,800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உறுதி செய்யப்பட்ட நீர் பாசன பகுதிகளுக்கு இந்த தொகை ஒரு ஹெக்டேருக்கு ரூ.9,000ல் இருந்து ரூ.13,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

• ஆண்டு முழுவதும் பயிர் செய்யக்கூடிய பயிர்களுக்கு உள்ளீட்டு மானியத்தின் அளவு ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,000 லிருந்து ரூ.18,000 மாக உயர்த்தப்பட்டுள்ளது.

• பட்டுப்பூச்சி வளர்ப்பில் ஈடுபடுபவர் களுக்கு உள்ளீட்டு மானியம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.4,800 முதல் ரூ.6,000 வரை வழங்கப்படும். இதற்கு முன்பு ஒரு ஹெக்டேருக்கு ரூ.3,200 முதல் ரூ.4,000 ஆக இருந்தது.

**இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மன அழுத்தத்தை குறைக்க எடுத்துள்ள இதர நடவடிக்கைகள்:**

• விவசாய நிலத்தில் வண்டல் படிவதால் ஏற்படும் நிலம் மற்றும் பிற இழப்புகளுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் படி ஒரு ஹெக்டேருக்கு ரூ. 8100வில் இருந்து ரூ. 12200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மலைப்பாங்கான பகுதிகளில் விவசாய நிலத்தில் குப்பைகள் அகற்றுதல், மீன் பண்ணைகளை சீரமைப்பு அல்லது பழுது பார்த்தலுக்கும் இது பொருந்தும்.

• நிலச்சரிவு, பனிச்சரிவு, ஆறுகளின் பாதை மாற்றத்தினால் நிலத்தின் ஒரு பகுதியை இழப்பதால் ஏற்படும் பாதிப்புக்கு நிவாரண நிதியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் படி, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.25000 முதல் ரூ 37500 வரை வழங்கப்படும்

• கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, அரசு மேம்பட்ட நிதி உதவியை அறிவித்துள்ளது.

• கறவை மாடுகள் மாற்றுவதற்காக அளிக்கப்படும் நிதி உதவியும் அதிகரித்துள்ளது. அதன் படி, எருமை மாடுகள் / பசு மாடு / ஒட்டகம் / யாக் போன்றவற்றிக்கு அளிக்கப்படும் நிதி உதவி ரூ 16400 இருந்து ரூ 30000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

• வெள்ளாடு, செம்மரி ஆடுகளை மாற்றிக்கொள்ள அளிக்கப்படும் நிதி உதவி ரூ.1650 இருந்து ரூ 3000 ஆக அதிகரித்துள்ளது.

• ஒட்டகம், குதிரை, காளைகள் போன்ற வறட்சி பகுதியில் உள்ள விலங்குகளுக்கு அளிக்கப்படும் நிதி உதவியும் அதிகரித்துள்ளது. அதன் படி இந்த நிதி உதவி ரூ 15000 லிருந்து ரூ 25000 ஆக உயர்ந்துள்ளது.

• கன்றுகுட்டிகள், கழுதை, குதிரைவண்டி, கோவேறு கழுதைகளை மாற்றிக்கொள்ள அளிக்கப்படும் நிதி உதவி ரூ 10000 இருந்து ரூ.16000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

• பருவம் தவறி பெய்த மழை மற்றும் ஆலங்கட்டி மழையினால் பாதிக்கப்பட்ட மாநிலங்களை பார்வையிடுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது அமைச்சரவை உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர், திரு. ராஜ்நாத் சிங், மத்திய நிதி அமைச்சர் திரு. அருண் ஜேட்லி, மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ராதா மோகன் சிங், மத்திய நுகர்வோர் விவகார அமைச்சர் திரு.ராம் விலாஸ் பஸ்வான், மத்திய வேளாண்துறை இணையமைச்சர்கள் திரு. சஞ்சீவ் குமார் பால்யன், திரு. மோகன்பாய் கல்யாண்ஜிபாய் குண்டாரியா உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் பருவம் தவறி பெய்த மழையினால் சமீபத்தில் பாதிக்கப்பட்ட மாநிலங்களைப் பார்வையிட்டனர்.

• மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. நிதின் கட்காரி தலைமையிலான குழு கடந்த ஏப்ரல் 7, 2015 (செவ்வாய்க்கிழமை ) அன்று உத்தரப் பிரதேசத்தைப் பார்வையிட்டனர். இந்த குழுவில் மத்திய குடிநீர் மற்றும் சுகாதார துறை இணை அமைச்சர் திரு. ராம் கிருபால் யாதவ், மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. ஹரிபாய் பார்த்திபாய் சௌத்ரி ஆகியோ ரும் இடம் பெற்றிருந்தனர்.

• இதற்கிடையில், மத்திய வேளாண் அமைச்சகம் எவ்வித தாமதம் இல்லாமல் மாநில பேரிடர் நிதியில் இருந்து நிவாரண நிதிகளை வழங்குமாறு மாநிலங்களுக்கு உத்தரவிட்டுள்ளது. ஒருவேளை பற்றாக்குறை ஏற்பட்டால், அவர்கள் தங்கள் மாநில அவசரக்கால நிதியத்தை பயன்படுத்த வேண்டும். அதேபோல் தேசிய பேரிடர் நிதியில் இருந்து உதவி பெற தங்கள் குறிப்பு ஆணைகளை சமர்ப்பிக்க வேண்டும். விவசாயக் காப்பீட்டு திட்டங்களின் கீழ் வரும் உரிமை கோரல்களை வேகமாக செயலாக்கம் செய்யப் படுவதை மாநில அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மத்திய வேளாண் அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

• வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டு, அதனால் விலை உயரும் நிலை ஏற்பட்டால் மாநிலங்கள் சந்தை தலையீடு திட்டம் மூலமாக இவற்றை வாங்கி, சேமிக்க வேண்டும். இதற்காக, உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, மேற்கு வங்காள மாநில அரசுகளுக்கு மத்திய வேளாண் அமைச்சர் திரு. ராதா மோகன் சிங் கடிதம் எழுதியுள்ளார்.

# மருத்துவச் சுற்றுலா இந்தியாவில் நிலவும் போக்குகள் ”உதயமாகும் புதிய தொழில்”

– டாக்டர் ஹரிஹரன்

சுற்றுலா என்பது மரபான முறையில் ”குறுகிய காலத்திற்கு பொழுதுபோக்கு, கேளிக்கை மற்றும் இதர காரணங்களுக்காக தாங்கள் வசிக்கும் இடத்தில் இருந்து வேறு இடங்களுக்குப் பயணம் செய்வது” என்று வரையறை செய்யப்படுகின்றது. ஆனால் காலம் செல்லச் செல்ல ” சுற்றுலா” என்ற வார்த்தை பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை என்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. கடந்த சில பத்தாண்டுகளில் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்தது,உள்கட்டமைப்பு வசதி பெருகியது, மருத்துவத் துறையில் நிபுணத்துவம் தொடர்ந்து அதிகரித்து வந்தது போன்ற செயல்பாடுகள் சேர்ந்து ”மருத்துவச் சுற்றுலா” என்று அழைக்கப்படும் ஒரு வகை சுற்றுலாவை வளர்த்தெடுத்து உள்ளன. விரைவாக வளர்ந்து வரும் ஆரோக்கியம் மற்றும் சுற்றுலாத்துறையை எதிர்கொள்ள பயண ஏற்பாட்டு ஏஜென்சிகளும் ஊடகங்களும் இணைந்து உருவாக்கியுள்ள சொல்லாக்கமே ”மருத்துவச் சுற்றுலா” என்பதாகும். இது ஒரு பெருநிகழ்வு ஆகும். உலகம் முழுவதும் உள்ள மக்கள் வேறு ஒரு நாட்டுக்கு (இந்த இடத்தில் இந்தியா) பொது மருத்துவம், பல் மருத்துவம், அறுவைச் சிகிச்சை போன்றவற்றுக்காக வருகின்றனர். அதே சமயம் இதனை அவர்கள் சுற்றுலாப் பயணமாக, விடுமுறைக்காலப் பயணமாகவும் மாற்றிக் கொள்கின்றனர். தாங்கள் வருகை புரியும் அந்த நாட்டின் பல்வேறு விதமான கவர்ச்சிகரமான அம்சங்களைக் கண்டு களிக்கிறார்கள். மருத்துவச் சுற்றுலா, குறிப்பாக இந்தியாவில், நவீன, பாரம்பரிய, மாற்று மருத்துவம் சார்ந்த பல பிரிவுகளை மையமாகக் கொண்டுள்ளது. அவை கீழ்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

**நவீன / அலோபதி மருத்துவம்:**

இந்த மருத்துவமுறையானது வாய்வழியாக மருந்து உட்கொள்வதோடு அதனுடன் மூட்டு மாற்று, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள்; நோய் அறிதல் பரிசோதனைகள், அழகு சேர்க்கும் அறுவை சிகிச்சைகள், பலசிறப்பு மருத்துவ பராமரிப்பு, மகப்பேறின்மைக்கு சிகிச்சை, இரத்தம் தொடர்பான மருத்துவம் அதாவது ரத்தம், ரத்த நாளங்கள் தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சை ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். அதுமட்டுமல்லாமல், மாற்றுப் பல் பதித்தல், ஸ்பா மற்றும் அழகூட்டும் சிகிச்சைகள் ஆகியனவும் அலோபதி மருத்துவ முறையில் உள்ளடங்கும்.

**ஆயுர்வேதம்:** கி.மு.600ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டின் தனித்த விசேஷமான ஆரோக்கிய பராமரிப்பு மருத்துவ முறையாக ஆயுர்வேதம் இருந்து வருகின்றது. ”இயற்கையான அமைப்பு முறை” என்பதன் அடிப்படையில் முழுமையாகச் செயல்படும் மருத்துவப் பிரிவாக ஆயுர்வேதம் உள்ளது. உடலில் சமநிலையை அடைவதற்காக உடலில் ஏற்பட்டுள்ள நலக்கேடுகளைக் கண்டறிவதன் அடிப்படையில் இம்மருத்துவமுறை செயல்படுகின்றது. உடலை புத்திளமையாக்கல் மற்றும் நோய் தீர்த்தல் என்ற இந்த மருத்துவ முறையின் ”இயற்கை” அம்சம் அண்மைக்காலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் பிரபல்யம் பெற்று வருகின்றது.

**யோகா:** ”யோக்” என்ற சமஸ்கிருத வார்த்தையில் இருந்து யோகா என்ற சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் ”ஒன்றிணைப்பு” என்பதாகும். தெய்வீக அம்சம் அல்லது கடவுள் என்பதுடன் ஒன்றிணைதல் என்று கருதப்படுகின்றது. இது ஒரு உடலியங்கியல் மற்றும் ஆன்மீகம் சார்ந்த துறையாகும். மதச்சார்பற்ற மற்றும் விஞ்ஞான முறையிலான துறையாக இது உள்ளது. மனம்உடல்ஆன்மா ஆகியவற்றின் ஒருங்கிணைவு அனுபவத்தை அடைவதே இதன் நோக்கமாகும். யோகா மற்றும் தியானம் இரண்டையும் வாழ்க்கை முறையாக்க் கடைபிடிக்கப்படும் நாடாக இந்தியா அறியப்படுகின்றது.

இதர மாற்று மருத்துவ முறைகள்: ஹோமியோபதி, நேச்சுரோபதி, தியானம் மற்றும் இசை சிகிச்சை முறை, வாசனை சிகிச்சை முறை, பிராணிக் சிகிச்சை முறை மற்றும் ரைய்க்கி போன்றவை ஆகும்.

இந்தியாவில் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள், வசதிகளைப் பார்த்தால், மருத்துவச் சுற்றுலா என்பது நமது நாட்டில் விரைவாகவும் அதிகமாகவும் வளர்ந்து வருகின்றது எனலாம். உலக அளவிலும் இதே நிலைதான் இருக்கிறது. இன்சூரன்ஸ் செய்து கொள்ளும் மக்களின் எண்ணிக்கை, பிரீமியம் அதிகம் செலுத்துவோர்

---

**டாக்டர் ஹரிஹரன்** கடந்த 34 ஆண்டுகளாக மருத்துவராகப் பணிபுரிந்து வருகின்றார். ஸ்ரீகிருஷ்ணா மெடிகல் சென்டரை நிறுவியவர் இவர். போதைப்பழக்கத்தில் இருந்து சிறாரை மீட்கும் திட்டமான செய்யோக் என்பதை நிர்வகித்தவர்.

எண்ணிக்கை ஆகியன தொடர்ந்து அதிகரித்து வருவதால், அவர்களில் பலர் தங்களது சொந்த நாட்டை விட்டு வேறு ஒரு நாட்டில் சிகிச்சை பெற விரும்புகின்றனர். அவர்களால் சிகிச்சைக்கான கட்டணத்தைச் சமாளித்துவிட முடியும். இந்தியாவில் மருத்துவச் சுற்றுலா என்பது செலவு குறைந்த அல்லது சிக்கனமான மருத்துவச் சிகிச்சையாக உள்ளது. காத்திருக்கத் தேவையில்லாத நிலைமை, திறமையும் புகழும் ஒருங்கே பெற்ற நிபுணர்களைச் சிரமம் இல்லாமல் சந்தித்து ஆலோசனை பெறுதல் ஆகிய அம்சங்கள் உலகம் முழுவதிலும் இருந்து மருத்துவச் சுற்றுலாப் பயணிகளை இந்தியாவுக்கு ஈர்க்கின்றன. தற்போதைய எதிர்பார்ப்பு என்பது மருத்துவச் சுற்றுலா இதே வேகத்தில் தொடர்ந்து வளர வேண்டும் என்பதுதான். தங்களின் சொந்த நாட்டில் ஆகும் செலவில் ஓரளவு மட்டுமே செலவு செய்து மருத்துவச் சிகிச்சையை இங்கு பெற முடியும் என்ற நிலைமையும் தொடர்ந்து இருக்க வேண்டும்.

மருத்துவச் சுற்றுலா என்பதோடு, இந்தியா சர்வதேச சுற்றுலாவுக்கான சிறந்த இடமாகவும் கருதப்படுகின்றது. தற்போதைய புகழ்பெற்ற வாசகமான ”விருந்தினரே கடவுள்” என்பதோடு இந்தியா சுற்றுலா சேவை வழங்குபவர்களுக்கு தலைசிறந்த சேவைகளை வழங்குவதையும் உறுதிப்படுத்தி வருகின்றது. சிறப்பு மருத்துவச் சிகிச்சை, சிகிச்சையுடன் ஓய்வுக்கால இடம், குறைந்த கட்டணத்தில் மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை, சிகிச்சைக்காக காத்திருக்க வேண்டிய தேவையில்லாத நிலைமை, அதிநவீன கருவிகள் ஆகியன இதில் அடங்கும். அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் ஆப்பிரிக்கா, சி.ஐ.எஸ். நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், ஆஃப்கானிஸ்தான், ஈராக், வங்கதேசம் போன்ற நாடுகளில் இருந்து வருகின்றார்கள். ஆனால் ஐரோப்பா, வடஅமெரிக்கா, போன்ற வளர்ந்த நாடுகளில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை குறைவுதான்.

தற்போது அதிகப்படியான நபர்கள் கீழ்க்கண்ட சிகிச்சைக்காகவே வருகின்றனர்: ஆஞ்சியோபிளாஸ்ட்டி, இருதய அறுவை சிகிச்சை, மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, கண் சிகிச்சை (இதில் கண்புரை நீக்க சிகிச்சையும் அடங்கும்), கல்லீரல், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, ஐவிஎஃப், புற்றுநோய் சிகிச்சை போன்றவை ஆகும். இதனுடன் சிகிச்சை எளிதில் அளிக்க முடியாத தீவிர நோய் நிலைமைகளோடும் பயணிகள் வருகின்றனர். இத்தகைய தரமான ஆரோக்கிய சிகிச்சை என்பது அதிநவீன கருவிகளுடன் கூடிய மருத்துமனைகள், வளர்ந்து வரும் காப்பீட்டுச் சந்தை, வலுவாக கால்ஊன்றி உள்ள மருந்தியல் தொழில் ஆகியவற்றின் ஒருங்கிணைவால் சாத்தியமாகின்றது. இதில் முக்கிய பங்காற்றும் அரசு ஏஜென்சிகள் எவையெனில் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம், சுற்றுலா அமைச்சகம் இரண்டுமே ஆகும்.

இந்திய மருத்துவ / ஆரோக்கிய சுற்றுலா சேவைப் பிரிவு நெட்வொர்க் அறிக்கை, இத்துறை பற்றிய மீளாய்வு, நுண்ணலகு பிராந்திய சுற்றுச்சூழல் திட்டமிடல் மீதான நீடித்த தொழில்துறை நெட்வொர்க்குகள் மற்றும் அதன் பயன்பாடுகள் (SINET) பற்றிய ஸ்வாட் பகுப்பாய்வு ஆகியவற்றின்படி அதிநவீன மருத்துவ வசதிகளுடன் ஆச்சரியமூட்டும் இயற்கைப் பேரழகு நிறைந்த இந்தியா மருத்துவச் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக விளங்குகின்றது. இந்தியாவில் மருத்துவச் சுற்றுலாத் தொழில் என்பது சாஃப்ட்வேர் தொழிலுக்கு அடுத்து இரண்டாவது மாபெரும் வெற்றிகரமான தொழிலாக உள்ளது. இந்தியத் தொழில் கூட்டமைப்பும் (சி.ஐ.ஐ) மெக்கின்சேவும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் இத்தொழில் சந்தையில் வளர்ந்து வரும் மருத்துவமனைகளுக்கு மூலம் வளர்ந்து வரும் சந்தையில் கூடுதல் வருவாய் ஈட்டித் தரும் என்று சொல்கின்றன. மொத்த சுகாதாரச் சேவைச் சந்தையில் இது 35 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் இவர்கள் சொல்கின்றார்கள். இந்திய மருத்துவச் சுற்றுலாத் தொழில் ஆண்டுக்கு 30 சதவிகிதம் என்ற விகிதத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்றது. மேற்கு ஆசியா, மத்திய கிழக்கு நாடுகள், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் நோயாளிகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இருந்து வரும் ஓரளவு நோயாளிகள் ஆகியோருக்கு இத்தொழில் துறை சேவையளிக்கிறது. நம்நாட்டில் இப்போதுதான் முன்னேறி வரும் மருத்துவச் சுற்றுலாத் தொழிலானது கிரேக்கம், தென்ஆப்பிரிக்கா, ஜோர்டான், மலேஷியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள இதே தொழிலைவிட சிறந்ததாக விளங்குகின்றது.

இந்தியாவின் தேசிய சுகாதாரக் கொள்கையானது வெளிநாட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பது சட்ட ரீதியாக ”ஏற்றுமதி” என்றும் ”ஏற்றுமதி மூலமான வருவாய்க்குக் கிடைக்கும் அனைத்து நிதிசார்ந்த சலுகைகள் பெற இதுவும் தகுதியானது” என்றும் அறிவித்து உள்ளது. இந்தியாவில் அரசு மற்றும் தனியார் துறை மேற்கொண்ட ஆய்வுகள் நாட்டுக்குள் மருத்துவச் சுற்றுலா 1 பில்லியன் முதல் 2 பில்லியன் வரை நிதி கிடைக்கச் செய்யும் (1.25 பில்லியன் ஈரோ முதல் 2.50

பில்லியன் ஈரோ) என்று மதிப்பிட்டுள்ளன. பல்வேறு ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் நிதியறிக்கைகள் இந்தியாவுக்கான மருத்துவச் சுற்றுலா ஆண்டுக்கு 30 சதவிகிதம் வளர்வதாக மதிப்பிட்டுள்ளன. 2015ல் இந்தியா மருத்துவச் சுற்றுலா மூலம் ஒன்றரை மில்லியன் டாலர் ஆண்டுத் தொழில் தொகையாகப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவின் தலைசிறந்த கல்வி அமைப்பு கம்யூட்டர் நிபுணர்களையும் பொறியாளர்களையும் உரு வாக்குவதோடு ஒவ்வொரு ஆண்டும் 20,000 முதல் 30,000 வரை மருத்துவர்களையும் செவிலியர்களையும் உருவாக்குகின்றது. தற் போதைய சந்தை வளர்ச்சி விகிதம் தோராயமாக 30 சதவிகிதம் ஆகும். நமது நாடு சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற மருத்துவச் சுற்றுலாவில் சிறப்பான இடத்தில் இருக்கும் நாடுகளை வளர்ச்சியில் நெருங்கி வருகின்றது. மருத்துவச் சுற்றுலாத் தொழில் அடுத்த சில ஆண்டுகளில் 40 மில்லியன் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும்.

வரும் ஆண்டுகளில் அதிக அளவு வளர்ச்சி ஏற்படக்கூடிய துறைப்பிரிவுகளில் கீழ்வருவனவும் உள்ளடங்கும்:

**1. சந்தைப்படுத்துதல்:** மருத்துவச் சுற்றுலாச் சேவையை வழங்கும் மருத்துவ மனைகள் தங்களது சேவைகளை இணையம், சுகாதாரச் சேவை ஏஜென்ட்டுகள் மூலம் சந்தைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. சில சமயங்களில் வெளிநாட்டில் உள்ள நோயாளிகளைத் தனிப்பட சென்று சந்திக்க வேண்டிய தேவையும் உள்ளது. இதற்கு திறன்மிகுந்த சந்தைப்படுத்தும் நிபுணர்கள் தேவைப்படுகிறார்கள்.

**2. மொழியில் சேவைகள் :** ஆங்கிலம் பேசாத ஐரோப்பிய, ஆப்பிரிக்க மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில் இருந்து வரும் நோயாளிகளுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுகின்றார்கள். தங்களது மருத்துவ சிகிச்சை பற்றியை முறையியலை நோயாளிகள் புரிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

**3. நேரடி நிர்வாகச் செயல்பாடுகள்:** மருத்துவச் சுற்றுலாவில் பின்புல அலுவலகச் செயல்பாடுகளுக்கு திறமை மிக்கவர்கள் தேவைப் படுகின்றனர். பிற சேவை சார்ந்த தொழில்களில் உள்ளது போன்றே தொடர்பியல் மற்றும் நேர்முகத் தொடர்புத் திறன் மிக்கவர்கள் இத்தொழிலுக்கும் தேவைப்படுகிறார்கள். இதுதான் அடிப்படைத் தேவையாகவும் உள்ளது.

**4. விருந்தோம்பல் :** நிபுணர்கள் சிறந்த சுகாதாரச் சேவைக்கு அதிநவீன மருத்துவ நிபுணத்துவம் தேவைப்படுவது போலவே சேவை மற்றும் நிர்வாகத் திறனும் சேர்ந்தே தேவைப்படுகின்றது.

அனைவரும் விரும்பக்கூடிய இடமாக இந்தியா உருவாகி வருவதற்கான முதன்மைக் காரணம் நாட்டின் சுகாதாரச் சேவைத் தொழிலில் உள்ள உள்ளார்ந்த சாதக அம்சம்தான். தற்போது இந்திய சுகாதாரச் சேவை என்பது சர்வதேச தரங்களுக்கு ஏற்ப உள்ளது. இந்தியாவில் உள்ள தலைசிறந்த மருத்துவமனைகளில் சில மருத்துவமனைகளும் மருத்துவர்களும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளனர். ஆனாலும் மருத்துவச் சுற்றுலாவுக்காக இந்தியா என்ற தேர்வுக்கு முதன்மைக் காரணம் செலவு குறைவு என்பதே ஆகும். பெரும்பான்மை வெளிநாட்டு நோயாளிகள் இந்தியாவுக்கு வர பெரிதும் காரணமாக இருப்பது ”மூன்றாம் உலகநாடுகளில் ஆகும் செலவில் முதலாம் உலக நாடுகளில் கிடைக்கும் சேவை” என்பதே ஆகும்.

**மருத்துவச் சுற்றுலாவின் பயன்கள்**

- அந்நியச் செலாவணி வருவாய். இது நாட்டின் பொருளாதார வளத்துக்கு உதவுகின்றது.
- வளர்ந்த நாடுகளை விட சிக்கனமான கட்டணம் இருப்பது இதன் சாதகமான அம்சம் ஆகும்.
- மேம்படுத்தப்பட்ட தகவல் பரிமாற்றம்
- நோயாளி பராமரிப்பு நடைமுறைகளில் திறன் மேம்பாடு, அதிநவீன சிகிச்சை
- மருத்துவமனை விநியோகத் தொடர் திறனில் மேம்பாடு
- உள்நாடு மற்றும் அயல்நாடுகளில் வர்த்தகப் பங்குதாரர்களுடன் கூட்டிணைவு
- தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல்
- உள்முகமாக மற்றும் வெளிமுகமாக இரண்டிலும் சிறந்த முன்னேற்பாட்டு முறைகள்
- தொழிலில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுதல்
- உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறன்மிகுந்த ஊழியர்களை மிகச்சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுதல்
- சுகாதாரம், சுற்றுலா மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வாய்ப்பு
- தனிநபர் செல்வவளம் அதிகரிப்பு
- விரிவான மருத்துவத் தீர்வுகள் கிடைப் பதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்பு

● சர்வதேச சுகாதாரச் சேவை வழங்கும் நாடு என்ற சர்வதேச அங்கீகாரம்

● சமூக மற்றும் பல கலாச்சாரங்கள் சார்ந்த அனுபவம்

● சர்வதேச வாடிக்கையாளர் உறவுகள்

● சர்வதேச சந்தை மற்றும் மருத்துவ வர்த்தக உறவுகள்

● உலகத் தரத்தில் சுகாதாரச் சேவைக்கான இடம் என்பதாக நமது நாட்டுக்கு பிராண்ட் மதிப்பு உயர்தல்

● போட்டிச்சூழல்

● பங்குதாரர்களுக்கு இடையில் சிறப்பான ஒருங்கிணைப்பு. அதாவது மருத்துவமனை மற்றும் விருந்தோம்பல் தொழில்களுக்கு இடையில் நல்லுறவு

● பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் கூட்டாக பங்கேற்றல்

● நோயாளிகளின் திருப்தி

## இடைவெளிகளும் சவால்களும்

□ மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் அரசின் வலுவான ஆதரவு/முயற்சி இல்லை

□ தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளுக்கு இடையில் குறைவான ஒருங்கிணைப்பு அதாவது விமானச் சேவை இயக்குபவர்கள், ஹோட்டல்கள் மற்றும் மருத்துவமனை ஆகியவற்றுக்கிடையில் போதுமான ஒருங்கிணைப்பு இல்லாமை

□ சுத்தம் இல்லாத நாடு என்ற வாடிக்கையாளர்களின் கண்ணோட்டம்

□ மருத்துவமனைகளுக்கு இடையில் ஒரே மாதிரியான கட்டணக் கொள்கைகள் இல்லாதது

□ தாய்லாந்து, மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் ஏற்படுத்தும் கடுமையான போட்டி

□ சர்வதேச அங்கீகாரச் சான்றளிப்பு இல்லாது இருத்தல் இதுவே மிகப்பெரிய தடையாக உள்ளது.

□ சுகாதாரத் துறையின் உள்கட்டமைப்பில் போதுமான முதலீடு இல்லாதது

□ இந்தத் துறைக்கு முறையான காப்பீட்டுக் கொள்கைகள் இல்லாதது

□ அறிவு இல்லாத அல்லது ஓரளவே தெரிந்த, பயிற்சி பெறாத இடைத்தரகர்கள் ஆதிக்கம் அதிகம் இருப்பது. நோயாளியை ஒரு நபராக சரியான முறையில் இவர்களுக்குக் கையாளத் தெரிவதில்லை.

## முன்னேற்றத்துக்கான வழிமுறை

□ சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமானது சுற்றுலா அமைச்சகத்துடன் இணைந்து பலவித பங்குதாரர்களுடன் சேர்ந்து ஒரு செயல்திறன் குழுவை அமைக்க வேண்டும்.

□ இடைவெளிகளையும் சவால்களையும் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளையும் பற்றி கலந்தாலோசிக்க அனைத்து முக்கியமான அதிகாரிகளுடனும் சேர்ந்து ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்த வேண்டும்.

□ தொழிலில் உள்ள வாய்ப்புகள் பற்றி செயல்திறன் குழு மதிப்பீடு செய்ய வேண்டும். நாட்டில் உள்ள சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களை சான்றளிக்கும் ஒரு கொள்கையையும் இக்குழு உருவாக்க வேண்டும்.

□ வெளிநாட்டு நோயாளிகள் சிறந்த மருத்துவமனைகளைத் தேர்ந்தெடுக்க உதவுகின்ற நடைமுறைகளை தரப்படுத்தி கடைபிடிக்க வேண்டும்.

□ தொழிலுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, மருத்துவமனைகளும் சர்வதேச சான்றளிப்பைப் பெறலாம். இவை பாரம்பரியம் மற்றும் மருத்துவமனைசார் சிகிச்சைகளை ஒருங்கிணைந்து மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளை வழங்க வேண்டும்.

□ சிகிச்சைக்கு காத்திருப்பதற்கான நேரத்தைக் குறைத்து போட்டி மனப்பான்மையை மேம்படுத்த வேண்டும்.

□ இங்கு வரும் நோயாளிகள் தங்கள் தாய்நாட்டுடன் சிறப்பான முறையில் தடங்கல் இல்லாமல் தொடர்பு கொள்ள வசதி

□ மருத்துவச் சுற்றுலாவுக்கான நிலவியல் வரைபடத்தை உருவாக்குதல். மருத்துவச் சுற்றுலா பயணிகளுக்கு உதவுபவர்களின் நெட்வொர்க்குக்கு மதிப்பளித்தல்

□ இந்தியாவுக்கு வருகை புரியும் மருத்துவச் சுற்றுலா பயணிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் சவால்களையும் புரிந்து கொள்ளுதல்

□ பலவித கலாச்சாரங்களின் நுண் உணர்வுப் பகுதிகளை புரிந்து கொள்ளும் வகையில் சேவை அளிப்பவர்களின் துணைமருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அரசாங்கம் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

□ அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளுக்கான மொழிப் பயிற்சியில் கவனம் செலுத்துதல்

மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக சர்வதேச ரீதியில் பயணம் மேற்கொள்கின்ற இந்தப் புதிய தேவையானது "மருத்துவ/ஆரோக்கிய சுற்றுலா" என அழைக்கப்படுகின்றது. தங்களுக்கு ஏற்பட்டுள்ள சுகாதாரக்கேடு/நோய்களுக்கு சிகிச்சை எடுத்துக் கொள்வதற்காகத் தங்களது தாய்நாட்டை விட்டு வெளியே பல நாடுகளுக்கு நிறைய மக்கள்

பயணம் மேற்கொள்கின்றனர். அழகூட்டல் / தோற்றப் பொலிவு ஆகியவற்றுக்கான அறுவை சிகிச்சையும் மக்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கான முக்கியமான காரணமாக மாறி விடுகின்றது. இந்தப் பயணம் நோய் அல்லது சுகாதாரக் கேடு ஆகியவற்றின் காரணமாக மேற்கொள்ளப்படுவதில்லை என்றாலும்கூட, இப்பயணமும் மருத்துவ / ஆரோக்கிய சுற்றுலா என்ற பிரிவின் கீழ்தான் வருகின்றது.

பல்வேறு நாடுகளில் சிகிச்சைக்கான கட்டணம் வேறுபட்டு இருந்தாலும்கூட மருத்துவச் சுற்றுலா என்பது பணம் கொழிக்கும் மாபெரும் ஆதாரமையமாக இருக்கின்றது. சிகிச்சைக்கு பணம் செலுத்துவதோடு, நோய் நிலைமைக்கு ஏற்ப மருத்துவமனைக்கு வெளியே பலநாட்களுக்கு நோயாளி தங்க வேண்டிய தேவையும் இருக்கும். இதனால் ஹோட்டல் தொழிலும் உணவுப்பொருள் தொழிலும் வளம் அடைகின்றன. குணம் அடைந்த பிறகு நோயாளியும் அவருக்கு உதவியாக வந்தவர்களும் தமது நாட்டுக்குத் திரும்பும் போது பல பொருட்களை இங்கிருந்து வாங்கிச் செல்கின்றார்கள். இதுவும்கூட நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு உதவிகரமாக உள்ளது.

சுருக்கமாகக் கூறுவதென்றால், மருத்துவச் சுற்றுலா அந்நியச்செலாவணி ஈட்ட மட்டும் உதவவில்லை. பல்வேறு நாடுகளில் வசிப்பவர்களுக்கு நமது நாட்டைச் சந்தைப்படுத்துவதில் மாபெரும் ஊடகமாகவும் மருத்துவச் சுற்றுலா திகழ்கின்றது. நோயாளியும் அவருக்கு உதவியாக வந்தவர்களும் அடையும் ஒட்டுமொத்த திருப்தி பிறரை ஊக்கப்படுத்தி நம் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளச் செய்கின்றது.

முடிந்த அளவிற்கு குறைந்த செலவில் சர்வதேச தரத்தில் மருத்துவச் சேவைகளை வழங்கும்காரணத்திற்காகவே கடந்த ஆண்டுகளில் மருத்துவச் சுற்றுலா என்றால் அது இந்தியாதான் என்ற நற்பெயர் ஈட்டப்பட்டுள்ளது. சர்வதேச தரத்தில் பெரிய அளவில் பலவகையான சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை இந்தியா பெற்றுள்ளது. அதேபோன்று தலைசிறந்த தொழில்முறை மருத்துவர்களும் கூடுதலான பயிற்சி பெற்ற, கருணை உள்ளம் கொண்ட துணை ஊழியர்களும் இங்கு உள்ளனர். செலவு குறைந்த சிறந்த சிகிச்சை இங்கு கிடைக்கிறது. ஐரோப்பா அல்லது அமெரிக்காவில் ஒருவர் செய்யும் செலவில் 25%க்கும் குறைவாகத்தான் நமது நாட்டில் செலவாகும். தற்போது கார்ப்பரேட் பிரிவில் உள்ள மருத்துவமனைகளில் அவர்கள் ஒவ்வோராண்டும் சிகிச்சை அளிக்கும் மொத்த நோயாளிகளில் 15%க்கும் அதிகமான நோயாளிகள் வெளிநாட்டு நோயாளிகளாகத்தான் இருக்கிறார்கள். இந்தச் சதவிகிதத்தை எண்ணிக்கையாகப் பார்த்தால் அது ஆயிரமாக, லட்சமாக விரியும். இது பில்லியன் டாலர்கள் என்ற கணக்கில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றது.

அப்பல்லோ, ஃபோர்டிஸ், மேக்ஸ், நாராயண் ஹிருதயாலயா, செவன் ஹில்ஸ், வோக்கார்ட், மெடன்டா, பிஎல்கே, புஷ்பாஞ்சலி கிராஸ்லே, விஜயா ஹாஸ்பிட்டல்ஸ், மணிப்பால், மலாயா போன்ற பல இடங்களில் கிளைகள் கொண்ட மருத்துவமனைகள் தேசத்துக்கு அளப்பரிய சேவையைச் செய்து வருகின்றன. உலகம் முழுவதிலும் இருந்து இவை நோயாளிகளை ஈர்த்து அவர்களுக்கு உலகில் கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த மருத்துவச் சேவைகளுக்குச் சற்றும் குறைவில்லாமல் சிறந்த சேவையை அளிக்கின்றன.

இந்தியாவில் மருத்துவச் சுற்றுலா என்பது மிக வேகமாக வளர்ந்து வந்தாலும்கூட இது ஒரு ஒருங்கிணைக்கப்படாத பிரிவாகவே உள்ளது. இதில் அறிவோ பயிற்சியோ இல்லாத இடைத்தரகர்கள் ஆதிக்கம் அதிகம் உள்ளது. நோயாளியை ஒரு மனிதராக இவர்களுக்குக் கையாளத் தெரியாது. இடைத்தரகர்களில் பெரும்பான்மையோர் தரகு வியாபாரிகள் போலச் செயல்படுகிறார்கள். நோயாளிகளிடமும் அவர்களுக்கு உதவிக்கு வந்தவர்களிடமும் எந்த ஒரு சேவையிலும் பணம் வசூலிப்பதே இவர்களின் நோக்கமாக உள்ளது. இதனால் வந்த பயணிக்கு பணரீதியாகவும் மனரீதியாகவும் பாதிப்பு ஏற்படுகின்றது. மருத்துவமனைகள் மிகச்சிறந்த சிகிச்சையை வழங்கினாலும் வந்த பயணிகள் ஒட்டுமொத்த சுகாதார / சாதகமான அனுபவத்தைப் பெறுவதில்லை அல்லது வருத்தமான நினைவுகளோடு திரும்பிச் செல்கின்றார்கள்.

தொகுத்துக் கூறுவதென்றால், இந்தியாவில் மருத்துவச் சுற்றுலாவை ஒரு தொழிலாக, நன்கு வரையறுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுடன் அறிவிக்க வேண்டிய சரியான தருணம் இதுதான். வந்த பயணிகளுக்கு "வென்றெடுத்த அனுபவம்" கிடைக்க வேண்டும் என்பதே இலக்காக இருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த "உதயமாகும் புதிய தொழில்", 100 பில்லியன் டாலர்களுக்கு மேல் வருவாய் ஈட்டக் கூடிய தொழில், ஒரு முடிவுக்கு வந்துவிடும். இந்தத் தொழில் நேரடியாகவும் மறைமுகமாவும் மூலவளங்களை ஈட்டித் தருவதோடு வேலை வாய்ப்பையும் தருகின்றது. நமது தேசத்தின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் சிறந்த உபகரணமாகவும் இது விளங்குகின்றது. ●


# உள்கட்டமைப்பு வசதிகளும், சுற்றுலா வளர்ச்சியும்

– மனோஜ் தீக்ஷித்

சுற்றுலா என்பது பல்வேறு வகையான நுகர்வு அனுபவங்களைக் கொண்டதாகும். தகவல் வசதி, ஒப்பீட்டளவிலான விலைகள், போக்குவரத்து, தங்குமிட வசதி, பயணிகளை கவரும் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை சுற்றுலா பயணிகள் பயன்படுத்துவதால் இது ஏற்படுகிறது. பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழல்களும், அமைப்பு சார்ந்த அம்சங்களும் தான் சுற்றுலா அனுபவத்தை வடிவமைக்கின்றன. அந்தவகையில் ஒரு சுற்றுலாதலத்தின் இயல்பை இவை தான் தீர்மானிக்கின்றன. இந்த வகையான சுற்றுலாப் பொருட்களைத் தான் தேவை மற்றும் வினியோகத்துடன் பேராசிரியர் மர்பி ஒப்பீடு செய்தார். அதுமட்டுமின்றி, ஒரு சுற்றுலாத் தலத்தின் எந்தெந்த அம்சங்கள் சுற்றுலாப் பயணிகளுடன் உறவாடுகின்றன என்பதையும் அவர் விரிவாக விளக்கியிருந்தார்.

சிறப்பான சுற்றுலாத் தலம் என்ற அனுபவத்தை ஏற்படுத்துவதில் அதன் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியப்பங்கு உண்டு என்பதை முதன்முதலில் அங்கீகரித்தவர் சுற்றுலாத்துறை வல்லுனரான ஸ்மித் என்பவர் தான். ஒரு

**வரைபடம் 1**
**சுற்றுலாத் தல அனுபவம்**





**மனோஜ் தீக்ஷித்,** இயக்குனர், சுற்றுலா ஆய்வு நிறுவனம், லக்னோ பல்கலைக்கழகம், லக்னோ

சுற்றுலாத் தலத்தின் பெருநிலைச் சூழல் அல்லது அங்குள்ள இயல்பான அம்சங்களுடன் சேவை உட்கட்டமைப்பு இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று 1994 ஆம் ஆண்டிலேயே ஸ்மித் கூறினார். ஒரு சுற்றுலாத் தலத்தின் உட்கட்டமைப்பு வசதிகளும், தொழிட்நுட்பங்களும் எந்த அளவுக்கு உள்ளன/ எந்த அளவுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்பதும் சுற்றுலா பயணிகளின் அனுபவத்தை அதிகரிக்கும் அம்சங்கள் என்பதும் அவரது கருத்து ஆகும். அவரது இந்தக் கருத்துக்களை இத்துறையின் பிற வல்லுனர்களான ச்சோய், புகாரிஸ், க்ரோச் மற்றும் ரிச்சி ஆகியோரும் ஆதரித்தனர். ஒரு சுற்றுலாத் தலத்திற்கு வரும் பயணிகளுக்கு அந்த இடத்தைப் பற்றிய மதிப்பு அதிகரிப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகள் தான் முக்கியப்பங்கு வகிக்கின்றன என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு சுற்றுலாத் தலத்தின் சிறப்பை மற்ற சுற்றுலாத் தலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்னும் சிறப்பாக புரிந்து கொள்ள முடியும். க்ரோச் மற்றும் ரிச்சியின் முந்தைய ஆய்விலிருந்து எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சுற்றுலாத்தலங்களின் போட்டித்தன்மையை தீர்மானிக்கும் சக்திகள் தொடர்பான உலகளாவிய நிலையை காட்டுகிறது. ஒரு சுற்றுலாத் தலத்திற்கு சென்று அதன் சிறப்பம்சங்களை அனுபவிக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துவது தான் அந்த சுற்றுலாத்தலத்தை கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்கான அடிப்படையாகும் என்றும் இவர்கள் கூறியுள்ளனர்.

சுற்றுலாத்தலங்கள் தொடர்பான அனைத்து அம்சங்களும் சுற்றுலாப் பயணிகளை கவரும் அம்சங்கள், அதற்கு ஆதரவான அம்சங்கள் ஆகிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. சுற்றுலாத்

**வரைபடம் 2: சுற்றுலாத் தலங்களின் நீடித்த மற்றும் போட்டித்தன்மை**



தலங்களின் பொதுவான உள்கட்டமைப்பு சேவைகள் தான் மிகவும் முக்கியமான அம்சமாக பார்க்கப்படுகிறது. பொதுவாகவே சுற்றுலாத்துறை என்பது பொதுப்பயன்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஆதரவையே பெரிய அளவில் சார்ந்திருக்கிறது. சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், மின்சாரம், கழிவுநீர் அகற்றல், தூய்மையான குடிநீர் ஆகிய வசதிகள் இல்லாமல் சுற்றுலாத் திட்டமிடலோ அல்லது மேம்பாடோ சாத்தியமில்லை. அந்த வகையில் சுற்றுலாத் துறை மேம்பாட்டுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் முக்கியம் என்பது உறுதியாகிறது. ஒரு சுற்றுலாத் தலத்திற்கு பயணிகளை ஈர்க்க மேற்கண்ட அம்சங்கள் அடிப்படையாகின்றன. பொதுவாக அடிப்படைக் கட்டுமானப் பணிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் சேர்க்கப்படுவதில்லை. ஏனெனில் இவற்றை சுற்றுலாத் தலத்தில் மட்டுமே ஏற்படுத்த முடியும் என்பதுடன், இவை பயணிகளை கவர்வதற்கான அம்சமாக மட்டும் கருதி மேற்கொள்ளப்படுவதில்லை. சுற்றுலாத் தலத்தை இனிமையான அனுபவமாக மாற்றுவதில் கட்டமைப்பு சேவை எந்த அளவுக்கு பணியாற்றுகிறது என்பதை ஸ்மித், க்ரோச் மற்றும் ரிச்சி ஆகியோர் சிறப்பாக விளக்கியுள்ளனர்.

## இந்திய உள்கட்டமைப்பும் சுற்றுலாவும்

சுற்றுலாத் துறை உட்கட்டமைப்பு வசதி என்பது போக்குவரத்து கட்டமைப்பு, சமூகக் கட்டமைப்பு, சுற்றுச் சூழல் கட்டமைப்பு ஆகியவற்றின் விநியோகச் சங்கிலியாகும். இவை அனைத்தும் பிராந்திய அளவில் ஒன்று சேரும்போது, சுற்றுலா தலம் உருவாகிறது. இதற்கான உட்கட்டமைப்பில் கீழ்க்கண்டவை அடங்கும்.

⋆ **போக்குவரத்துக் கட்டமைப்பு:** சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில் இருந்து வரும் பயணிகளை சுற்றுலாத் தலத்திற்கு கொண்டு செல்வதற்கான வசதிகளை இது செய்து தருகிறது. விமான நிலையங்கள், பெரிய நெடுஞ்சாலைகள், தொடர் வண்டி வசதி ஆகியவை போக்குவரத்துக் கட்டமைப்பில் அடங்கும்.

⋆ **சமூகக் கட்டமைப்பு:** சுற்றுலாத் தலத்திற்கு வரும் பயணிகள் தங்குவதற்கான அறைகள், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்குடன் நடத்தப்படும் கண்காட்சிகள், நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகளுக்கான இயல் கட்டமைப்புகள் ஆகியவற்றை வழங்குவதுதான் இதன் பணியாகும். ஹோட்டல்கள், மாநாட்டு மையங்கள், விளையாட்டு அரங்கங்கள், பார்வையாளர் மாடங்கள், சுற்றுலா வசதிகள் ஆகியவை சமூகக் கட்டமைப்பில் அடங்கும்.

⋆ **சுற்றுச் சூழல் கட்டமைப்பு:** தேசியப் பூங்காக்கள், கடல்சார் பூங்காக்கள், பயணிகள் சென்று வருவதற்கான வசதிகளுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஆகியவை சுற்றுச் சூழல் கட்டமைப்பின் முக்கிய அம்சங்களாகும்.

⋆ **ஒத்துழைப்புக் கட்டமைப்பு:** சுற்றுலா தலங்களை சந்தைப்படுத்துதல் மற்றும் சுற்றுலாப் பொருட்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மண்டல, மாநில மற்றும் தேசிய சுற்றுலா அமைப்புகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புதான் ஒத்துழைப்பு கட்டமைப்பாகும்.

சுற்றுலா உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாப் பொருட்களுக்கான விநியோகச் சங்கிலி எத்தகையது என்பது குறித்து முதலாவது வரைபடத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சுற்றுலாக் கட்டமைப்புகள் பெரும்பாலும் தனியார் முதலீட்டைக் கொண்டே உருவாக்கப்படுகின்றன. சுற்றுலாத் துறையில் ஒட்டுமொத்தமாக செய்யப்படும் முதலீட்டில் 78 விழுக்காடு தனியார் துறைக்குச் சொந்தமானதாகும். சர்வதேச விமான நிலையங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான அறைகள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமான கட்டமைப்பாகும். சாலைகள், ரயில் பாதைகள், துறைமுகங்கள், ஆகியவை பொதுத்துறை கட்டமைப்பாகும். மாநாட்டு மையங்கள், தேசியப் பூங்காக்கள் போன்றவை பொதுச் சொத்துக்களாகும். சந்தைப் பின்னடைவு அல்லது சமூக மற்றும் சுற்றுச் சூழல் கொள்கை நோக்கங்களுக்காக இவை உருவாக்கப்பட்டவையாகும். சுற்றுலாத்துறை தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகள், இந்தக் கட்டமைப்பு வசதிகளின் உதவியோடு சுற்றுலாப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால் கிடைக்கும் வருவாய், ஆகியவை குறித்து (வரைபடம்–3) தெளிவாக விளக்கும்.

உலகின் சிறந்த 10 சுற்றுலாத் தலங்களில் இந்தியாவும் ஒன்று என்று உலகின் தலைசிறந்த சுற்றுலா இதழான கோண்டே நாஸ்ட் பட்டியலிட்டிருக்கிறது.




உலகில் பல்வேறு வகையான சுற்றுலா ஆட்களை வழங்கும் ஒரே நாடு இந்தியாதான். இந்தியாவில்தான் மலைகள், காடுகள், வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், சாகச சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா (ஆயுர்வேதம் மற்றும் இந்திய மருத்துவ மற்றும் பிற இந்திய மருத்துவ முறைகள்) தெய்வீகச் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா (இந்தியா மிக நீளமான கடற்கரையை கொண்டுள்ளது) உள்ளிட்ட பலவிதமான சுற்றுலாக்களை இந்தியா வழங்குகிறது.

உலகில் மற்ற நாடுகளில் உள்ள சுற்றுலாத்தலங்களைவிட, இந்திய சுற்றுலாத் தலங்கள் அதிக பன்முகத்தன்மை கொண்டவை என்று கூறப்படுகிறது. இந்தியாவின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் தனித்துவமான கலாச்சாரங்கள், திருவிழாக்கள் / ஆடை கலாச்சாரம், நினைவுச் சின்னங்கள், கல்வி முறைகள் காணப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டுகளின் தொடக்கம் வரை இந்திய சுற்றுலாத் துறை இவ்வளவு செழிப்பாக இல்லை. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி குறையத் தொடங்கியிருக்கும் போதிலும், இந்திய சுற்றுலாத் துறையின் வளர்ச்சி, உலகின் மற்ற நாடுகளைவிட வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியப் பொருளாதாரம் ஆண்டுக்கு சுமார் 5 விழுக்காடு என்ற அளவில் அதிகரித்து வருகிறது. இந்தியர்கள் செலவழிப்பதற்கான வருவாய் அதிகரிப்பு, உள்நாட்டிற்குள்ளும், வெளிநாட்டிற்கும் சுற்றுலா மேற்கொள்ளும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஆகியவற்றின் காரணமாக, இந்திய சுற்றுலாத் துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. உலக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான இந்தியாவின் திறன் எல்லையில்லாதது. இதனால், இனி வரும் காலங்களில் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான பங்களிப்பை சுற்றுலாத்துறை வழங்கும்.

சுற்றுலாத்துறை பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வரும் போதிலும், இந்தியாவிற்கு அதிக அளவு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதில், 2–வது இடத்தில் உள்ளது. 2012 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒட்டுமொத்த உற்பத்திக்கு சுற்றுலாத் துறை அளித்த பங்களிப்பு 6.6 விழுக்காடாகும். அதுமட்டுமின்றி, 3.9. கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 16 விழுக்காடு என்ற அளவில் அதிகரித்து வருகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் இது ஆண்டுக்கு 12 விழுக்காடு என்ற அளவில் தொடர்ந்து வளர்ச்சியடையும். 2013 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரத்திற்கு சுற்றுலாத்துறை ரூ.63160 கோடி வருவாயை ஈட்டித்தந்திருக்கிறது. இந்தியாவில் சுற்றுப் பயணம் மெற்கொண்டவர்களில் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 50 லட்சத்திற்கும் அதிகமாகும். உள்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 50 கோடிக்கும் அதிகமாகும்.

**இந்தியாவில் சுற்றுலாப் பயணிகள் வருகை 2001 – 2013**

| ஆண்டு | வெளிநாட்டு பயணிகள் வருகை | ஆண்டு வளர்ச்சி |
|---|---|---|
| 2001 | 2537282 | -4.2 |
| 2002 | 2384364 | -6.0 |
| 2003 | 2726214 | 14.3 |
| 2004 | 3457477 | 26.8 |
| 2005 | 3918610 | 13.3 |
| 2006 | 4447167 | 13.5 |
| 2007 | 5081504 | 14.3 |
| 2008 | 5282603 | 4.0 |
| 2009 | 5167699 | -2.2 |
| 2010 | 5775692 | 11.8 |
| 2011 | 6309222 | 9.2 |
| 2012 | 6577745 | 4.3 |
| 2013 | 6967601 | 5.9 |

ஆதாரம்: குடியேற்ற அமைப்பு, இந்தியா

## அட்டவணை – 5

| இந்தியாவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் 2012–13 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண். மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் | 2012 | | 2013 | | Growth rate | |
| | உள்நாட்டு | வெளிநாடு | உள்நாட்டு | வெளிநாடு | உள்நாட்டு | வெளிநாடு |
| 1. அந்தமான் நிக்கோபார் தீவுகள் | 238669 | 17538 | 243703 | 14742 | 2.10 | -15.94 |
| 2. ஆந்திரப்பிரதேசம் | 207217952 | 292822 | 152102150 | 223518 | -26.60 | -23.67 |
| 3. அருணாசலப்பிரதேசம் | 132243 | 5135 | 125461 | 10846 | -5.13 | 111.22 |
| 4. அசாம் | 4511407 | 17543 | 4684527 | 17638 | 3.84 | 0.54 |
| 5. பீகார் | 21447099 | 1096933 | 21588306 | 765835 | 0.66 | -30.18 |
| 6. சண்டிகர் | 924589 | 34130 | 22801031 | 936922 | 1.33 | 17.56 |
| 7. சதிஷ்கர் | 15036530 | 4172 | 22801031 | 3886 | 51.64 | -6.86 |
| 8. தாத்ரா அண்ட் நாகர் ஹவேலி | 469213 | 1234 | 481618 | 1582 | 2.64 | 28.20 |
| 9. தாமன் அண்ட் தயு | 803963 | 4607 | 819947 | 4814 | 1.99 | 4.49 |
| 10. டெல்லி | 18495139 | 2345980 | 20215187 | 2301395 | 9.30 | -1.90 |
| 11. கோவா | 2337499 | 450530 | 2629151 | 492322 | 12.48 | 9.28 |
| 12. குஜராத் | 24379023 | 174150 | 27412517 | 198773 | 12.44 | 14.14 |
| 13. ஹரியானா | 6799242 | 233002 | 7128027 | 228200 | 4.84 | -2.06 |
| 14. ஹிமாச்சலப்பிரதேசம் | 15646048 | 500284 | 14715586 | 414249 | -5.95 | -17.20 |
| 15. ஜம்மு அண்ட் காஷ்மீர் | 12427122 | 78802 | 13642402 | 60845 | 9.78 | -22.79 |
| 16. ஜார்கண்ட் | 20421016 | 31909 | 20511160 | 45995 | 0.44 | 44.14 |
| 17. கர்நாடகா | 94052729 | 595359 | 98010140 | 636378 | 4.21 | 6.89 |
| 18. கேரளா | 10076854 | 793696 | 10857811 | 858143 | 7.75 | 8.12 |
| 19. லட்சத்தீவு | 4417 | 580 | 4784 | 371 | 8.31 | -36.03 |
| 20. மத்தியப்பிரதேசம் | 53197209 | 275930 | 63110709 | 280333 | 18.64 | 1.60 |
| 21. மஹாராஷ்டிரா | 74816051 | 2651889 | 82700556 | 4156343 | 10.54 | 56.73 |
| 22. மணிப்பூர் | 134541 | 749 | 140673 | 1908 | 4.56 | 154.74 |
| 23. மேகலயா | 680254 | 5313 | 691269 | 6773 | 1.62 | 27.48 |
| 24. மிசோராம் | 64249 | 744 | 63377 | 800 | -1.36 | 7.53 |
| 25. நாகாலாந்து | 35915 | 2489 | 35638 | 3304 | -0.77 | 32.74 |
| 26. ஒதிஷா | 9052871 | 64719 | 9800135 | 66675 | 8.25 | 3.02 |
| 27. புதுச்சேரி | 981714 | 52931 | 1000277 | 42624 | 1.89 | -19.47 |
| 28. பஞ்சாப் | 19056143 | 143805 | 21340888 | 204074 | 11.99 | 41.91 |
| 29. ராஜஸ்தான் | 28611831 | 1451370 | 30298150 | 1437162 | 5.89 | -0.98 |
| 30. சிக்கிம் | 558538 | 26489 | 576749 | 31698 | 3.26 | 19.66 |
| 31. தமிழ்நாடு | 184136840 | 3561740 | 244232487 | 3990490 | 32.64 | 12.04 |
| 32. திரிபுரா | 361786 | 7840 | 359586 | 11853 | -0.61 | 51.19 |
| 33. உத்தரப்பிரதேசம் | 168381276 | 1994495 | 226531091 | 2054420 | 34.53 | 3.00 |
| 34. உத்தரகாண்ட் | 26827329 | 124555 | 19941128 | 97683 | -25.67 | -21.57 |
| 35. மேற்கு வங்கம் | 22730205 | 1219610 | 25547300 | 1245230 | 12.39 | 2.10 |
| Total | 1045047536 | 18263074 | 1145280443 | 19951026 | 9.59 | 9.24 |

*ஆதாரம்: சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு, சுற்றுலாப் புள்ளி விவரங்கள் – 2013.*

இந்திய சுற்றுலாத் துறையின் வளர்ச்சிப் போக்கைப் பார்க்கும்போது, வெளிநாட்டுச் சுற்றலாப் பயணிகளை மட்டும் நம்பி இந்திய சுற்றுலாத்துறை இல்லை என்பது தெளிவாகத் தெரியும். ஒருவேளை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மட்டும் இந்தியா நம்பியிருந்தால், உலக அளவில் பொருளாதார பின்னடைவு ஏற்பட்டபோது, இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்திருக்கும். ஆனால், இந்திய சுற்றுலாத்துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம், உள்நாட்டில் சுற்றுலாச்செல்லும் இந்தியப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருவதுதான். இந்தியாவில் திருவிழாக்களும் கொண்டாட்டங்களும் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளாகும். வடமாநிலங்களில் நடைபெறும் கும்பமேளா, தென் மாநிலங்களில் நடைபெறும் ஓணம் திருநாள், மஹாமஸ்டாகாபிஷேகம் போன்ற திருவிழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிக

எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை இந்தியாவுக்கு அழைத்து வருகின்றன.

வரைபடம் – 5 அட்டவணையைப் பார்க்கும்போது, இந்தியாவின் பல மாநிலங்களில் இயற்கை அழகு நிரம்பி வழியும்போதிலும், அம்மாநிலங்களில் சுற்றுலாப் பயணிகளை குறிப்பிடத்தக்க அளவில் கவர்ந்திழுக்க தவறி விட்டன என்பதை தெளிவாக கொள்ளமுடியும். குறிப்பாக வடகிழக்கு மாநிலங்கள், லட்சத் தீவு, சத்தீஷ்கர் போன்ற மாநிலங்களில் இயற்கை அழகு நிரம்பி வழியும் போதிலும் அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவதில்லை. அங்கு சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் போதிய அளவு இல்லை என்பதுதான்.

உலக போக்குவரத்து மற்றும் சுற்றுலா கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில், இந்தியப் பொருளாதாரத்திற்கு சுற்றுலாத் துறையின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டில் 7.3 விழுக்காடாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வளர்ச்சி பொதுப் பொருளாதார வளர்ச்சியின் அளவான 2.5 விழுக்காட்டைவிட அதிகமாகும்.

டெலோயிட் டச் என்ற அமைப்பு நடத்திய ஆய்வின்படி, 2017 ஆம் ஆண்டில் இந்திய சுற்றுலாத் துறை ஆண்டுக்கு 4,280 கோடி அமெரிக்க டாலர் வருவாய் ஈட்டும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சி மந்தமாகி வருவது, தேவை குறைந்து வருவது, பாதுகாப்பு குறித்த அச்சங்கள் என ஏராளமான குறைகள் இருக்கும்போதுதான், அதை எதிர்த்துப் போராடி சுற்றுலாத் துறை வளர்ச்சியடைவது வழக்கமான ஒன்றாகி வருகிறது. உலகப் பொருளாதார நெருக்கடி தீவிரம் அடைந்து வரும் போதிலும், இந்தியாவின் பொருளாதாரம் தொடர்ந்து வலுவான நிலையிலேயே உள்ளது. இன்றைய நிலையிலும் உலகில் வருமான பொருளாதார வளர்ச்சியை எட்டும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது என்று டெலோயிட் டச் நிறுவனத்தின் ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவுக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், சுற்றுலாத் துறையில் அங்கமாக உள்ள ஹோட்டல்கள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், விமான நிறுவனங்கள், கப்பல் நிறுவனங்கள் ஆகியவற்றின் வருமானம் வேகமாக அதிகரித்து வருகிறது. ஹோட்டல்களில் உள்ள அறைகள், அதிக அளவில் நிரம்புகின்றன. இதனால் சராசரி அறை வருமானத்தின் அளவும் அதிகரித்து வருகிறது.

இவ்வாறாக, சுற்றுலாத் துறை எதிர்காலத்திலும் சிறப்பாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்டகால முதலீடு செய்ய விரும்புவோருக்கு சுற்றுலாத்துறை சிறப்பான முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகிறது. இந்தியாவில் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அறிந்துள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு ஹோட்டல் நிறுவனங்கள், அதைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் இந்தியாவில் முதலீடு செய்ய விரும்புகின்றன. இந்தியாவில் மருத்துவச் சுற்றுலா இனி வரும் காலங்களில் அதிவேக வளர்ச்சியை எதிர்கொள்ளும். ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டித் தரக்கூடிய இத்துறைக்கு முதல்தர வசதிகளை செய்துதரவேண்டும் என்பதில் மத்திய அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

**வரைபடம் – 6**

**உலகின் சிறந்த 15 சுற்றுலா நாடுகளில் இருந்து இந்தியா வந்த பயணிகள் குறித்த விவரங்கள் – 2013 (எண்கள் மில்லியனிலும், அமெரிக்க பொருளாதாரத்தின் சதவீத கணக்கிலும் தரப்பட்டுள்ளன.**

| வ. எண். | சொந்த நாடு | எண்ணிக்கை & சதவீதம் |
|---|---|---|
| 1. | அமெரிக்கா | 1.085(15.58%) |
| 2. | இங்கிலாந்து | 0.809(11.62%) |
| 3. | வங்கதேசம் | 0.525 (7.53%) |
| 4. | இலங்கை | 0.262 (3.77%) |
| 5. | ரஷ்யா | 0.259 (3.72%) |
| 6. | கனடா | 0.255 (3.66%) |
| 7. | ஜெர்மனி | 0.252 (3.62%) |
| 8. | பிரான்ஸ் | 0.248 (3.56%) |
| 9. | மலேசியா | 0.243 (3.48%) |
| 10. | ஜப்பான் | 0.220 (3.16%) |
| 11. | ஆஸ்திரேலியா | 0.219 (3.14%) |
| 12. | சீனா | 0.175 (2.51%) |
| 13. | சிங்கப்பூர் | 0.143 (2.05%) |
| 14. | தாய்லாந்து | 0.117 (1.68%) |
| 15. | நேபாளம் | 0.114 (1.63%) |
| 16. | முதல் 10 நாடுகளின் பங்கு | 4.160(59.70%) |
| 17. | முதல் 15 நாடுகளின் பங்கு | 4.927(70.72%) |

*ஆதாரம்: சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு, சுற்றுலாப் புள்ளி விவரங்கள் – 2013.*

**வரைபடம் – 7**

**சுற்றுலாத் துறை வருவாய் (மில்லியன் ரூபாயில்) 1972–2005**

| இந்திய ரூபாயில் கட்டணம் | | | அமெரிக்க டாலரில் கட்டணம் | |
|---|---|---|---|---|
| ஆண்டு | ரூ.கோடியில் | முந்தைய ஆண்டின் வளர்ச்சி விகிதம் | அமெரிக்க டாலர் மில்லியனில் | முந்தைய ஆண்டின் வளர்ச்சி விகிதம் |
| 2009 | 63700 | 4.5 | 11136 | -3.7 |
| 2010 | 64889 | 20.8 | 14193 | 27.6 |
| 2011 | 77591 | 19.6 | 16564 | 16.7 |
| 2012 | 94487 | 21.8 | 17737 | 7.1 |
| 2013 | 107671 | 14.0 | 18445 | 4.0 |

*ஆதாரம்: சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு, சந்தை ஆராய்ச்சிப்பிரிவு சுற்றுலாப் புள்ளி விவரங்கள் – 2013.*

இந்தியாவில் பெரிய சுற்றுலாத் தலங்களில் போக்குவரத்து, தங்குமிட வசதி, பொழுது போக்கு வசதி ஆகியவைதான் முக்கிய அம்சங்களாகும். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் இந்த வசதிகளைத் தருவதில் ஏற்படும் போட்டித்தன்மை தான். அவை மதிப்பு மிகுந்த சொத்துக்களா? அல்லது சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு முட்டுக்கட்டைப் போடும் அம்சங்களா என்பதைத் தீர்மானிக்கும். சுற்றுலாப் பயணிகளை கவரும் அம்சங்களை ஒட்டுமொத்தமாக மேம்படுத்துவதற்காக இந்தியாவில் தற்போதுள்ள கட்டமைப்புகளின் தற்போதைய நிலை தொடர்பான புள்ளி விவரங்களின் அடிப்படையில் விரிவான திட்டம் தயாரிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

**வரைபடம் – 8**

இந்தியாவில் ஹோட்டல்கள் மற்றும் ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கை

**(இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டவை)**

2013ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் அறைகளின் இருப்பு

| ஹோட்டல்களின் வகைகள் | ஹோட்டல்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஒரு ஸ்டார் | 82 | 2086 |
| 2 ஸ்டார் | 121 | 3154 |
| 3 ஸ்டார் | 637 | 26617 |
| 4 ஸ்டார் | 111 | 7738 |
| 5 ஸ்டார் | 85 | 10128 |
| 5 ஸ்டார் டீலக்ஸ் | 106 | 21820 |
| அபார்ட்மெண்ட் ஹோட்டல்கள் | 3 | 249 |
| காலப்பகிர்வு ரிசார்ட்ஸ் | 1 | 31 |
| ஹெரிடேஜ் ஹோட்டல்கள் | 46 | 1322 |
| பி & பி விடுதிகள் | 31 | 158 |
| விருந்தினர் மாளிகை | 4 | 61 |
| வகைப்படுத்தப்படாதவை | 30 | 1989 |

*ஆதாரம்: சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு, சந்தை ஆராய்ச்சிப்பிரிவு சுற்றுலாப் புள்ளி விவரங்கள் – 2013.*

இந்தியாவில் சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சி, அத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கு மிகப் பெரிய அளவில் வளர்ச்சி வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வளர்ச்சியை எவ்வாறு தக்க வைத்துக்கொள்வது என்பது குறித்துதான் அனைவரும் சிந்திக்கிறார்கள். உண்மையில் சுற்றுலாத் துறை மூலம் கிடைக்கும் வருவாய் மிக மிக அதிகமாகும். இதன் மதிப்பு ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி டாலராக இருக்கும். இந்தியா உலகின் அதிக அந்நிய செலாவணி ஈட்டும் நாடாக இருப்பதற்கும், அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இதுதான் காரணமாகும்.

வரைபடம் – 9 இந்திய சாலைகள்

| | |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் / விரைவுச்சாலைகள் | 65,590 km |
| மாநில நெடுஞ்சாலைகள் | 1,28,000 km |
| பெரிய சாலைகள் மற்றும் பிற மாவட்டசாலைகள் | 4,70,000 km |
| ஊரக சாலைகள் | 26,50,000 km |

*ஆதாரம்:* http://www.ibef.org/industry/roads-india.aspx

சாலைகளின் அகலத்தைப் பொறுத்து, சாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக ஒருவழிச் சாலை என்பது 3.7 மீட்டர் அகலம் கொண்டிருக்க வேண்டும். பலவழிச் சாலைகளில் ஒவ்வொரு பாதையும் 3.5 மீட்டர் அகலம் இருக்க வேண்டும். இந்தியாவில் தேசிய நெடுஞ்சாலைகளில் விவரம் வருமாறு;

| | |
|---|---|
| ஒற்றைவழிச் சாலைகள் | – 32% |
| இரட்டைவழிச் சாலைகள் | – 56% |
| நான்கு வழி / ஆறுவழி / | |
| எட்டு வழிச் சாலைகள் | – 12% |

*ஆதாரம்:* http://www.ibef.org/industry/roads-india.aspx

இந்தியாவில் நல்ல சாலைகள் இல்லை என்பது தெளிவாக அறியப்பட்ட விஷயமாகும். இந்தியச் சாலைகளில் 12 விழுக்காடு மட்டுமே உலகத்தரம் கொண்டவையாகும். சர்வதேச சுற்றுலாப் பயணிகளை கவருவதற்கு இந்த அளவுக்கு மட்டும் தரமான சாலைகள் போதுமானதல்ல. ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்கள் அனைவருமே சுற்றுலாப் பயன்பாட்டிற்காக சாலைகளில் பயணம் செய்வதைத்தான் விரும்புகிறார்கள். ஆனால், இந்தியாவில் சாலை மூலமாக சுற்றுலாச் செல்ல வேண்டுமானால், அதற்காக ஒன்றுக்கு பலமுறை யோசிக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமின்றி, கட்டுப்பாடின்றி வாகனங்களை ஓட்டும் வழக்கம் இன்னும் அதிக ஆபத்தை ஏற்படுத்துகிறது. உலக அளவில் அதிக சாலை விபத்துகள் நடக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.

### வரைபடம் – 10
### இந்தியாவில் தொடர்வண்டிப் பாதைகள்

| பாதை | வழித்தட கி.மீ. | இருப்புப் பாதை கி.மீ. | மொத்த இருப்புப் பாதை கி.மீ. |
|---|---|---|---|
| அகலபாதை (1.676 mm) | 49,820 | 71,015 | 93,386 |
| மீட்டர் கேஜ் பாதை (1.000 mm) | 10,621 | 11,487 | 13,412 |
| குறுகிய பாதை (762 mm and 610 mm) | 2,886 | 2,888 | 3,198 |

ஆதாரம்: http://www.ibef.org/industry/roads-india.aspx

கிலோமீட்டர் அடிப்படையில் பார்த்தால், 28 விழுக்காடு அளவுக்கும், தொடர்வண்டிப் பாதை நீளத்தின் அடிப்படையில் பார்த்தால் 39% அளவுக்கும், ஒட்டுமொத்த தொடர்வண்டிப் பாதை நீளத்தின் அடிப்படையில் பார்த்தால் 41% அளவுக்கும் மின்வசதி செய்யப்பட்டிருக்கிறது.

**உள்நாட்டு நீர்வழிப் பாதை**

இந்தியாவில் 14,500 கிலோமீட்டர் நீளத்திற்கு பயன்படுத்தத்தக்க நீர்வழிப் பாதைகள் உள்ளன. இவற்றில் ஆறுகள், கால்வாய்கள், போக் வாட்டர்கள், ஓடைகள் ஆகியவை அடங்கும். 2006–07 ஆம் ஆண்டில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் மூலம் 5 கோடி டன் சரக்குகள் கையாளப்பட்டன. ஆனால் தற்போது நீர்வழி சரக்குப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. கங்கா – பாகிரதி – ஹுக்ளி ஆறுகள் – பிரம்மபுத்திரா, பாரத் ஆறு, கோவா மாநில ஆறுகள், கேரளாவில் உள்ள போக் வாட்டர்கள், மும்பையில் உள்ள உள்நாட்டு நீர்வழிப் பாதைகள், கோதாவரி – கிருஷ்ணா ஆற்றுப் படுகைகள் ஆகியவற்றில் மட்டுமே நீர்வழி சரக்குப் போக்குவரத்து அனுமதிக்கப்படுகிறது. அமைப்பு சாரா நீர்வழிப் போக்குவரத்துத் துறையில் பெருமளவிலான சரக்குப் போக்குவரத்தும், பயணிகள் போக்குவரத்தும் நடைபெறும்போது அதன் மதிப்பை துல்லியமாக கணக்கிடப்பட முடியவில்லை.

**இந்தியாவில் விமான நிலையங்கள்**

இந்தியாவில் மொத்தம் 46 விமான நிலையங்கள் உள்ளன. அவற்றின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. எனினும், இந்த விமான நிலையங்கள் நாட்டின் மற்ற பகுதிகளை இணைக்கும் வகையில் இல்லை. இதனால், இந்த விமான நிலையங்கள் வழியாக பயணம் செய்வது என்பது, தொடர்வண்டிப் பயணத்தைவிட அதிக காலம் பிடிப்பதாக உள்ளது. உதாரணமாக, ஒருவர் ஆக்ராவில் இருந்து வாரணாசிக்கோ, அல்லது ஜெய்ப்பூருக்கோ விமானம் மூலம் பயணம் செய்ய வேண்டுமானால், அவர் ஆக்ராவில் இருந்து தில்லி சென்று அங்கிருந்துதான் மற்றொரு விமானம் பிடித்துச் செல்லவேண்டியிருக்கும்.

இந்தியாவில் ஏற்பட்ட சுற்றுலாப் புரட்சியை இந்தியா பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றால், எதிர்காலத்தில் அதற்கான பழியை அதுதான் ஏற்கவேண்டியிருக்கும். ஒருசில நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அதிக வளர்ச்சியை எதிர்கொண்டு வரும் இத்துறையின் பயன்களை இந்தியா பெறமுடியும். விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், தரைவழிப் போக்குவரத்து, தங்கும் இடங்கள், பயிற்சி பெற்ற மனித வளம், எளிதான ஷாப்பிங், ஸ்டைலான பயணம், மருத்துவச் சுற்றுலா, கல்விச் சுற்றுலா, நீடிக்கத்தக்க வளர்ச்சி விதிகள் என சுற்றுலாத்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் உட்கட்டமைப்பு வசதி பற்றாக்குறையாகத்தான் உள்ளது.

சுற்றுலாத் துறை, வரி, தனியார் துறைக்கு ஊக்கம், அந்நிய முதலீட்டிற்கு ஒற்றைச் சாரளர முறையில் அனுமதி வழங்குவதற்கான விதிமுறைகள், நீண்டகால கடன் மற்றும் குறைந்த அளவு வட்டி ஆகியவற்றின் அடிப்படையில் கடன் வழங்குதல், சுற்றுலாத் துறை வளர்ச்சிக்குத் தேவையான நிலங்களை வழங்குதல், அந்நிய முதலீட்டின் நடமாட்டத்தை அதிகரித்தல், அதிகாரிகளின் குறுக்கீடு இல்லாமல் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு முடிவு எடுத்தல், சிவப்பு நாடா முறையில் இருந்து விடுதலை அளித்தல், ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் சுற்றுலாத் துறை கட்டமைப்புகளை அதிகரிக்க முடியும். இதுதான் மிகச் சிறந்த அணுகுமுறையாக இருக்கும். உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இதுதான் சிறந்த வழியாகும்.

ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான சுற்றுலா வளையங்களை அடையாளம் காணுதல், எந்தெந்த சுற்றுலாத் தலங்களில் பயணிகளின் வளர்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தல் ஆகியவற்றை அடையாளம் காண்பது மிகவும் சிக்கலாகும். அனைத்து இடங்களிலும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தலாம் என்றால், அதற்கு நிதி தடையாக உள்ளது. எனவே கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில்

இந்தியாவில் உள்ள விமான நிலையங்களின் பட்டியல் பின்வருமாறு

| வ. எண். | யூனியன் பிரதேசம் அல்லது மாநிலம் | விமான நிலையத்தின் பெயர் | சேவை பெறும் மாநகரம் | வகை |
|---|---|---|---|---|
| 1. | அந்தமான் அண்ட் நிக்கோபார் தீவுகள் | வீர்சாவர்க்கர் சர்வதேச விமான நிலையம் | விசாகப்பட்டிணம் | சுங்கம் |
| 2. | ஆந்திர பிரதேசம் | விசாகப்பட்டிணம் விமான நிலையம் | விசாகப்பட்டிணம் | சுங்கம் |
| 3. | அசாம் | லோக் பிரிய கோபிநாத் பர்தோலாய் சர்வதேச விமான நிலையம் | கவுகாத்தி | சுங்கம் |
| 4. | பீகார் | ஜெயப்பிரகாஷ் நாராயண் சர்வதேச விமான நிலையம் | பாட்னா | சுங்கம் |
| 5. | | கயா விமான நிலையம் | கயா | சுங்கம் |
| 6. | சத்திஷ்கர் | சுவாமி விவேகானந்தர் விமான நிலையம் | ராய்ப்பூர் | உள்நாட்டுச் சேவை |
| 7. | டாமன் டையூ | டையூ விமான நிலையம் | டையூ | உள்நாட்டுச் சேவை |
| 8. | டெல்லி | இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் | புதுதில்லி | சர்வதேச சேவை |
| 9. | கோவா | டபோலிம் விமான நிலையம் | மாநிலம் முழுவதும் | சர்வதேச சேவை |
| 10. | குஜராத் | சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச விமான நிலையம் | அகமதாபாத் | சர்வதேச சேவை |
| 11. | ஜம்மு காஷ்மீர் | ஸ்ரீ நகர் விமான நிலையம் | ஸ்ரீ நகர் சுங்கம் | சர்வதேச சேவை |
| 12. | | ஜம்மு விமான நிலையம் | ஜம்மு | உள்நாட்டுச் சேவை |
| 13. | ஜார்கண்ட் | பிர்சா முண்டா விமான நிலையம் | ராஞ்சி | உள்நாட்டுச் சேவை |
| 14. | கர்நாடகா | மங்களூர் விமான நிலையம் | மங்களூர் | சுங்கம் |
| 15. | | பெங்களூர் சர்வதேச விமான நிலையம் | பெங்களூர் | சர்வதேச சேவை |
| 16. | கேரளா | திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் | திருவனந்தபுரம் | சர்வதேச சேவை |
| 17. | | கொச்சி சர்வதேச விமான நிலையம் | கொச்சி | சர்வதேச சேவை |
| 18. | | கோழிக்கோடு சர்வதேச விமான நிலையம் | கோழிக்கோடு | சர்வதேச சேவை |
| 19. | லட்சத்தீவுகள் | அகாட்டி விமான இறங்குதளம் | அகாட்டி | உள்நாட்டுச் சேவை |
| 20. | மத்தியபிரதேசம் | ராஜா போஜ் விமான நிலையம் | போபால் | சுங்கம் |
| 21. | | தேவி அகில்யபாய் ஹோல்கர் விமான நிலையம் | இந்தூர் | உள்நாட்டுச் சேவை |
| 22. | மராட்டியம் | சத்திரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையம் | மும்பை | சர்வதேச சேவை |
| 23. | | புனே விமான நிலையம் | புனே | சுங்கம் |
| 24. | | நியூ புனே சர்வதேச விமான நிலையம் | புனே | விரைவில் சேவை |
| 25. | | ஷீரடி விமான நிலையம் | ஷீரடி | விரைவில் சேவை |
| 26. | | டாக்டர் பாபா சாஹிப் அம்பேத்கர் சர்வதேச விமான நிலையம் | நாக்பூர் | சர்வதேச சேவை |
| 27. | மணிப்பூர் | துளிஹால் விமான நிலையம் | இம்பால் | உள்நாட்டுச் சேவை |
| 28. | மேகாலயா | ஷில்லாங் விமான நிலையம் | ஷில்லாங் | உள்நாட்டுச் சேவை |
| 29. | மிசோராம் | லெங்புய் விமான நிலையம் | அய்ஸாவ்ல் | உள்நாட்டுச் சேவை |
| 30. | நாகலாந்து | திமாப்பூர் விமான நிலையம் | திமாப்பூர் | உள்நாட்டுச் சேவை |
| 31. | ஒதிஷா | பட்நாயக் விமான நிலையம் | புவனேஸ்வர் | உள்நாட்டுச் சேவை |
| 32. | பாண்டிச்சேரி | பாண்டிச்சேரி விமான நிலையம் | பாண்டிச்சேரி | உள்நாட்டுச் சேவை |
| 33. | பஞ்சாப் | ஸ்ரீ குரு ராம் தாஸ் ஜி சர்வதேச விமான நிலையம் | அமிர்சர் | சர்வதேசவிமானநிலையம் |
| 34. | ராஜஸ்தான் | சர்வதேச விமான நிலையம் | ஜெய்ப்பூர் | சுங்கம் |
| 35. | சிக்கிம் | பக்யாங் விமான நிலையம் | பக்யாங் | விரைவில் சேவை |
| 36. | தமிழ்நாடு | சென்னை சர்வதேச விமான நிலையம் | சென்னை | சர்வதேச சேவை |
| 37. | | திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையம் | திருச்சிராப்பள்ளி | சுங்கம் |
| 38. | தெலுங்கானா | ராஜீவ்காந்தி சர்வதேச விமான நிலையம் | ஹைதராபாத் | சர்வதேச சேவை |
| 39. | திரிபுரா | அகர்தலா விமான நிலையம் | அகர்தலா | உள்நாட்டுச் சேவை |
| 40. | உத்தரகண்ட் | ஜாலி கிராண்ட் விமான நிலையம் | டேராடூன் | உள்நாட்டுச் சேவை |
| 41. | உத்தரபிரதேசம் | தாஜ் சர்வதேச விமான நிலையம் | கிரேட்டர் நொய்டா | விரைவில் சேவை |
| 42. | | வாரணாசி விமான நிலையம் | வாரணாசி | சுங்கம் |
| 43. | | அமாசி விமான நிலையம் | லக்னோ | சுங்கம் |
| 44. | | ஆக்ரா விமானப்படை நிலையம் | ஆக்ரா | உள்நாட்டுச் சேவை |
| 45. | மேற்கு வங்காளம் | நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சர்வதேச விமான நிலையம் | கொல்கத்தா | சர்வதேச சேவை |
| 46. | | பக்டோக்ரா விமான நிலையம் | சிலிகுரி | சுங்கம் |

ஒன்றுக்கு பலமுறை யோசித்து செயல்படுத்தும் அணுகுமுறையைத்தான் கடைபிடிக்க வேண்டியிருக்கிறது.

இந்தியாவின் உட்கட்டமைப்புப் பிரச்சனைகள், சுற்றுலா காண கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் திறன் இந்தியாவுக்கு இல்லை என்பதில் இருந்து மட்டும் ஏற்படவில்லை என்பதை, தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ரயில்வே திட்டம், விமான நிலையங்களை மேம்படுத்துவதற்கான அதிக செலவு பிடிக்கும் திட்டங்கள் ஆகியவற்றில் இருந்தே அறியலாம். இதைவிட கொடுமையான விஷயம் என்னவென்றால், இத்தகைய கட்டமைப்பு வசதி திட்டங்களின் பல உருவங்கள் அடையாளம்

காண முடியாத அளவில்தான் உள்ளன. இந்தப் பிரச்சனை கட்டுப்படுத்த முடியாத அளவுக்குச்செல்வதற்கு முன் இதற்கு தீர்வு காணப்படவேண்டும்.

இந்தியாவில் சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், பிரம்மிக்கத்தக்க இந்தியா என்ற பெயரில் மிகப்பெரிய அளவில் பிரச்சாரம் செய்யப்படும்போதிலும், இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அதன் பரப்பளவுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகும். திருப்தியடையும் அளவுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை நாம் மேம்படுத்துவதுதான் இதற்கான தீர்வாகும். இதை செய்யாவிட்டால், இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 லட்சம் முதல் 6 லட்சம் வரை என்ற அளவிலேயே இருக்கும். உலக அளவிலான சுற்றுலா கட்டமைப்புகளை உருவாக்கும் நோக்குடன், அனைத்து மாநிலங்களுக்கும் சரியான விதிமுறைகளை மத்திய சுற்றுலா அமைச்சகம் வகுத்துத் தந்திருக்கிறது என்பது மனதிற்கு இதமான செய்தியாகும். இது சரியான திசையில் எடுக்கப்பட்ட சரியான நடவடிக்கை என்பதை இந்த விதிமுறைகளே நமக்கு சுட்டிக்காட்டும்.

விதிமுறைகளின் விவரம் வருமாறு:

1. மாநில/யூனியன் பிரதேச நிர்வாகங்கள் தங்களால் முடிந்தவரை பராமரிப்பு மற்றும் நில அமைப்பு கட்டட கலைஞர்கள் உள்ளிட்ட கலைஞர்களை விதிமுறைகளைப் பின்பற்றி நியமிக்க வேண்டும். இதற்கான நிதியை தங்களது சொந்த ஆதாரத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. சுற்றுலா தொடர்பான திட்டங்களுக்கு ஒற்றை சாளர முறையில் அனுமதி அளிப்பதற்கு மாநில / யூனியன் பிரதேச நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. பெரிய சுற்றுலா திட்டங்கள் / சுற்றுலா வலையங்கள் ஆகியவற்றின் கீழ் புதிய திட்டங்களை வகுக்கும்போது அவை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கத்தின் கீழ் கொண்டுவரப்படுவதற்கு மாநில / யூனியன் பிரதேச அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நகர்ப்புற அடிப்படை வசதிகள்**

1. அனைவரும் பயன்படுத்தும் வகையில் எல்லா பருவ காலங்களுக்கும் தாக்குப்பிடிக்கும் வகையிலான சாலை கட்டமைப்புகளையும் தடையற்ற சூழலுடன் கூடிய சாலை தொடர் வசதிகளையும் சுற்றுலா தலங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் மாநிலஅரசுகள் ஏற்படுத்த வேண்டும்.

2. கீழ்கண்ட அம்சங்களில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- வடிவமைப்பு விதிகள், அழகியல், கட்டுமானப் பொருட்களின் தேர்வு, பேப்ரிகேஷன், தாக்குப் பிடிக்கும் தன்மை, பராமரிப்பு.
- வழிகாட்டி அடையாளப் பலகைகள், முக்கிய இடங்களில் போதுமான அளவில் அமைக்கப்பட வேண்டும்.
- குப்பைத் தொட்டிகள் / மறு சுழற்சி செய்யும் தொட்டிகள்.
- சுற்றுலாதலம் தொடர்பான தகவல்கள் / வழியை கண்டுபிடிக்கும் வசதிகள்
- தகவல் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்கான மையங்கள்.
- பொதுக் கழிப்பறைகள்
- வாகனம் நிறுத்துமிடங்கள், இரு சக்கர ஊர்திகள் மற்றும் மாற்று திறனாளிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. உயர்தரமான சுற்றுலா வரைப்படங்கள், வழிகாட்டி கையேடுகள், குறுந்தகடுகள், சுவரொட்டிகள், சுற்றுலா காலண்டர்கள், மடித்து எடுத்துச் செல்லக்கூடிய வரைபடங்கள் ஆகியவற்றை இலவசமாகவும், அதிகளவிலும் வழங்குவதற்கு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி இந்தியாவின் வலிமையான, பன்முகத்தன்மை கொண்ட கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஓவியங்களை அதிகளவில் வரைய வேண்டும்.

4. சுற்றுலா திட்டங்களை செயல்படுத்து வதற்கான நிலம் அதற்கான அமைப்பிடம் இருப்பதை விரிவான திட்ட அறிக்கை உறுதிச் செய்ய வேண்டும். சுற்றுலா அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு திட்டம் நிலம் இல்லை என்ற ஒரு காரணத்தால் ஓராண்டிற்கும் மேலாக செயல்படுத்தப்படாமல் இருக்கும் பட்சத்தில் அத்திட்டம் ரத்துச் செய்யப்படும். அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி திரும்பப் பெறப்படும். அல்லது வேறு திட்டங்களுக்கான நிதியில் கழித்துக் கொள்ளப்படும்.

சுற்றுலாத் தலங்கள் / சுற்றுலா வலையங்களுக்கு செல்லும் சாலைகளில் ஒவ்வொரு 50 கி.மீ. தொலைவிற்கும் ஓரிடத்தில் பயணிகளுக்கான வசதிகள் செய்யப்பட வேண்டும்.

6. சாலைகளில் வைக்கப்படும் வழிகாட்டி அடையாளப் பலகைகள் முடிந்தவரை சர்வதேச விதிமுறைகளுக்கு ஏற்றவாறு அமைய வேண்டும்.

7. சுற்றுலாக் கொள்கையின் ஓர் அங்கமாக தற்போதுள்ள சுற்றுலா வசதிகளை தங்களது சொந்த ஆதாரத்திலிருந்து வலுப்படுத்தி மேம்படுத்த மாநில / யூனியன் பிரதேச அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. மாநில அரசுகள் பொதுப் பயன்பாட்டிற்கான அமைப்புச் சார்ந்த கட்டமைப்பை சரியான முகமை மூலம் அமைக்க முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகள் விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

பாரம்பரிய சின்னங்களை காத்தல் மற்றும் வழிகாட்டி அடையாள பலகைகளை அமைத்தல்:

1. மாநில/ யூனியன் பிரதேச நிர்வாகங்கள் தங்களால் முடிந்தவரை ஆராய்ச்சி, ஆவணப்படுத்துதல், மதிப்பைக் காட்டுதல், சேத மதிப்பீடு, பராமரிப்பு, மேலாண்மை, சுற்றுலாக் கட்டமைப்பு, பாதிப்பு மதிப்பீடு, கள விளக்கம், பாதுகாப்பு மற்றும் முதலுதவி, அனைத்து நிலைகளிலும் அணுகுதல், கழிவு மேலாண்மை, சமுதாயக் கலந்தாய்வுகள், சமுதாய செயல்பாட்டு உத்தி, வணிகத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான பராமரிப்புச் செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

2. பொதுவாக பாரம்பரிய இடங்கள்/ சின்னங்கள் குறிப்பாக, உலக பாரம்பரிய சின்னங்கள் ஆகியவற்றுக்கான சர்வதேச விதிகள் மற்றும் விதிமுறைகள்/ யுனெஸ்கோ விதிகள் ஆகியவற்றை மாநில/ யூனியன் பிரதேச நிர்வாகங்கள் கடைபிடிக்க வேண்டும்.

3. வழிகாட்டி அடையாள பலகைகளை அமைக்கும் போது இந்திய தேசிய நெடுஞ் சாலைகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்.

4. மாநில/ யூனியன் பிரதேச நிர்வாகங்களின் சுற்றுலா மேம்பாடு மற்றும் பராமரிப்புத் திட்டங்கள் வலிமையான நிதி மற்றும் பராமரிப்புத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

5. சுற்றுலாத் தலங்கள் மற்றும் திட்டங்களைச் சரியான நேரத்தில் செயல்படுத்தி முடித்தல் மற்றும் அதற்கு பிந்தைய பராமரிப்புக்காக சரியான அமைப்பை மாநில/ யூனியன் பிரதேச நிர்வாகங்கள் ஏற்படுத்த வேண்டும்.

6. இயக்கம் மற்றும் பராமரிப்புக்கு அரசு மற்றும் தனியார்துறை கூட்டு முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

### தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற உள்ளூர் கட்டுமானக் கலை

1. சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்தும் போது தட்பவெப்பநிலைக்கு ஏற்றவகையில் உள்ளூர் கட்டிடக்கலையை பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள், தொழில்நுட்பம், வடிவமைப்புக் கொள்கை ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும்.

3. சுற்றுலாத் தலங்களின் அமைவிடம், சுற்றுச்சூழல், சூழ்நிலை ஆகியவை குறித்து சுற்றுலாத்துறை பணியாளர்கள் அனைவருக்கும் விளக்கி திறன் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கான நிதி மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் சேவை வழங்குவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

### நகர்ப்புற நில அமைப்பு

1. சுற்றுலாத் தலங்களை அமைக்கும்போது முழுக்க முழுக்க உள்ளூரில் கிடைக்கும் பொருட்களை மட்டுமே பயன்படுத்தி நில அமைப்பில் உள்ளூர் சூழல் தெரிவது போல பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. தாவரங்களை வளர்க்கும்போது உள்ளூர் தாவரங்கள்/ இயற்கைத் தாவரங்களை வளர்ப்பது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

3. கட்டுமானங்களை மேற்கொள்ளும் போது பாரம்பரிய முறையை பயன்படுத்துவது சரியானதாக இருக்குமானால் அதற்கான வாய்ப்புகள் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

4. கீழ்க்கண்டவற்றை உறுதி செய்ய மாநில/ யூனியன் பிரதேச அரசுகள் முயற்சி செய்ய வேண்டும்.

- நில அமைப்பை சீரமைக்கும்போது குறைந்தபட்ச பணிகளை மட்டும் மேற்கொண்டு

இருக்கும் நிலத்தை அப்படியே வைத்துக் கொள்ள முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும்.

● மழை நீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் மட்டத்தை புதுப்பித்தல் மற்றும் கழிவுகள் வெளியேறாமல் தடுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

● எல்லைக்கான வேலி அமைக்கும்போது அழகியல் பாதுகாப்பு, செலவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு பொருத்தமான வடிவமைப்பை உருவாக்க வேண்டும். இதற்கான செலவு அத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 50 விழுக்காட்டிற்கும் மிகக் கூடாது.

● சூரிய ஒளி விளக்குகள் மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தியை பயன்படுத்துவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

● நிலத்தின் மேல் பதிப்பதற்கு கடினமான பொருள்களை குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட வேண்டும்.

5. மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் கீழ்கண்டவற்றை செய்ய வேண்டும்.

● தண்ணீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் நீர் ஊற்றுகள் மற்றும் நீரை வீணடிக்கும் அமைப்புகளை அமைக்கக் கூடாது.

● மின் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் அதிக ஒளி தரும் விளக்குகளை அமைக்கக் கூடாது அதே நேரத்தில் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாத வகையில் விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்.

● ஒரு சுற்றுலா திட்டத்தை தொடங்குவதற்கு முன்பாக போதிய அளவு நீர் ஆதாரம், பாசன அமைப்பு ஆகியவை இருப்பதை உறுதி வேண்டும்.

● எளிதில் அணுகக்கூடிய கட்டமைப்புகளை ஊக்குவிக்க வேண்டும்.

● திட்டங்களில் நீடித்த தன்மையை உறுதி செய்வதற்காக ஐந்தாண்டுகளுக்கான பராமரிப்பு திட்டம் மற்றும் அதற்கான வரவு செலவு திட்டத்தை தயாரித்து தாக்கல் செய்ய வேண்டும். இதற்கான நிதி மாநில / யூனியன் பிரதேசங்களிடமிருந்தோ அல்லது அரசு மற்றும் தனியார்த் துறை கூட்டு முயற்சியின் மூலமாகவோ பெறப்பட வேண்டும்.

உணவு கலை நிறுவனங்கள் மற்றும் ஹோட்டல் மேலாண்மை நிறுவனங்கள் மேம்படுத்தப்பட்ட நிலங்களில்தான் அமைக்கப்பட வேண்டும் :

1. எதிர்கால விரிவாக்கத்திற்கு தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் அங்கு கலையரங்கங்கள் கட்டப்பட கூடாது.

2. ஒட்டுமொத்த சுற்றுலா வளாகத்திற்குமான மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட வேண்டும்.

3. அத்தியாவசிய தேவையுள்ள பகுதிகளில் மட்டும்தான் நில சீரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

இந்திய சுற்றுலாத்துறை மிகப் பெரிய வளர்ச்சியை அடையும் நிலையில் உள்ளது. அதே நேரத்தில் இந்தியாவுக்காக எந்த நாடும் காத்திருக்காது என்பதை இந்தியா உணர வேண்டும். சுற்றுலாதான் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது என்பதால் வளரும் நாடுகளுக்கிடையே சுற்றுலா வருவாய் ஈட்டுவது கடும்போட்டி நிலவி வருகிறது. சீனா, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகளை ஈர்க்க வேண்டும் என்ற நோக்குடன் சுற்றுலா கட்டமைப்புகளுக்காக பல்லாயிரக்கணக்கான கோடிகளை செலவழிக்கின்றன இதன் மூலம் தங்கள் முயற்சியில் அவை வெற்றி பெறுகின்றன. அதே நேரத்தில் இந்தியா சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்துவது தனது முன்உரிமைகளை நிர்ணயித்துக்கொண்டிருக்கிறது. சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு இதுபோன்ற நிபந்தனைகள் ஒத்து வராது. மக்களை கவரும் வகையில் ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. பிரதமர் நரேந்திர மோடி குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தபோது கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஏராளமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயன்களை நம்மால் இப்போது பார்க்க முடிகிறது.

● நிறைவாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் சுற்றுலா பயணிகளை கவருவதற்காக ஏராளமான அம்சங்கள் செய்யப்பட்டாலும் சுற்றுலா தலத்தை எளிதில் அணுகுவதற்கான வசதிகள் செய்யப்படாவிட்டால் அவை அனைத்தும் பயனற்றதாகிவிடுகிறது. இதை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தெளிவாகவும், சிறப்பாகவும் புரிந்து கொள்ள வேண்டும். சாலைகளும், தொடர் வண்டி பாதைகளும், சுற்றுலா பயணிகளுக்கு மட்டும் சேவை செய்யப் போவதில்லை. இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால் இந்திய பொருளாதாரமும் பெருமளவில் வளர்ச்சி அடையும் என்பது குறிப்பிடத்தக்கது ●

# மின்னணு இந்தியா முன்முயற்சி தொடக்கம்

இந்தியாவில் தொழில் பயிற்சி வழங்குதலின் சந்தை செயல்பாடுகளை மேம்படுத்த உதவும் மின்னணு தளம் அண்மையில் தொடங்கப்பட்டது. இந்திய வேலைவாய்ப்புத்துறையின் கீழ் இயங்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தலைமை இயக்குனர் அலுவலகம் உருவாக்கியுள்ள https://ncvtmis.dget.in என்ற முகவரி கொண்ட இணையதளம் அரசுத் திட்டங்கள் மக்களிடம் எப்படி கொண்டு செல்லப்படுகின்றன என்பதையும், அவை எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் கண்காணிக்க பெருமளவில் உதவும்.

இந்த முன்முயற்சியின் முதல் கட்டமாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை செயல்படுத்தும் கைவினைஞர்கள் பயிற்சித் திட்டம், ஊக்கப் பயிற்சித் திட்டம் உள்ளிட்ட திட்டங்களுக்கு மின்னணு நிர்வாக வசதியை வழங்குகிறது. கைவினைஞர் பயிற்சித் திட்டம், தொழில் பயிற்சித் திட்டம், கைவினை ஆசிரியர் பயிற்சித் திட்டம் ஆகியவற்றை வழங்கும் கல்வி நிறுவனங்கள், அவை எந்த உயர்கல்வி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என்ற விவரங்கள், மொத்த இடங்கள், அவற்றின் பயன்பாடு குறித்த விவரங்கள் உள்ளிட்ட தகவல்களை பொதுமக்களுக்கு இந்த இணையதளம் வழங்குகிறது. இந்தியா முழுவதும் உள்ள 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் (ஐ.டி.ஐ), அவை எந்த தொழில்நுட்ப கல்வி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளன என்பது உள்ளிட்ட விவரங்களையும் இந்த இணைய தளத்தில் தேடிக் கண்டுபிடிக்க முடியும். 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நாடு முழுவதும் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் (ஐ.டி.ஐ) சேர்ந்துள்ள சுமார் 10 லட்சம் மாணவர்களின் விவரங்களும் இந்த இணையதளத்தில் உள்ளன. தொழில்பயிற்சி பெறுபவர்கள் தங்களின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு, மதிப்பெண் சான்றிதழ்கள், மின்னணு சான்றிதழ்கள் ஆகியவற்றை இந்த இணையதளத்திலிருந்து அவர்களாகவே பதிவிறக்கம் செய்து அச்சிட்டுக் கொள்ளலாம். இதனால் இந்த சான்றிதழ்களை வழங்குவதில் உள்ள சிரமங்களும், கால விரயமும் தவிர்க்கப்படுகிறது.

தொழில் பயிற்சி பெற்றவர்கள் பணிக்கு செல்லும் போது அவர்கள் தரும் மின்னணு சான்றிதழ்களை அவர்களை வேலைக்கு சேர்த்துக் கொள்ளும் நிறுவனங்கள் இந்த இணையதளத்திலேயே சரிபார்த்துக் கொள்ள முடியும். தொழிற்பயிற்சி பெற்ற 20 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அச்சிட்ட சான்றிதழ்களையும் இந்த இணையதளம் மூலம் சரிபார்க்க முடியும். அதேபோல், ஊக்கப்பயிற்சித் திட்டத்தின் அனைத்து நடைமுறைகளையும் இந்த இணையதளம் மின்மயமாக்கி வைத்திருக்கிறது. நிறுவனங்களை பதிவு செய்தல், விண்ணப்பங்களை தாக்கல் செய்தல் மற்றும் ஒப்புதல் அளித்தல், நிறுவனங்களுக்கு கட்டணம் செலுத்துதல், பயிற்சி முடித்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் ஆகியவற்றை நேரடி பயன் மாற்றத் திட்டத்தின் மூலம் இந்த இணையதளம் மேற்கொள்கிறது.

இந்த இணையதளம் தொடங்கப்பட்ட போது, அதை எவ்வாறு கையாளுவது, அடிக்கடி எழும் ஐயம் தொடர்பான வினாக்கள் மற்றும் விடைகள், பயிற்சிக்கான கால அட்டவணை உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய கையேடுகளை வழங்குவதற்காக அனைத்து இந்திய தொழில் பயிற்சி நிலையங்களிலும் உதவி மையம் ஏற்படுத்தப்பட்டது.

மத்திய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி அமைச்சகத்தின் சார்பில் வழங்கப்படும் பயிற்சி, வேலைவாய்ப்பு, தொழில் பழகுனர் சேவைகள் ஆகியவற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும், இந்த சேவைகளை சிறப்பான சந்தைத் தகவல்கள் மற்றும் ஆலோசனை மூலம் பெறுவதற்கு வசதியாகவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சியுடன் தொடர்புடைய அனைவரும் வணிக செயல்பாடுகளை ஆன்லைனில் செய்து கொள்ளும் வகையிலும் இந்த இணையதளம்

அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தியா முழுவதும் உள்ள 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு கால அளவு கொண்ட 134 வகையான படிப்புகளில் ஒவ்வொரு ஆண்டும் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சேருகின்றனர். இத்தகைய சூழலில் இப்படி ஒரு இணையதளம் இல்லாமல் அனைத்து நிலையங்களும் கொள்கை மற்றும் இணைப்பு வசதியை செய்திருப்பதை உறுதி செய்வதும், குறித்த காலத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுவதும் சாத்தியமல்ல.

அதுமட்டுமின்றி, அதிகபட்ச வெளிப் படைத்தன்மை, முடிவெடுப்பதற்கு வசதியாக பல்வேறு ஆய்வுகளை நடத்தி அதன் முடிவுகளை வழங்குதல், குடிமக்கள் சேவைக்கு மேம்படுத்தப்பட்ட இணைப்பு வசதியை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் தொழிற்பயிற்சியின் நிர்வாகத்தை மேம்படுத்தவும் இந்த இணையதளம் வகைசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் இப்போது கட்டமைக்கப்பட்டு வருகிறது. அதில், கைவினை ஆசிரியர் பயிற்சி அளிக்கும் மத்திய அரசின் நிதி உதவி பெறும் தொழில் நிறுவனங்கள், தொழில் பழகுனர் சேவைகள் ஆகியவற்றுக்கான பயிற்சித் தொகுதிகளை வழங்க வகை செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, பல்வேறு பயிற்சிப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை சாதாரண முறையிலிருந்து ஆன்லைன் முறையில் மாற்றுதல், இத்தகைய படிப்புகளை கற்பிக்கும் ஆசிரியர்களின் தகவல் தொகுப்பை வழங்குதல் ஆகியவையும் இதன் நோக்கமாகும். பயிற்சி சேவைகளை வேலைவாய்ப்பு மற்றும் ஆதாருடன் இணைப்பதற்காக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தேசிய வேலைவாய்ப்பு சேவை இணையதளத்துடன் இந்த பயிற்சி நிறுவனங்களை ஒருங்கிணைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த இணையதளம் தொடங்கப்பட்ட போது, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள தொழிற்பயிற்சி மையங்களில் வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்து NCVT அமைப்பிடமிருந்து சான்றிதழுக்காக காத்திருந்த மாணவர்கள் அனைவருக்கும் மின்னணு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த வகையில் நிலுவையிலிருந்த 1.6 லட்சம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரகதி : தன்முனைப்பு நிர்வாகத்திற்கான தளம்.

அரசின் திட்டங்களை குறித்த காலத்தில் செயல்படுத்துதல் மற்றும் தன்முனைப்பு நிர்வாகத்தை உறுதி செய்வதற்கான பல்வகை பயன்பாடும் மாதிரியும் கொண்ட பிரகதி ( PRAGATI - Pro-Active Governance And Timely Implementation. ) என்ற திட்டத்தை பாரத பிரதமர் அண்மையில் தொடங்கிவைத்தார். பிரகதி என்பது தனித்துவமான, ஊடாடும் தன்மை கொண்ட தளம் ஆகும். சாதாரண மக்களின் குறைகளை அறிந்து நிறைவேற்றுதல் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் மற்றும் முக்கியமான இயக்கங்களின் செயல்பாடுகளை கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த தளம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிரகதி தளம் மூன்று நவீன தொழிற்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது. மின்னணு தகவல் மேலாண்மை, காணொலி கலந்தாய்வு, ஜியோ ஸ்பேஷியல் தொழில்நுட்பம் ஆகியவைதான் இந்த தளத்தால் ஒருங்கிணைக்கப்படும் மூன்று தொழிற்நுட்பங்கள் ஆகும். மத்திய அரசின் செயலாளர்களையும் மாநில அரசுகளின் தலைமை செயலாளர்களையும் இந்த தளம் ஒருங்கிணைப்பதால் கூட்டாட்சி தத்துவத்திற்கு வழிகாட்டும் தனித்துவமான அம்சமாகவும் இது திகழும். இந்த பிரகதி தளத்தின் உதவியுடன் எந்தவொரு பிரச்சினை குறித்தும் சம்பந்தப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரிகளுடன் பிரதமரால் உரையாட முடியும். திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை உடனடியாக கேட்டுப் பெறுவதுடன் திட்ட செயலாக்கம் எந்த நிலையில் உள்ளது என்பது குறித்த கள நிலைமை காட்சிகளையும் பிரதமரால் பார்க்க முடியும். இத்தகைய முயற்சி இந்தியாவில் ஏற்படுத்தப்படவில்லை. இது மின் ஆளுமை மற்றும் நல்லாட்சிக்கான புதுமையான திட்டமாகும்.

**பிரகதி பயன்பாட்டின் முக்கிய அம்சங்கள் வருமாறு:**

♦ பிரதமர் அலுவலகம், மத்திய அரசுத் துறை செயலாளர்கள், மாநில அரசுகளின் தலைமை

செயலாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் வகையிலான மூன்றடுக்கு தளம் ஆகும். இந்தத் தளத்தின் உதவியுடன் மாதத்திற்கு ஒருமுறை மத்திய அரசுத் துறை செயலாளர்கள் மற்றும் மாநில தலைமைச் செயலாளர்களுடன் பிரதமர் காண்ணொளி கலந்தாய்வு மூலம் உரையாடுவார். அப்போது திட்டங்களின் செயலாக்கம் குறித்த தகவல்களை அறிவதுடன் காட்சிகளையும் பார்ப்பார்.

★ இந்திய வரலாற்றில் முதன் முறையாக செயல்படுத்தப்படும் இத் திட்டம் கடந்த 25.3.2015 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு தொடங்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன் கிழமை பிரகதி நாள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நாளில் மாலை 3.30 மணிக்கு பிரதமர் மற்ற அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவார். பிரதமரிடம் தெரிவிக்கப்படவேண்டிய திட்டங்கள் குறித்த விவரங்கள் பொதுமக்கள் குறைகள் தீர்ப்பு, செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் நிலுவையிலுள்ள திட்டங்கள் ஆகியவை தொடர்பாக ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ள தகவல் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும்.

★பொதுமக்கள் குறைதீர்ப்புக்கான CPGRAMS இயக்கத்தில் தகவல் தளம், திட்ட கண்காணிப்புக் குழுவின் தகவல் தளம், மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தின் தகவல் தளம் ஆகியவற்றின் உதவியுடன் இத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் அந்த தகவல் தளங்கள் வலுப்படுத்தப்படுவதுடன் மறு உருவாக்கம் செய்யவும் வகை செய்யும்.

மேற்கண்ட மூன்று அம்சங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான கட்டமைப்பையும் பிரகதி வழங்கும்.

★ சாதாரண மக்கள் அல்லது மாநில அரசுகளின் உயர் பொறுப்பில் உள்ளவர்கள் மற்றும் / அல்லது பொதுத் திட்டங்களை செயல்படுத்துபவர்களிடமிருந்து பிரதமர் அலுவலகத்திற்கு வரும் பல்வேறு தகவல் தொடர்புகளையும் இது கருத்தில் கொள்ளும். பிரகதி நாளன்று எந்தெந்த விஷயங்கள் குறித்து பிரதமரும் அதிகாரிகளும் கலந்தாய்வு நடத்த இருக்கிறார்களோ அந்த விஷயங்கள் குறித்த தகவல்கள் ஒரு வாரத்திற்கு முன்பாக அதாவது மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இந்த தகவல்கள் பிரகதி தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் அதை மத்திய அரசின் செயலாளர்களும், மாநில அரசின் தலைமை செயலாளர்களும் உள் நுழைந்து பார்க்க முடியும். இதற்காக பயன்பாட்டாளர் பெயர், கடவுச் சொல் ஆகியவை அனைத்து மத்திய அரசு செயலாளர்களுக்கும் அனைத்து மாநில அரசுகளின் தலைமை செயலாளர்களுக்கும் உருவாக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுத் துறை செயலாளர்களும், மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களும், தங்கள் துறை/மாநிலம் சார்ந்த பிரச்சனைகளை இந்த தளத்தில் பார்க்க முடியும். பிரகதி நாளுக்காக பதிவேற்றம் செய்யப்படும் தகவல்களை இந்த அதிகாரிகள் பார்த்த பின்னர் அதுகுறித்த தங்களது கருத்துக்களை மூன்று நாட்களில் அதாவது அடுத்த திங்கட்கிழமைக்குள் பிரகதி தளத்தில் தெரிவிக்க வேண்டும். இந்த தகவல்களை அதற்கு அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை பிரதமர் அலுவலக அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்வார்கள். பிரகதி நாளன்று ஏதேனும் ஒரு திட்டம் குறித்து பிரதமர் கலந்தாய்வு செய்யும்பொழுது அத்திட்டம் மற்றும் அதுதொடர்பான கூடுதல் தகவல்கள், அத் திட்டத்தின் செயலாக்கம் குறித்த காட்சிகள் ஆகியவை பிரதமரின் திரையில் தெரியும் வகையில் இந்த தளம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

பிரகதி தளத்தை தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் பிரதமர் அலுவலகத்தில் உள்ள தகவல் தொழிற்நுட்ப குழுவினரே வடிவ மைத்திருக்கின்றனர். பிரகதி தளத்தின் பெயரில் இருப்பதைப் போலவே அரசின் திட்டங்களை குறித்த நேரத்தில் செயல்படுத்துதல் தன் முனைப்பு நிர்வாக கலாச்சாரத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த தளம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அரசின் திட்ட செயல்பாடுகள் குறித்து அதில் சம்பந்தப்பட்டவர்கள் உடனுக்குடன் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் வகையில் மின்னணு வெளிப்படைத்தன்மை, மின்னணு பொறுப்புடைமை ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான வலிமையான திட்டம் இதுவாகும். ●